REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN

2022 மார்ச் 17 வியாழக்கிழமை

1932 - 2022


வரு. 90 இல. 64 | Thursday 17, March, 2022 | 16 பக்கங்கள் | 30/-

**மின் துண்டிப்பு தொடர்வதை தவிர்க்க முடியாது**

## மின் உபகரண பாவனையை கட்டுப்படுத்த வேண்டுகோள்

**புத்தாக்க மின் உற்பத்தி அதிகார சபை கோரல்**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டில் மின் துண்டிப்பு நடைமுறைப்படுத்தப்படும் இக்காலகட்டத்தில், மின் உபகரணங்கள் பாவனையை முடிந்தளவு கட்டுப்படுத்துமாறு 06

**பொருட்களின் விலைவாசி உயர்வு, Gas தட்டுப்பாடு, மின்வெட்டு;**

# பொதுமக்கள் அனுபவிக்கும் சிக்கலான வாழ்க்கை முறைக்கு விரைவில் தீர்வு

**கடுமையான முடிவுகளை எடுத்து கண்காணிக்கவும் நடவடிக்கை**



**நாட்டு மக்களுக்கான விசேட உரையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவிப்பு**

உங்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் விலைவாசி உயர்வை நான் நன்கு அறிவேன். எரிவாயு தட்டுப்பாடு அதே போன்று, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் மின்வெட்டு போன்ற பிரச்சினைகளை நான் நன்கு அறிவேன். கடந்த இரண்டு மாதங்களாக பொது மக்கள் அனுபவித்த பல இன்னல்கள்

**நெருக்கடிமிக்க காலத்தில் அரசியல் பேதமின்றி இணைந்து செயற்படவும் அழைப்பு**

குறித்தும் நான் நன்றாக உணர்ந்துள்ளேன். அதற்காக எங்களால் செய்ய முடிந்த அனைத்தையும் நாம் செய்தாலும், எங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களினால் இந்த நிலைமை தொடரும் என்பதை நான் அறிவேன்.

நான் செய்யும் செயல்களுக்கு நான் பொறுப்பேற்கிறேன். பொதுமக்கள் அனுபவிக்கும் ஒரு சில சிக்கலான வாழ்க்கை முறைகளுக்கு தீர்வு காண இன்று நான் கடுமையான முடிவுகளை எடுக்க உறுதிபூண்டுள்ளேன். அதற்கு உதவ தேசிய 07

## லிட்ரோ, லாப்ஸ் எரிவாயு விநியோகம் இடைநிறுத்தம்

**கையிருப்பு இல்லாமை காரணமாம்**



**லோரன்ஸ் செல்வநாயகம்**

கப்பலில் ஏற்றப்பட்ட சமையல் எரிவாயுக்கள் விடுவிக்கப்படாததால், சமையல் எரிவாயு விநியோக நடவடிக்கைகளை இடை நிறுத்தியுள்ளதாக லிட்ரோ காஸ் 06

## ஜனாதிபதியுடனான சந்திப்பிற்கு கூட்டமைப்புக்கு விரைவில் அழைப்பு



**சந்திப்பதில் எவ்வித சிக்கலும் இல்லை**

தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்திப்பதில் எவ்வித சிக்கலும் இல்லை என்றும் அதற்கான வாய்ப்புக்கள் நிச்சயம் வழங்கப்படும் என்றும் அமைச்சரவை இணை பேச்சாளர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பு, காணி விடுவிப்பு 06

## மருந்துப் பொருட்களின் விலைகளில் மாற்றம்

**புதிய வர்த்தமானி வெளியானது**



அறுபது வகையான மருந்துகளின் விலையில் திருத்தம் மேற்கொண்டு அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இது,(15 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளது. 06

## நிதி அமைச்சரை சிலர் விமர்சிப்பது எதற்கு?



**காரணத்தை வெளியிட்ட காரியவசம்**

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பக்கூடிய ஒரே நபர் பசில் ராஜபக்ஷ மட்டுமே என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஒரு விசைப்படகு முன்னோக்கி நகரும் போது, அது தடுக்கப்படுவதாக தெரிவித்த அவர், 06

## இந்தியா எப்போதும் இலங்கையுடன் இருப்பதாக பிரதமர் மோடி தெரிவிப்பு

**- பொருளாதார ஒத்துழைப்பு குறித்து விசேட அவதானம்**



நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை நேற்று (16) டில்லியில் சந்தித்தார். இதன்போது, இந்தியா எப்போதும் இலங்கையுடன் இருப்பதாக இந்தியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இந்த கலந்துரையாடலின் போது பொருளாதார ஒத்துழைப்பு குறித்து விசேட அவதானம் செலுத்தப்பட்டதாக புது டில்லியில் உள்ள இலங்கை தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், விவசாயம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, டிஜிட்டல் மயமாக்கல், சுற்றுலா மற்றும் மீன்வளம் குறித்து இதன்போது கருத்துகள் பரிமாறப்பட்டதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை இயற்கை விவசாயத்தில் கவனம் செலுத்துவது மற்றும் அத்துறைக்கு இந்தியாவில் இருந்து கிடைக்கும் தொழில்நுட்ப உதவிகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்தியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அந்நாட்டு வெளியுறவுத்துறை செயலாளர் ஸ்ரீ ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லாவையும் சந்தித்து உரையாடினார். இந்த சந்திப்பு புதுடில்லியில் இடம்பெற்றுள்ளது. இந்த சந்திப்பில் இந்தியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட, நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல 06

## மனித உரிமைகள் பேரவையில் உண்மைகளை முன்வைத்து விளக்கம்

**செப்டெம்பர் அமர்வையும் எதிர்கொள்ள தயார்**



மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத்தொடரை இலங்கை வெற்றிகரமாக எதிர் கொண்டதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்தார்.


இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து தம்மால் உண்மைகளை முன்வைக்கவும் அது குறித்து விளக்கமளிக்கவும் முடிந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

யுத்தத்தின் போது மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாகக் கூறுவதற்கு பதிலாக, உள்நாட்டு அரசியல் விவகாரங்கள் குறித்தே ஆணையாளரின் அறிக்கை கவனம் செலுத்தியது 06

**மனித உரிமை செயற்பாட்டாளரான**

## இலங்கை தமிழ் பெண் மீது அமெரிக்காவில் துப்பாக்கி சூடு!

**மயிரிழையில் தப்பியதாக தகவல்**



மனித உரிமை செயற்பாட்டாளரும், ஒருங்கிணைந்த சர்வதேச பெண்கள் அமைப்பின் நிறுவனருமான இலங்கை தமிழ்ப் பெண் ராஜி பற்றிசன் பயணித்த வாகனம் மீது, அமெரிக்காவில் இனந்தெரியாத துப்பாக்கிதாரிகளால் 06



## நாட்டில் எவ்வித மருந்துக்கும் தட்டுப்பாடு என்பது கிடையாது

**அரசியலுக்காக சிலர் பொய்யான பரப்புரை** 03



## கட்டண அதிகரிப்பு போதாது: பஸ் உரிமையாளர்கள் விசனம்

**சேவையை தொடர்வது குறித்து மூன்று தினங்களில் அறிவிப்போம்!**

**அகில இலங்கை பஸ் உரிமையாளர் சங்கம் தெரிவிப்பு** 03

## வெளிநாடு செல்ல சம்பிக்கவுக்கு அனுமதி

**தடை தற்காலிக நீக்கம்**



ராஜகிரிய பகுதியில் 2016 ஆம் ஆண்டு விபத்தை ஏற்படுத்தி சாட்சியங்களை மறைத்த குற்றச்சாட்டில் குற்றம் 06

**நீண்ட இடைவெளியின் பின்னர்**

## ஒரேயொரு கொரோனா மரணம் பதிவு

நாட்டில் நீண்ட இடைவெளியின் பின்னர் நாளொன்றில் ஒரேயொரு கொவிட் மரணம் மாத்திரம் பதிவாகியுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் 06

**ஒரு இலட்சம் ரூபா நிதி வேண்டாம்**

## அமைச்சரவை தீர்மானத்தை ஏற்க மறுக்கும் அமைப்பு


காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களின் வாழ்வை மீளக் கட்டியெழுப்ப, வழங்கப்படும் தலா ஒரு இலட்சம் ரூபாவை பெற்றுக்கொள்ளப் போவதில்லை என வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோர்களின் உறவுகளது சங்கம் தெரிவித்துள்ளது.

அமைச்சரவையின் தீர்மானத்துக்கு ஏற்ப இந்நிதிகள் ஒவ்வொரு குடும்பங்களுக்கும் வழங்கப்படவுள்ளன. இந் நிதியையே, இவர்களது குடும்பங்கள் 06

## ரஷ்யாவிடமிருந்து இலங்கைக்கு குறைந்த விலையில் எரிபொருள்

**பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அரச உயர் மட்ட வட்டாரங்கள் தெரிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**





தமது நட்புநாடுகளான இலங்கைக்கும் இந்தியாவுக்கும் குறைந்த விலையில் மசகு எண்ணெயை வழங்குவதற்கு ரஷ்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அரசாங்கத்தின் உயர் மட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

அதற்கான பேச்சுவார்த்தைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கைக்கு மசகு எண்ணெயை 06

**இலங்கை சிறைகளில் வைக்கப்பட்டுள்ள தமது**

## மீனவர்களை விடுவிக்க கோரி தமிழக மீனவர்கள் ஆர்ப்பாட்டம்!

மீன்பிடித் தொழில் ஒழுங்குமுறைகளை மீறி இரட்டை மடி முறையில் மீன்பிடித்து வரும் தமிழகம் நாகபட்டினம் மற்றும் காரைக்கால் மாவட்ட விசைப்படகுகளை பறிமுதல் செய்ய வேண்டுமென இந்தியா தொண்டியில் உள்ள நாட்டுப்படகு மீனவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

தமிழகம் இராமநாதபுரம் தொண்டியில் உள்ள நாட்டுப் படகு மீனவர்கள் நேற்று கடலில் இறங்கி இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நம்புதாளை, தொண்டி உட்பட பல்வேறு பகுதிகளிலிருந்து 300 க்கும் மேற்பட்ட நாட்டுப்படகு 06

**விக்கல் வீராச்சாமி**



அண்ணே, குடும்பத்தோட கொழும்புக்கு போனீங்களோ, கோல்பேசில நிக்கிற மாதிரி படம் பாத்தேன், சொன்னா நானும் வந்திருப்பேனே....

நீங்க வேற, மனுசி பிள்ளைகள் கொழும்பு பாக்க ஆசைப்பட்டுதுகள், காசும் தந்து வாங்கோ எண்டு கூப்பிட்டாங்க, சான்ச விடக் கூடாது பாருங்கோ...!!!

**90 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்**






கொழும்பு, தெமட்டகொடையில் அமைந்துள்ள மாளிகாவத்தை புகையிரத தளம் மற்றும் புகையிரத திணைக்களத்தின் பிரதான பொறியியல் உப திணைக்களத்திற்கு நேற்று திடீர் விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவற்றின் நாளாந்த செயற்பாடுகளை அவதானித்ததுடன், தற்போதுள்ள பிரச்சினைகள் மற்றும் தேவைகள் தொடர்பில் ஊழியர்களிடம் தகவல்களை கேட்டறிந்தார். போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகமவும் இதில் கலந்து கொண்டார்.









ஐக்கிய மக்கள் சக்தி கொழும்பில் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் பிடிக்கப்பட்ட படங்களையும் ஆர்ப்பாட்டத்தின் போது வீசப்பட்ட குப்பைகளையும் பிளாஸ்ரிக் போத்தல்களையும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட இளைஞர் குழுவினர் அகற்றுவதையும் படங்களில் காணலாம்.

## தினகரன் பத்திரிகையின் 90வது வருட நிகழ்வின் போது...









தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2022 மார்ச் 17 வியாழக்கிழமை

தினகரன் THINAKARAN

தொழுகை நேரம்
சுபஹ் - 05.03
லுஹர் - 12.21
அஸர் - 03.35
மஃரிப் - 06.22
இஷா - 07.31

இன்றைய சுபதினம்
பிலவ வருடம் பங்குனி 03
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



சர்வதேசத்தின் முன்னிலையில்;

# தாய்நாட்டைக் காட்டிக்கொடுக்க எமது அரசு ஒருபோதும் தயாரில்லை

## அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சர்வதேசத்தின் முன்னிலையில் தாய்நாட்டைக் காட்டிக்கொடுப்பதற்கு தற்போதைய அரசாங்கம் ஒருபோதும் தயாரில்லை என அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஐ. நா. மனித உரிமை பேரவையில் 45 சர்வதேச நாடுகளில் 32 நாடுகள் இலங்கைக்கு ஆதரவு வழங்கியுள்ளதாகவும் எனினும் நாட்டைக் காட்டிக்கொடுப்பதற்கு தற்போதைய அரசாங்கம் இணங்குமானால், ஏனைய நாடுகளினதும் ஆதரவை பெற்றுக்கொண்டிருக்க முடியும் என்றும் தெரிவித்துள்ள அவர் தற்போதைய அரசாங்கம் நாட்டைக்காட்டிக்கொடுக்கத் தயாரில்லை என்றும் தெரிவித்துள்ளார்.



ஐ. நா. மனித உரிமை பேரவையின் 49வது கூட்டத்தொடரில் கலந்துகொண்டு நாடு திரும்பியுள்ள அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் நேற்றைய தினம் தகவல் திணைக்களத்தில் விஷேட செய்தியாளர் மாநாடொன்றை நடத்தினார். இங்கு ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் அங்கு தொடர்ந்தும் விளக்கமளிக்கையில்:

ஐ. நா. மனித உரிமை ஆணையாளர் இலங்கை தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் சில விடயங்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவை. அந்த அறிக்கையில் பெரும்பாலானவை இலங்கையின் உள்நாட்டு அரசியல் செயற்பாடு சம்பந்தமானவை. நாட்டின் உள்நாட்டு அரசியல் நடவடிக்கைகள் சம்பந்தமாக ஐக்கிய நாடுகளின் நடவடிக்கைகளில் எந்தவிதத்திலும் சம்பந்தப்படாதது,

அதுமட்டுமன்றி மூன்றில் இரண்டு பெரும்பான்மை மக்களின் மூலம் உருவாக்கப்பட்டுள்ள அரசாங்கத்தின் மீது, கைநீட்டுவதற்கு சர்வதேச சமூகத்துக்கு எந்தவித உரிமையும் கிடையாது. இந்த நாட்டு உள்ளக விடயங்கள் தொடர்பில் தொடர்ச்சியாக விமர்சனங்களை முன்வைத்து அறிக்கைகள் வெளியிடப்படுமானால் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. அவ்வாறானால் எமது நாடு மட்டுமன்றி ஏனைய நாடுகளின் உள்ளக விவகாரங்களிலும் கைநீட்ட வேண்டும். இலங்கை தொடர்பில் மட்டும் அவ்வாறு செயற்படுவதானது சிக்கலுக்குரிய விடயமாகும்.

இத்தகைய செயற்பாடானது ஐ. நா அமைப்பு தொடர்பில் சர்வதேச சமூகம் கொண்டுள்ள நம்பிக்கைக்கு அபகீர்த்தியையே ஏற்படுத்தும்.

06

# தவக்கால சிந்தனை



## புண்ணியம் சேர்ப்போம்

90 வயதுடைய ஒரு மனிதர் 'காசு எவ்வளவு வேண்டுமென்றாலும் தருகிறேன் அதை வைத்து என்னை எப்படியாவது விண்ணகத்திற்கு அனுப்ப முடியுமா?' என்று கேட்டார். வயதான மனிதர்களிடம் நாம் உரையாடினால், பலருடைய வருத்தம் என்னவாக இருக்கும் என்றால் நான் விண்ணகம் செல்வேனா? மாட்டேனா? என்பதே.

இளமையோடு வளமையோடு இருக்கும் போது மனம்போன போக்கில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். கடவுளைப் பற்றியோ, இறை வார்த்தைகளைப் பற்றியோ, திருச்சபை சட்டங்களைப் பற்றியோ நாம் கவலைக் கொள்வது கிடையாது. எனினும் முதுமை அடையும் போதே நாம் விண்ணகத்தைப் பற்றி யோசிக்கிறோம்.

கடந்த கால வாழ்வு என்னுடைய விண்ணக பயணத்தை தடை செய்யும் என்பதை உணர்கிறோம். இதுவே பலருடைய மனக்குமுறல்களுக்கு மன பாரத்திற்கு காரணமாக அமைகிறது.

ஏழை இலாசர் உவமை இதை நமக்கு மிகத் தெளிவாகச் சொல்கிறது. ஏழையாகிய இலாசர் செல்வந்தருடைய வீட்டு வாசலிலே இருக்கிறார். செல்வந்தர் மேசையில் சிந்தக்கூடிய உணவுகளை உண்டு இவர் வாழ்கிறார். இவருடைய புண்களையெல்லாம் நாய்கள் வந்து நக்கிவிட்டுச் செல்லும். ஆனால், இருவரும் இறந்த பின்பு ஏழை இலாசர் ஆபிரகாமின் மடியிலே அமர்ந்திருக்கிறார். ஆனால் தன்னுடைய வாழ்க்கையில் எல்லாவிதமான இன்பங்களையும் அனுபவித்த செல்வந்தர் நரகத்திலே மிகவும் துன்பப்பட்டுக்கொண்டிருக்கிறார். நாம் செல்வத்தோடும் புகழோடும் வாழும் போது விண்ணகம் என்று ஒன்று இருப்பதை மறந்து விடக் கூடாது. விண்ணகத்திற்கு தேவையான புண்ணியங்களை நாம் சேர்த்துக்கொள்ள வேண்டும். செல்வ மயக்கத்திலே நாம் புண்ணியம் தேட மறக்கும் போது விண்ணகம் நமக்கு தூரமானதாக மாறும்.

அருட்தந்தை அருண்ரெக்ஸ்...

## மறைத்து வைக்கப்பட்ட 4 ஆயிரம் சிலிண்டர்கள் ஹம்பாந்தோட்டையில் மீட்பு

மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக கூறப்படும் நாலாயிரத்துக்கும் அதிகமான எரிவாயு சிலிண்டர்களை பொலிஸார் மீட்டுள்ளனர்.

ஹம்பாந்தோட்டை அங்குணுகொலபலஸ்ஸ பிரதேச செயலாளர் பிரிவில் வைத்து இவை மீட்கப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட எரிவாயு சிலிண்டர்கள் நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அதே இடத்தில் வைத்து மக்களுக்கு அவை விற்பனை செய்யப்பட்டமை சிறப்பம்சமாகும்.

இதேவேளை சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் இல்லை என்று 06

## மின்சார, நீர் கட்டணங்கள் அதிகரிக்கும் வாய்ப்பு

### தீர்மானம் விரைவில் அறிவிக்கப்படும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

எரிபொருள் விலை அதிகரித்துள்ள நிலையில், மின் கட்டணங்களை அதிகரிப்பதற்கான தீர்மானத்தை மின்சார சபை மேற்கொண்டுள்ளது. எவ்வாறான விலை அதிகரிப்பை மேற்கொள்வது என்பது தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு மின்சார சபை உயரதிகாரிகள் மத்தியில் விஷேட பேச்சுவார்த்தை இன்று நடைபெறவுள்ளது.

நாட்டில் எரிபொருள் விலை பாரியளவில் அதிகரித்துள்ளன. இந்நிலையில் மின் உற்பத்திக்கான செலவு அதிகரிப்பு, மின் அலகொன்றின் மூலம் எதிர்கொள்ள நேர்ந்துள்ள நஷ்டம் அதிகரிப்பு, ஒன்பது வருடங்களாக மின் கட்டணத்தை அதிகரிப்பை ஏற்படுத்தாமை உள்ளிட்ட விடயங்களைக் கவனத்திற்கொண்டே, மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக மின்சார சபை தெரிவித்துள்ளது.

தற்போது மின்சார சபையானது வருடாந்தம் 25,000 கோடி ரூபா நஷ்டத்தை எதிர்கொண்டு வருகிறது. அந்தவகையில் தற்போதைய நெருக்கடி நிலைமையை எதிர்கொள்வதற்கு மின் கட்டணத்தை அதிகரிப்பதைத் தவிர வேறுமாற்று வழிகள் கிடையாது என்றும் மின்சார சபை தெரிவித்துள்ளது.

அதேவேளை, நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையானது மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டால் கண்டிப்பாக நீர்க் கட்டணத்தையும் அதிகரிக்க நேரும் எனத் தெரிவித்துள்ளது.

நீர் உற்பத்தி மற்றும் விநியோக நடவடிக்கைகளின் போது பெருமளவு மின்சாரம் உபயோகப்படுத்தப்படுவதை கவனத்திற்கொண்டு நீர்க் கட்டணத்தை அதிகரிப்பது அவசியமென அந்த சபை தெரிவித்துள்ளது.



இந்தியாவுக்கு இரண்டுநாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஷ நேற்று இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஸ்ரீ ஹர்ஷ்வர்டன ஸ்ரீங்கலவுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். புது டில்லியிலுள்ள ஐ.டீ.சி ஹோட்டலில் நடைபெற்ற இச்சந்திப்பில் இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே மற்றும் இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொறகொட உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## மாத்தறை பிரதேச சபை தவிசாளர் கைது

மாத்தறை பிரதேச சபையின் தவிசாளர் விமல் பிரியஜனக்க மற்றும் அவரது உறவினர்கள் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாத்தறை, கேகனதுர பிரதேசத்தில் வீடொன்றின் மீது தீ வைத்த சம்பவம் தொடர்பில், சந்தேக நபரான தவிசாளரும் ஏனைய நபர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தவிசாளர் மற்றும் சந்தேகநபர்கள் இருவரும் மாத்தறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர், ஒருவருக்கு தலா 10 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டனர்.

தனிப்பட்ட தகராறு காரணமாக பிரதேச சபைத் தவிசாளர், இரு சந்தேக 06

## ஜெனீவாவில் தொடரும் இலங்கை விரோத போக்கு

### வெளிநாட்டலுவல்கள் அமைச்சு அறிக்கை

நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளை ஸ்திரப்படுத்தும் நடவடிக்கைகளை இலக்காகக் கொண்டு, தொடர்ச்சியான தேசிய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டுள்ள நிலையில் , ஜெனீவாவில் இலங்கைக்கு விரோதமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வெளிநாட்டு அமைச்சு அறிவித்துள்ளது.

எனவே இது குறித்து இலங்கையின் நிலைப்பாடு மற்றும் கொவிட் 19 தொடர்பான சவால்களுக்கு மத்தியிலும் இவ்விடயத்தில் அடைந்து கொண்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஆகியன குறித்து ஐ.நா. உறுப்பு நாடுகள் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட செயற்பாட்டாளர்கள் உட்பட ஜெனீவாவில் உள்ள பங்குதாரர்களுக்கு விளக்கமளிப்பது முக்கியமானதாகும் என்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த இரு வாரங்களாக இடம்பெற்ற ஜெனீவா மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது அமர்வு தொடர்பில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. 06

## கட்டண அதிகரிப்பு போதாது: பஸ் உரிமையாளர்கள் விசனம்

### சேவையை தொடர்வது குறித்து 3 தினங்களில் அறிவிப்போம்! அகில இலங்கை பஸ் உரிமையாளர் சங்கம் தெரிவிப்பு

தற்போது அதிகரித்திருக்கும் பஸ் கட்டணம் போதுமானதல்ல. அதனால் மூன்று தினங்களுக்கு பஸ் சேவையில் ஈடுபட்டு, அதனால் ஏற்படும் நட்டத்தை சுமக்க முடியாதுபோனால் எமது தீர்மானத்தை எதிர்வரும் 3 தினங்களில் அரசாங்கத்துக்கு 06



## பௌசர் உரிமையாளர் வேலை நிறுத்தம் நிறைவு



எரிபொருட்களை ஏற்றிச் செல்லும் பௌசர் உரிமையாளர்கள் மேற்கொண்ட வேலை நிறுத்தப் போராட்டம் நிறைவடைந்தது. எரிசக்தி அமைச்சர் காமினி லொகுகேயுடன் நடந்த பேச்சுவார்த்தையையடுத்து இவ்வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

எரிபொருட்களின் விலையேற்றத்திற்கு இணையாக 06

## நாட்டில் எவ்வித மருந்துக்கும் தட்டுப்பாடு என்பது கிடையாது

### அரசியலுக்காக சிலர் பொய்யான பரப்புரை



நாட்டில் எந்தவித மருந்து தட்டுப்பாடும் கிடையாது என்றும் போதியளவு மருந்துகள் கைவசம் உள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

குறுகிய அரசியல் நோக்கத்துடன் நாட்டில் மருந்து தட்டுப்பாடு நிலவுவதாக, சில தரப்பினர் ஊடகங்கள் மூலம் பொய் பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். 06

## 9 வருடங்களுக்குப் பின் எம்பிலிப்பிட்டிய கடதாசித் தொழிற்சாலை மீள ஆரம்பம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள எம்பிலிப்பிட்டிய கடதாசி தொழிற்சாலை மூலம் வருடாந்தம் 75 ஆயிரம் மெட்ரிக் தொன் கடதாசியை உற்பத்தி செய்யவும் 2000 பேருக்கு வேலை வாய்புக்களை பெற்றுக்கொடுக்கவும் முடியுமென கைத்தொழில் அமைச்சர் எஸ். பி. திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

நீண்ட காலமாக மூடப்பட்டிருந்த எம்பிலிப்பிட்டிய கடதாசித்தொழிற்சாலை, ஒன்பது வருடங்களின் பின்னர் தேசிய முதலீட்டாளர்களுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்கிணங்க நேற்று (16) மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. இது எமக்குக் கிடைத்த பெரும் அதிஷ்டமாகும் என்றும் அவர் 06

## தேசிய பொருளாதார சபைக்கு ஒத்துழைப்பு வழங்க ஆலோசனைக் குழு

தேசிய பொருளாதார சபைக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக 16 பேர் கொண்ட ஆலோசனைக் குழுவொன்றை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

இதில், பேராசிரியர் எச்.டி. கருணாரத்ன , பேராசிரியர் ஷிரந்த ஹீன்கெந்த, கலாநிதி துஷ்னி வீரகோன், தம்மிக்க பெரேரா, கிருஷான் பாலேந்திர, அஷ்ரப் ஓமார், கலாநிதி ஹான்ஸ் விஜேசூரிய, விஷ் கோவிந்தசாமி, எஸ். ரெங்கநாதன் , திரு. ரஞ்சித் பேஜ், சுரேஷ் டி மெல், பிரபாஷ் சுபசிங்க,. துமிந்த ஹுலங்கமுவ, சுஜீவ முதலிகே, அசோக் பதிரகே, மொஹான் பண்டிதகே ஆகியோர் உள்ளடக்கப்பட்டுள்ளனர். தேசிய பொருளாதார சபைக்கு அமைச்சர்கள் அடங்கிய குழுவொன்றும் அண்மையில் நியமிக்கப்பட்டது.

## 37,500 மெட்றிக் தொன் பெற்றோல் அடங்கிய கப்பல் இன்று நாட்டுக்கு வருகை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டிற்கு 37,500 மெட்றிக் தொன் பெற்றோலை கொண்டுவரும் கப்பல் இன்று (17) துறைமுகத்தை வந்தடையுமென மின்சக்தி அமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார். மேற்படி கப்பலில் கொண்டுவரப்படும் பெற்றோலுக்கான விலையை அரசாங்கம் செலுத்தியுள்ளதாகவும் டொலர்கள் மூலம் அந்தத் தொகை செலுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்ட அவர், தற்போது எதிர்வரும் 20 ஆம் திகதி வரைக்குமான பெற்றோல் கையிருப்பிலுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 183.25 | 192.37 |
| கனடியன் டொலர் | 195.26 | 204.12 |
| யூரோ | 278.29 | 288.81 |
| ஜப்பான் யென் | 2.1570 | 2.2543 |
| சிங்கப்பூர் டொலர் | 185.58 | 192.47 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 263.51 | 271.91 |
| சுவிஸ் பிராங்க் | 270.59 | 281.79 |
| அமெரிக்க டொலர் | 249.96 | 259.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 608.26 | கட்டார் ரியால் | 62.81 |
| குவைத் டினார் | 755.13 | சவூதி ரியால் | 61.12 |
| ஓமான் ரியால் | 595.66 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 62.43 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் பங்குனி மாதம் 03ம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஷஃபான் பிறை 13

### குறள் தரும் சிந்தனை



புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யாது
இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்

புகழுக்குரிய கடமைகளைப் போற்றிச் செய்திடல் வேண்டும். அப்படிச் செய்யாமல் புறக்கணிக்கப்பவர்களுக்கு வாழ்க்கையில் உயர்வே இல்லை.

# முச்சக்கர வண்டிகளின் கட்டணத்தை ஒழுங்கமைக்கும் நடவடிக்கைகள்

இலங்கையில் போக்குவரத்துக்காக பஸ், ரயில் வண்டிகளுக்கு அப்பால் பரவலாகப் பயன்படுத்தப்படும் வாகனமாக முச்சக்கர வண்டிகள் விளங்குகின்றன. இதனை வீட்டுப் பாவனை வாகனமாகப் பயன்படுத்துபவர்களும் இருக்கவே செய்கின்றனர்.

போக்குவரத்து அமைச்சின் தரவுகளின்படி, இந்நாட்டில் சுமார் 12 இலட்சம் ஆட்டோ வண்டிகள் உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை வீதிப் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. அதாவது இந்த முச்சக்கர வண்டியைப் பயன்படுத்தி அன்றாடம் வருமானம் ஈட்டிக் கொள்வதைப் பெரும்பாலானவர்கள் தொழிலாகக் கொண்டுள்ளனர். அதேநேரம் இவ்வண்டியைப் பயன்படுத்தி சிறுதொழில் முயற்சிகளில் ஈடுபடுபவர்களும் உள்ளனர்.

ஆனால் சுமார் 12 இலட்சம் முச்சக்கர வண்டிகள் நாட்டில் காணப்படுகின்ற போதிலும், அவை தொடர்பில் கவனம் செலுத்தவும் அவற்றின் செயற்பாடுகளை ஒழுங்கமைக்கவும் இற்றைவரையும் தனியான கட்டமைப்பு இல்லாதுள்ளது. நாட்டில் பிரதேச மட்டத்திலுள்ள ஆட்டோ வண்டிச் சங்கங்களின் ஊடாகவே இவ்வண்டிகள் ஒழுங்கமைக்கப்படுகின்றன. ஆனால் இவ்வாறான சங்கக் கட்டமைப்பை விடவும் பலமான கட்டமைப்பின் தேவை பரவலாக உணரப்பட்டிருக்கின்றது.

ஏனெனில் இந்த முச்சக்கர வண்டிகள் பயன்படுத்தப்படும் விதம் தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுகளும் விமர்சனங்களும் நீண்ட காலமாகத் தெரிவிக்கப்படுகின்றன. அவற்றில் பெரும்பாலான குற்றச்சாட்டுகளும் விமர்சனங்களும் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் ஆட்டோ வண்டிகள் தொடர்பானவையாகும்.

அவற்றில் அதிக கட்டணம் அறவிடப்படுதல் முக்கிய குற்றச்சாட்டாக உள்ளது. அதேநேரம் அளவுக்கு அதிகமாகப் பயணிகளை ஏற்றுதல், வீதிப் போக்குவரத்து சட்டங்களை மதிக்காமல் வாகனம் செலுத்துதல், போட்டியிட்டு வாகனத்தை வேகமாகச் செலுத்துதல், போதைப்பொருளைப் பாவித்த நிலையில் வாகனத்தை செலுத்துதல் போன்றவாறான குற்றச்சாட்டுக்களும் சுட்டிக்காட்டத்தக்கவை,

அத்தோடு சட்டவிரோதக் குற்றச்செயல்களான போதைப்பொருள் கடத்தல், விற்பனை, விநியோகம் என்பவற்றுக்கும் ஆட்கடத்தல் போன்ற செயற்பாடுகளுக்கும் இந்த ஆட்டோ வண்டிகள் பயன்படுத்தப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

மேலும் நாட்டில் பதிவாகின்ற பெரும்பாலான வீதிவிபத்துகளுக்கு ஆட்டோ வண்டிகள் பங்களிப்பதாக தரவுகள் தெரிவிக்கின்றன. இதன்படி நாட்டில் அதிக குற்றச்சாட்டுகளுக்கும் விமர்சனங்களுகக்கும் உள்ளாகியுள்ள ஒரு வாகனமாகவே ஆட்டோ வண்டிகள் விளங்குகின்றன. இவ்வாறு இவ்வண்டிகள் தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுக்களும் விமர்சனங்களும் தெரிவிக்கப்பட்டு வருகின்ற போதிலும், அவற்றில் பிரதான புகாராக ஒவ்வொரு ஆட்டோ வண்டியும் வெவ்வேறு மட்டத்தில் கட்டணத்தை அதிகரித்து அறவிடப்படுவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. இதனடிப்படையில் இக்குற்றச்சாட்டுக்குத் தீர்வு காணும் வகையில் ஆட்டோ வண்டிகளுக்கு மீற்றர்களை கட்டாயப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் நிமித்தம் விஷேட வர்த்தமானி அறிவித்தலும் விடுக்கப்பட்டது.

ஆனாலும் மீற்றருக்கு செலவு அதிகம் என்பதைக் கருத்தில் கொண்டு முச்சக்கர வண்டி சாரதிகளுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் முச்சக்கர வண்டிகளுக்கு மீற்றர் பொருத்தும் நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. ஆனாலும் மக்களின் குற்றச்சாட்டுகள் தொடர்ந்தும் முன்வைக்கப்பட்டு வருவது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ள போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம, 'ஆட்டோ முச்சக்கர வண்டிகளுக்கு மீற்றர் பொருத்தும் நடவடிக்கையைக் கட்டாயப்படுத்தி நடைமுறைப்படுத்த எதிர்ப்பார்ப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இதன் ஊடாக முச்சக்கர வண்டி பயணத்தின் போது அறவிடப்படும் பயணக் கட்டணம் ஒரு ஒழுங்கமைப்பின் கீழ் கொண்டுவரப்படும். தம் விருப்பப்படி கட்டணம் அறவீடும் முறையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியும் என எதிர்பாரக்கப்படுகிறது. மக்கள் வரவேற்கும் நடவடிக்கையாக இது அமையும். இதேபோன்று முச்சக்கர வண்டிகள் தொடர்பில் தெரிவிக்கப்படும் ஏனைய விமர்சனங்கள், குற்றச்சாட்டுக்கள் குறித்தும் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அதுவும் மக்களின் எதிர்பார்ப்பாகவும் விருப்பமாகவும் உள்ளது. இவ்வாறான நடவடிக்கைகளின் ஊடாக இந்நாட்டின் ஆட்டோ வண்டிகளை ஒழுங்குமுறையான ஒழுங்கமைப்பின் கீழ் கொண்டு வரக்கூடியதாக இருக்கும். இதன் மூலம் நாட்டு மக்களுக்கு சிறந்த ஒழுங்குமுறையான சேவையை வழங்கும் வாகனமாக ஆட்டோ முச்சக்கர வண்டி விளங்கும்.

editor.tkn@lakehouse.lk

# நேத்திரா தொலைக்காட்சியில் இன்று காலை மெதின் நோன்மதி பௌத்த கலந்துரையாடல்

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தமிழ் அலைவரிசையான நேத்திரா தொலைக்காட்சியில் ஒவ்வொரு மாதமும் நோன்மதி தினத்தன்று விசேட பௌத்த கலந்துரையாடல் தமிழ்மொழியில் ஒளிபரப்பாகி வருகிறது. மெதின் நோன்மதி தினம் புத்த பகவான் ஞானம் பெற்ற பின்னர், தனது தந்தையான சுத்தோதன மன்னரை சந்திக்கச் சென்ற நாள் ஆகும். ஞானம் பெற்ற பின் தந்தையை சந்தித்த முதல் சந்தர்ப்பம் இதுவாகும். முன்னதாக தந்தை, தான் ஆட்சி செய்த சக்கிய தேசத்து தலைநகர் கபிலவஸ்துவில் இருந்து ஒரு அமைச்சரையும் 1000 பேரையும் புத்தரை அழைத்துவர அனுப்பி வைத்தார். அந்த வேண்டுகோளை ஏற்ற பின்னர் புத்தர் பெருமான் தனது தந்தையை சந்திக்க கபிலவஸ்து நகருக்கு சென்றார். ஞானம் பெற்று 8 வருடங்களின் பின்னரே புத்தர் அங்கு சென்றுள்ளார். கபிலவஸ்து நகரமே இன்றைய நேபாளமாகக் கருதப்படுகிறது.



தமிழ் பேசும் மக்களுக்கு பௌத்த தர்மம் தொடர்பான விளக்கம் ஒன்றை வழங்கும் நோக்கிலேயே போயா தினத்தில் இந்த நிகழ்ச்சி நேரடி ஒளிபரப்பாக இடம்பெற்று வருகிறது. நோன்மதி தினத்தன்று காலை 9 மணி முதல் 11 மணிவரை நேரடி ஒளிபரப்பாக இந்நிகழ்ச்சி நேத்ரா தொலைக்காட்சியில் இடம்பெற்று வருகிறது. சில சந்தர்ப்பங்களில் அவை பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சியாகவும் அமைகிறது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

2019 நவம்பர் மாதம் 16 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் வெற்றிக்குப் பின்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் கீழ் பல்வேறு மதநல்லிணக்க செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஓகஸ்ட் 5 ஆம் திகதி இடம்பெற்ற பொதுத்தேர்தலில் மாபெரும் வெற்றியை பதிவு செய்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்தது. அதன் பின்னர் மீண்டும் பிரதமராகப் பதவியேற்ற மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் நேரடி நிர்வாகத்தின் கீழ்,புத்த சாசன அமைச்சு வந்துள்ளமை சிறப்பம்சமாகும்.

புத்த சாசன,மத விவகார மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, 'ஒரு மதம் பற்றி ஏனைய சமூகங்களுக்கு அந்த சமூகங்களின் மொழிகளில் இலகுநடையில் விளக்கங்கள் வழங்கும் போது நல்லிணக்கம் ஏற்படுகிறது. மேலும் மதங்கள் பற்றிய பல சந்தேகங்களும் முரண்பாடுகளும் நீங்குகின்றன' என்ற கருத்தை வலியுறுத்தி வருகின்றார்.

நோன்மதி தினத்தின் வரலாற்றுச் சிறப்பு, பௌத்த தர்மம், பஞ்சசீலம் தொடர்பான விளக்கம், தியானம் மற்றும் தானங்கள் பற்றிய விளக்கம், புத்த பகவானின் வாழ்க்கைச் சரித்திரம் உட்பட பல விடயங்கள் உள்ளடங்குகின்றன. இந்த நிகழ்ச்சியில் தமிழ் பேசும் பௌத்த தேரர் மூலம் பௌத்த தர்மம் குறித்த விளக்கம் இலகு தமிழில் வழங்கப்படுகின்றமை சிறப்பம்சமாகும்.

புத்தசாசன, மதவிவகார மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் ஊடக செயலாளரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான ஜெயரஞ்ஜன் யோகராஜ் அமைச்சின் சார்பில் கலந்து கொண்டு நிகழச்சியை தொகுத்து வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. இன்று 17 ஆம் திகதி துருது நோன்மதி தினத்தன்றும் விசேட ஒளிபரப்பு இடம்பெறுகிறது.

துருது நோன்மதி தினம் பற்றிய அறிமுகம், அதன் சிறப்பு, பௌத்த தர்மம், புத்த பகவானின் போதனைகள் மற்றும் வரலாறு தொடர்பில் சிறந்த விளக்கங்களை முந்தலம், மங்கள எலிய, ஸ்ரீ தேவ்ராம் விகாரையின் பொறுப்பாளர் சங்கைக்குரிய திருநெல்வேலி போதி தம்ம அரவணடிகள் வழங்குவார். இன்றைய தினம் காலை 9 மணி முதல் 10.00 மணி வரை இந்த விசேட உரையாடல் இடம்பெறுகிறது.

# கிழக்கு பெண் ஆளுமைகளின் முன்னோடி அமரர் சிதம்பர பரஞ்சோதி தங்கத்துரை

எமது நாட்டில் பிரதேச அளவில் சமூகத்தில் முன்னோடிகளாகச் செயற்பட்ட பல பெண்களைப் பற்றிய பதிவுகள் அரங்கிற்கு வராமலே உள்ளன. அவர்களில் ஒருவர்தான் அமரர் திருமதி சிதம்பர பரஞ்சோதி தங்கத்துரை அவர்கள். மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று பிரதேசத்தில் பயிற்றப்பட்ட முதலாவது பெண் ஆசிரியையாகவும், பிரதேசத்தின் முதலாவது பெண் அதிபராகவும் விளங்கி, ஏறத்தாழ 37 வருடங்களுக்கு மேல் கல்விப்பணி புரிந்த இவர், தனது வாழ்நாளில் பெரும்பகுதியை சமூகத்தின் கல்வி, சமய வளர்ச்சிக்காக அர்ப்பணித்தார். பிரதேச மக்களால் இன்றும் 'பெரியக்கா' என அன்புடன் நினைவுகூரப்படுகின்றார். இன்று (17.03.2022) அவரது 97வது பிறந்த தினமாகும்.

அரசியல், ஆன்மிகம், இலக்கியம் என தனது ஆளுமையினை பலதுறைகளிலும் வெளிப்படுத்திய பெண்மணியாக விளங்கும் இவரை 'இரும்புப் பெண்மணி' என அழைக்கின்றனர் அவரிடம் பயின்ற மாணவர்கள். 1925 மார்ச் 17 இல் வாழைச்சேனையில் ஆறுமுகம்– கனகம்மா தம்பதியினரின் மகளாகப் பிறந்தவர் சிதம்பர பரஞ்சோதி. தனது ஆசிரியர் பயிற்சியை இவர் 01.03.1947 இல் பூர்த்தி செய்து 04.06.1947 இல்ஆசிரியராகப் பணியை ஆரம்பித்தார். 1962 முதல் 1984இல் பணியிலிருந்து ஓய்வுபெறும் வரை அதிபராகப் பணி புரிந்தார்.

வாழைச்சேனை, நாசிவன்தீவு, மிறாவோடை, புதுக்குடியிருப்பு ஆகிய கிராமங்களில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியராகவும் தலைமை ஆசிரியராகவும் கடமை புரிந்த இவர், வாழைச்சேனை புதுக்குடியிருப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் பணிபுரிந்து கொண்டிருந்த காலகட்டத்திலே அதிபராக தரமுயர்த்தப்பட்டு 1984 வரை அதிபராகப் பணிபுரிந்தார். புதுக்குடியிருப்பு அ.த.க. பாடசாலை எனும் பெயரை புதுக்குடியிருப்பு வாணி வித்தியாலயம் என மாற்றினார்.




கல்விப்பணி தவிர்த்து தன்னுடைய பிரதேசத்து பெண்களின் முன்னேற்றத்திற்காக 1960இல் 'உதயசோதி' எனும் பெயரில் மாதர் சங்கத்தினை தோற்றுவித்தார். சிக்கன கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கி செயற்படுத்தினார். அதனூடாகக் கடன்களைப் பெற்று சிறுதொழில்களை செய்து வருமானம் பெற வழிகாட்டினார். தனது சொந்தக் காணியில் இடம்கொடுத்து ஒரு கைத்தறி நிலையம் அமைத்து, ஏழைப் பெண்களுக்கு வருமானம் பெற வழிவகுத்துக் கொடுத்தார். கே. டபிள்யூ. தேவநாயகம், கே.நல்லையா போன்ற கல்குடா தொகுதி அரசியல் தலைமைகளின் தொடர்பின் மூலம் பிரதேசத்திலுள்ள பலருக்கும் வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொடுத்தார்.

1962இல் கிராமசபை உதவியுடன் தனது காணியில் வாசிகசாலை அமைத்து, பெண்களுக்கான கைத்தறி நிலையத்தினையும் உருவாக்கினார். இந்தக்காணியில் விபுலானந்தர் சிலை வைக்கப்பட்டு, இவ்வீதிக்கு 'விபுலானந்தர் வீதி' எனப் பெயரிடப்பட்டது. இதில் சிதம்பர பரஞ்சோதியின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. தன்னுடைய மாதர் சங்கத்தின் மூலம் பிரதேசத்திற்கு மாற்றலாகி வருகின்ற உயர் அதிகாரிகளுக்கு வரவேற்பு மற்றும் பிரிவுபசார வைபங்களை தொடர்ச்சியாக நடத்தி, அவர்களின் உதவிகளைப் பெற்று தனது கிராம மக்களுக்கு உறுதுணையாக விளங்கினார். வாழைச்சேனை கைலாயப்பிள்ளையார் ஆலயத்தின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றிய இவர், 1990இல் ஆலயத்தின் வரலாற்றினை 'வாழைச்சேனை ஸ்ரீ கைலாயப்பிள்ளையார் ஆலய வரலாறு' எனும் நூலாக எழுதி வெளியிட்டு பிரதேச வரலாற்றினை எழுதி ஆவணப்படுத்திய முதல் எழுத்தாளராகவும் விளங்குகின்றார். இன்றுவரை ஆலயத்தின் வளர்ச்சிக்கு இவரது பிள்ளைகள் உதவி வருகின்றனர்.

**இன்று 97ஆவது பிறந்த தினம்**

ஆசிரியர், அதிபர், எழுத்தாளர், சமூக சேவகர் எனப் பல முகங்கள் கொண்ட அமரர் சிதரம்பர பரஞ்சோதி அவர்களின் பணிகள் இன்னும் பல உள்ளன. பெண்கள் பெருமை போற்றும் மாதத்தில் பிறந்து, பெண்களின் முன்னேற்றத்திற்காக உழைத்த இவரின் பிறந்த தினத்தில் இவரை பெருமைப்படுத்துவோம்!

**எஸ்.ஏ.ஸ்ரீதர்...**
(நூலக சேவகர், பொதுசன நூலகம், வாழைச்சேனை

# நிசாமி கன்ஜவீ என்பவர் யார்?

ஆறாம் நூற்றாண்டில் அஸர்பைஜானின் கன்ஜே என்ற இடத்தில் பிறந்த ஹக்கிம் அபு முஹம்மது இல்யாஸ் பின் யூசுப் இபின் சக்கி பின் மொயத் நிசாமீ கஞ்சவீ (ஹிஜ்ரி 530 540) அந்நூற்றாண்டிலேயே புகழ் பெற்ற ஈரானிய கவிஞராக விளங்கினார். அக்காலத்தில் அவர் மெய்யறிவு, பகுத்தறிவு அறிவியல், இஸ்லாமிய அறிவியல், மருத்துவம், கணிதம் மற்றும் இசை ஆகியவற்றில் தலைசிறந்த அறிஞர்களில் ஒருவராகக் கருதப்பட்டார். அவரது மிக முக்கியமான படைப்பு 'ஐந்து பொக்கிஷங்கள்' ஆகும்.

நிசாமீ கஞ்சவீ ஆல முசாபிர், ஷெர்வன் ஷாக்கள் மற்றும் சல்ஜுக்ஸ் ஆட்சியின் போது வாழ்ந்த ஒருவராவார். ஷெர்வன் ஷாஹ் மற்றும் அலா முசாபிர் ஆகிய இரண்டு பேரரசுகளும் உள்ளூர் எமிரேட்டுகளாகக் கருதப்படுகிறது. இறுதியில் செல்ஜுக்ஸின் எழுச்சியுடன், இவ்வம்சங்கள் அனைத்தும் பலவீனமடைந்து ஓரங்கட்டப்பட்டன.

இவர் சிறுபராயத்திலேயே தந்தையை இழந்து தாய்மாமாவின் பராமரிப்பில் வாழ்ந்து கல்வியைக் கற்று தேர்ந்தார். வானியல், தத்துவம், நீதியியல், இறையியல் மற்றும் அரபு மொழி போன்ற அக்கால முக்கிய துறையில் சிறந்த அறிவினை பெற்றதன் காரணமாக நிசாமீ ஆறாம் நூற்றாண்டில் ஒரு தலைசிறந்த அறிஞராவார். பிரபல்யமாக காணப்பட்டார். இக்கவிஞரின் மற்றொரு முக்கிய அம்சம் அவர் அரசியல் விவகாரங்களிலிருந்து ஒதுங்கி வாழ்ந்தவராவார்.

நிசாமி கன்ஜவி ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அல்லது ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இறையழைப்பை ஏற்று கன்ஜே நகரில் அடக்கம் செய்யப்பட்டார். இவரின் கல்லறை அழகான மற்றும் எளிமையான கல்லறையாகும்.



ஐந்து பொக்கிஷங்கள் இவரது மிக முக்கியமான படைப்புகளாகும். இது 5 வகை கவிதை தொகுப்புக்களால் ஆனது. இந்த ஐந்து பொக்கிஷங்கள் ஈரானிய பாடல் இலக்கியத்தின் மிக முக்கியமான படைப்புகளாகும்.

நிசாமியின் இத்தொகுப்பு 29,000 பைத்களைக் கொண்டுள்ளது. இதனை நிசாமீ 570 ஆண்டு முதல் தனது வாழ்க்கையின் இறுதி வரை தொடர்ந்து இயற்றினார்.

இவரது படைப்பின் முதலாவது தொகுப்பு மக்ஸான் அல்அஸ்ரார் என்று அழைக்கப்படுகிறது. இது அஸர்பைஜானின் ஆளுநரான மன்னர் பகுர்தீன் பஹ்ராம் ஷாவுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. இப்படைப்பு கல்வி, இலக்கியம் என்ற வகையை சார்ந்தது.

இவரது படைப்பின் இரண்டாவது தொகுப்பு கோஸ்ரோ மற்றும் ஷிரின் ஆகும். இது 576 இல் சுமார் 6200 அடிகளைக் கொண்டு எழுதப்பட்டது. இக்கவிதை கோஸ்ரோ பர்விஸ் (சக்திவாய்ந்த ஈரானிய இளவரசர்). ஆர்மீனியாவின் ஷிரின் என்ற இளவர்சிக்கும் இடையிலுள்ள காதல் கதையாகும்.

நிசாமி தனது வாழ்நாளில் 16 வருடங்களாக இந்த ஈரானிய காதல் கதையை இயற்றியுள்ளார் என்று வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

584 இல் படைக்கப்பட்ட லைலா மஜ்னூன் என்ற தொகுப்பு நிசாமீ கன்ஜவியின் மூன்றாவது படைப்பாகும். இது ஷெர்வன் ஷாஹியின் ஆட்சியாளரின் வேண்டுகோளின் பேரில் எழுதப்பட்டது. இந்த மஸ்னவி 4700 க்கும் மேற்பட்ட பைத்துகளைக் கொண்டுள்ளது.

கன்ஜவியின் 'ஹப்த் பைகர் (ஏழு உடல்கள்)' என்ற தொகுப்பு 5136 பைத்துகளைக் கொண்டுள்ளது. இப்படைப்புக்கு பஹ்ராம் நாமே அல்லது ஹஃப்ட் குன்பாத் என்றும் பெயரிடப்பட்டுள்ளது.

ஐந்து பொக்கிஷங்களின் இறுதிப் பகுதி இஸ்கந்தர் நாமே என்று அழைக்கப்படுகிறது. இது 10,000 க்கும் மேற்பட்ட வசனங்களில் எழுதப்பட்டுள்ளது.

நிசாமீ இந்த ஐந்து (பன்ஜ் கன்ஜை) தொகுப்பைத் தவிர, வேறு ஆக்கங்களையும் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அவை திவானே கசாயித் மற்றும் கசலியாத்தே நிசாமீ கன்ஜவீ என்ற புத்தகங்களில் சேகரிக்கப்பட்டுள்ளன. தற்போது நிசாமியின் லைலா மஜ்னூனின் மொழிபெயர்ப்புகள் ரஷ்ய, ஆங்கிலம், ஆர்மேனியன், ஜெர்மன் மற்றும் பிரஞ்சு மொழிகளில் உள்ளன. மேலும் ருஸ்தம் அலி உப் ஐந்து பொக்கிஷங்களையும் ரஷ்ய மொழியில் மொழிபெயர்த்துள்ளார்.

இலக்கிய விமர்சகர்களின் கூற்றுப்படி, பல துருக்கிய கவிஞர்கள் தங்கள் இலக்கியப் படைப்புகளை உருவாக்க நிசாமீ கன்ஜவியால் ஈர்க்கப்பட்டனர்.

நிசாமீ கன்ஜவியின் கவிதையின் தனித்துவமான சிறப்பம்சங்கள்:

அவரது ஒப்புமை மற்றும் விளக்கங்கள் அழகாகவும், கலைநய மிக்கதாகவும், மிகவும் கற்பனையாகவும் உள்ளன. அவர் இயற்கை மற்றும் சூழ்நிலைகளின் விவரங்களை கவிதை வடிவில் சித்தரிப்பதில் மிகவும் திறமையானவர். சரியான வார்த்தைகள் மற்றும் சொற்றொடர்களைத் தேர்ந்தெடுப்பது, அதன் வெளிப்படையான விளைவு அவருடைய கவிதையின் இசை உள்ளத்தை கவரும் வண்ணம் இருக்கும். அரேபிய வார்த்தைகள், அறிவியல் கலைச்சொற்கள், தத்துவம் மற்றும் இஸ்லாமிய போதனைகளின் கொள்கைகள் மற்றும் அடிப்படைகள்' ஆகியவற்றின் பன்முகத்தன்மை இக்கவிஞரை கடினமாகவும் சிக்கலாகவும் ஆக்கியுள்ளது.

கலாநிதி
**அஸாம் மஜீதி** பி.எச்.டி...
(உளவியல் ஆற்றுப்படுத்தல் ஆலோசகர்)

# மருத்துவ ஆலோசனைகளை பேணி வாழ்வதன் மூலம் சிறுநீரக பாதிப்பை தவிர்ப்போம்!

நாள்பட்ட சிறுநீரக நோய் (சி.கே.டி) சிறுநீரகத்தின் செயல்பாட்டை படிப்படியாகக் குறைக்கும். இந்த நோயின் வளர்ச்சியினால் சிறுநீரகங்கள் சாதாரணமாக செய்யும் இரத்த சுத்திகரிப்பு படிப்படியாகக் குறைக்கப்படும். நாள்பட்ட சிறுநீரக நோயின் வளர்ச்சிக்கான இரண்டு பொதுவான காரணங்கள் நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தம் ஆகும்.

சிறுநீரக நோயின் ஆரம்ப கட்டங்களில், இது பொதுவாக எந்த குறிப்பிடத்தக்க அறிகுறிகளையும் காட்டாது. எனவே, வழக்கமான இரத்த பரிசோதனைகள், இரத்தம் மற்றும் சிறுநீர் பரிசோதனைகள் மூலம் கண்டறிய முடியும். இருப்பினும், சிகிச்சையின் போது சிறுநீரக செயல்பாடு மோசமடைந்தால் அல்லது சிறுநீரக நோயை முன்கூட்டியே கண்டறியவில்லை என்றால், தொடர்ந்து சிறுநீர் பிரியாமை மற்றும் கணுக்கால் வீக்கம், சிறுநீரில் இரத்தம் மற்றும் அதிகரித்த தசைநார் காரணமாக மூச்சுத் திணறல் போன்ற அறிகுறிகளை அனுபவிக்கலாம்.

மருந்துகளுடன் தொடர்புடைய வாழ்க்கை முறை மாற்றங்கள் சிறுநீரக கட்டுப்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கின்றது. சிறுநீரக செயல்பாடு மோசமடைந்தால், அது இறுதியில் சிறுநீரக செயலிழப்புக்கு வழிவகுக்கும். இதனால் சிறுநீரக சுத்திகரிப்பு அல்லது சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை தேவைப்படலாம். 50 பேரில் ஒருவருக்கு நாள்பட்ட சிறுநீரக நோய் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறுநீரக செயலிழப்பை முன்கூட்டியே கண்டறிந்து சிகிச்சை அளித்தால் தடுக்கலாம்.



## ஆரோக்கிய உணவுப் பழக்கம், இரத்த அழுத்தம் மற்றும் குருதி குளுக்கோஸ் மீதான அவதானம் போன்றவற்றில் கவனம் செலுத்தப்படுவது எப்போதும் அவசியம்

நாள்பட்ட சிறுநீரக நோயின் ஆரம்ப நிலை அறிகுறிகள்:

பொதுவாக, சிறுநீரகத்தின் செயல்பாட்டில் குறிப்பிடத்தக்க குறைபாடு ஏற்பட்டாலும் மனித உடல் வெற்றிகரமாகச் செயல்படும். எனவே, CKD பொதுவாக ஆரம்ப கட்டங்களில் குறிப்பிடத்தக்க அறிகுறிகள் எதையும் காட்டாது. CKD இன் ஆரம்ப அறிகுறிகள் பொதுவாக தெளிவற்றவை. இந்த அறிகுறிகள் பின்வருமாறு இருக்கும்.

பசியின்மை, குமட்டல், வரண்ட தோல் மற்றும் தோல் அரிப்பு, தலைவலி, உடல் நிலை சரியில்லாமல் இருப்பது போன்ற பொதுவான உணர்வு, சோர்வு, எதிர்பாராத அல்லது கட்டுப்பாடற்ற எடை இழப்பு.

ஒரு வழக்கமான இரத்த அல்லது சிறுநீர் பரிசோதனையானது ஆரம்ப நிலையிலேயே ஏதேனும் ஒரு பிரச்சினையை வெளிப்படுத்தினால், ஆரம்ப நிலையிலேயே உரிய சிகிச்சை அளிக்கப்பட்டால், நோய் மேலும் தீவிரமடையாமல் தடுக்கலாம்.

தாமதமாக தொடங்கும் அறிகுறிகள்:

சிறுநீரக நோய் ஆரம்பத்திலேயே கண்டறியப்படாமலோ அல்லது சிகிச்சை அளிக்கப்படாமலோ இருந்தால், நோய் தீவிரமடைந்து பின்வரும் அறிகுறிகளை உருவாக்கலாம்:

இரத்தத்தில் உள்ள கல்சியம் மற்றும் பொஸ்பரஸ் அளவுகளில் ஏற்றத்தாழ்வு மற்றும் அதனால் ஏற்படும் எலும்பு வலியால் சிறுநீரக பாதிப்பு ஏற்படுகிறது. கைகள், கால்கள் மற்றும் கணுக்கால்களில் உணர்வின்மை அல்லது வீக்கம். உடலில் கழிவுப் பொருட்கள் தேங்குவதால் அம்மோனியா வாசனை அல்லது மீன்கழிவுகள் போன்ற துர்நாற்றம், பசியின்மை மற்றும் எடை இழப்பு, வாந்தி, அடிக்கடி விக்கல் வரும், அடிக்கடி சிறுநீர் கழித்தல் (குறிப்பாக இரவில்), மூச்சுத்திணறல், சோர்வு, சிறுநீர் அல்லது மலத்தில் இரத்தம், சிந்தனை அல்லது கவனம் செலுத்துவதில் சிரமம், தசைப்பிடிப்பு / முதுகு வலி, எளிதான சிராய்ப்பு, அடிக்கடி தண்ணீர் குடித்தல், மாதவிடாய் இல்லாதது (அமினோரியா), தூக்கமின்மை, தோல் வெளிர் அல்லது கறுப்பு நிறமாக மாறும், பாலியல் செயலிழப்பு.

CKD இன் கடைசிநிலை சிறுநீரக செயலிழப்பு ஆகும். இறுதிக் கட்டமாக இதற்கு டயாலிசிஸ் அல்லது சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை தேவைப்படலாம். நாள்பட்ட சிறுநீரக நோயைக் குணப்படுத்த முடியாது, ஆனால் சிகிச்சையானது அதன் மோசமான நிலையைத் தடுக்கலாம்.

நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் அல்லது அதிக கொழுப்பு போன்ற பிற நோய்களைக் கட்டுப்படுத்த மருந்துகள் பரிந்துரைக்கப்படுகின்றன. நீரிழிவு நோயாளிகள் ஆரோக்கியமான மற்றும் சீரான உணவை உண்ண வேண்டும், உடற்பயிற்சி மற்றும் வழக்கமான இரத்த பரிசோதனைகள் மூலம் அவர்களின் இரத்த சர்க்கரை அளவை கண்காணிக்க வேண்டும். உயர் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்த உங்கள் மருத்துவர் மருந்துகளைப் பரிந்துரைக்கலாம்.



இரத்த அழுத்தம் 140/90 மி.மீ இற்குக் கீழே பராமரிக்கப்பட வேண்டும். cholestrol அளவைக் குறைக்க மருந்துகள் பரிந்துரைக்கப்படலாம். நாள்பட்ட சிறுநீரக நோய் இரத்த சோகைக்கு காரணம் என்பதால், இரும்புச் சத்துக்கள் பரிந்துரைக்கப்படலாம்.

புகைபிடிப்பதை நிறுத்த வேண்டும். சீரான மற்றும் ஆரோக்கியமான உணவை உண்ண வேண்டும். தினமும் உப்பின் அளவை 6 கிராமாக குறைக்க வேண்டும். தினமும் குறைந்தது 30 நிமிடங்களும் வாரத்தில் ஐந்து நாட்களும் உடற்பயிற்சி செய்யுங்கள்.மதுபானம் அருந்துவது நல்லதல்ல. உடல் எடையை குறைத்து, உங்கள் உயரத்திற்கும் வயதுக்கும் ஏற்ற ஆரோக்கியமான எடையை பராமரிக்கவும். சுய மருந்து வேண்டாம்.போதுமான அளவு நீர் அருந்துதல், புரத உணவு அளவுடன் உட்கொள்ளுதல், குறைந்த சோடியம் உணவுகளை உண்ணுங்கள் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுகளை தவிர்க்கவும்.

ஒரு நாளைக்கு குறைந்தது 30 நிமிடங்கள் தவறாமல் உடற்பயிற்சி செய்யுங்கள். நீச்சல் மற்றும் விறுவிறுப்பான நடைப்பயிற்சி உடலில் சுறுசுறுப்பை ஏற்படுத்தும். இருப்பினும், நீங்கள் உடல் ரீதியாக சுறுசுறுப்பாக இல்லாவிட்டால், உங்கள் உடல்நலப் பாதுகாப்புக் குழுவிலிருந்து உங்களுக்கு எந்தப் பயிற்சிகள் சரியானவை என்பதைக் கண்டறியவும்.

ஆரோக்கியமான உணவுகளைத் தேர்ந்தெடுக்கவும். சீனி கலந்த பானங்களைத் தவிர்க்கவும். குறைந்த கலோரி உணவுகளைத் தேர்ந்தெடுத்து உப்பு மற்றும் சர்க்கரை உணவுகளைத் தவிர்க்கவும். ஆரோக்கியமான உடல் எடையுடன் இருப்பது அவசியம். உடல் பருமன் சிறுநீரகங்களுக்கு பணிச் சுமையை அதிகரிக்கிறது. உங்கள் உடல் எடையை பராமரிக்க பயிற்சி பெற்ற நிபுணர் மற்றும் உணவியல் நிபுணரின் உதவியை நாடலாம்.

ஒவ்வொரு இரவும் 7 முதல் 8 மணி நேரம் தூக்கம் அவசியம். போதுமான தூக்கம் உங்கள் உடலையும் மனதையும் ஆரோக்கியமாக வைத்திருக்க உதவுகிறது மற்றும் உங்கள் இரத்த அழுத்தம் மற்றும் இரத்த சீனி அளவை கட்டுக்குள் வைத்திருக்க உதவும். புகைபிடிப்பதைத் தவிர்ப்பது சிறுநீரக பாதிப்பு மற்றும் உயர் இரத்த அழுத்தத்தைத் தடுக்க உதவும்.

நீடித்த மனஅழுத்தம் வியாதிகளை ஏற்படுத்தும். ஆழ்ந்த இசையைக் கேட்பது, அமைதியான விஷயங்கள் அல்லது செயல்பாடுகளில் கவனம் செலுத்துவது அல்லது தியானம் செய்வதன் மூலம் மனஅழுத்தத்தை சமாளிக்க முடியும்.

வலிமருந்து மற்றும் ஆண்டிபயோடிக் அதிகமாக பயன்படுத்துவதை தவிர்க்கவும். சிறுநீர் பகுப்பாய்வில் சிறிய அசாதாரணங்களைக் கூட புறக்கணிக்காதீர்கள். மருத்துவ ஆலோசனையின்றி எந்த மருந்துகளையும் அல்லது அங்கீகரிக்கப்படாத ஊட்டச்சத்து மருந்துகளையும் பயன்படுத்த வேண்டாம்.

எளிய வாழ்க்கை முறை மூலம் உங்கள் சிறுநீரகங்களை பாதுகாக்க முடியும். மருத்துவ ஆலோசனையின்படி வாழ்ந்தால் ஆரோக்கியமாக வாழ முடியும்.



DR. Raziya Nawas

National Institute for Nephrology Dialysis & Transplantation

# நிருத்தசொரூபி தர்மகுலேந்திரனின் சிஷ்யை சுவேதா ரஞ்சித்தின் பரதநாட்டிய அரங்கேற்றம்



நிருத்தா இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ்' நுண்கலைக் கல்லூரியானது ஸ்ரீமதி நிருத்தசொரூபி தர்மகுலேந்திரனால் 1995 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் ஸ்தாபிக்கப்பட்டு இன்றுவரை வெற்றிகரமாக இயங்கி வருகிறது. ஸ்ரீமதி நிருத்தசொரூபி தர்மகுலேந்திரன் சிறுவயதிலிருந்தே தாம் பெற்றுக் கொண்ட நிருத்ய ஞானத்தையும், கற்றுக்கொண்ட பயிற்சி நுணுக்கங்களையும் மட்டுமல்லாது வாழ்வியல் ஒழுக்கங்களையும் தமது மாணாக்கருக்கு முறையே பயிற்றுவித்து வருகிறார்.

இவரது கல்லூரியின் 24ஆவது பரதநாட்டிய அரங்கேற்றமானது ஸ்ரீமதி நிருத்தசொரூபி தர்மகுலேந்திரனின் சிஷ்யை செல்வி சுவேதா ரஞ்சித்தினால் விக்டோரியாவிலுள்ள லொயோலா கல்லூரியின் கலைக்கூடத்தில் மேடையேற்றப்பட்டது.

செல்வி சுவேதா ரஞ்சித்திற்கு சிறுவயதிலேயே பரதநாட்டியத்தின் மீதிருந்த அளவு கடந்த விருப்பத்தையும், அர்ப்பணிப்பையும் ஊக்குவிக்கும் முகமாக ஸ்ரீமதி நிருத்தசொரூபி தர்மகுலேந்திரன் தமது தாயார் ஸ்ரீமதி லக்ஷ்மி சிவபாதம் பெயரில் புலமைப்பரிசில் ஒன்றை கடந்த 2018ஆம் ஆண்டு வழங்கியிருந்தார்.

ஸ்ரீமதி கனகமணி விஜயவேந்ராவினால் பகுதாரி ராகம், ஆதிதாளத்தில் இயற்றப்பட்ட ஜதீஸ்வரமானது குருவால் நேர்த்தியாக நாட்டிய வடிவமைக்கப்பட்டு செல்வி சுவேதாவினால் மேடையேற்றப்பட்டது.

அடுத்ததாக அமையப் பெற்ற வர்ணமானது அவுஸ்திரேலிய மண்ணில் வீற்றிருக்கும் குன்றத்துக் குமரனைப் போற்றி நிருத்தசொரூபி தர்மகுலேந்திரனாலும் அவரது தாயார் ஸ்ரீமதி லக்ஷ்மி சிவபாதத்தினாலும் வரிகள் இயற்றப்பட்டு ஸ்ரீ அகிலன் சிவானந்தனால் இசையமைக்கப்பட்டு சுவேதாவினால் சிறப்பாக மேடையேற்றப்பட்டது.

ஸ்ரீபாலமுரளிகிருஷ்ணா இயற்றிய ஓம்கார காரினி என்று தொடங்கும் துர்க்கைக்கான கீர்த்தனைக்கு குருவின் நடன அமைப்பிற்கேற்றாற் போல ஆடி வெகு சிறப்பாக மேடையேற்றினார் சுவேதா ரஞ்சித்.

தமது சிஷ்ய சிஷ்யைகளின் ஒவ்வொரு அரங்கேற்றத்தின் போதும் குரு ஸ்ரீமதி. நிருத்தசொரூபி தர்மகுலேந்திரன் அவர்கள் அவர்களுக்கென்று குறைந்தது இரண்டு உருப்படிகளையாவது தாமே எழுதுவது அவரது அரங்கேற்றங்களின் சிறப்பம்சங்களில் ஒன்றாகும். ஒவ்வொரு மாணவ மாணவியின் மீதும் தனிப்பட்ட ரீதியில் அவர் கொண்ட அக்கறையையும், தமிழ் மொழியின் மீது அவர்கொண்ட பற்றையும் அது பறைசாற்றுகின்றது. ஸ்ரீமதி நிருத்தசொரூபி ஒரு தலை சிறந்த நடன ஆசிரியர் மட்டுமல்ல தேர்ச்சி பெற்ற ஒரு பாடலாசிரியர் என்பதையும் அவரது பாடல்கள் எமக்கு உணர்த்துகின்றன.



அவ்வகையில் செல்வி சுவேதா ரஞ்சித்தின் அரங்கேற்றத்திற்காகவே சிவபெருமானை போற்றும் 'ஆனந்தத் தாண்டவம் ஆடினான்' என்ற கீர்த்தனையையும் , செல்லக்கண்ணனின் குறும்புகளைச் சொல்லும் 'கொஞ்சிக் கொஞ்சி பேசும் கோகுல கிருஷ்ணா' என்ற பதத்தையும் ஸ்ரீமதி நிருத்தசொரூபி இயற்றியுள்ளார். கீர்த்தனையை ஹம்சநாதம் ராகதில் ஆதி தாளத்தில் ஸ்ரீ அகிலன் சிவானந்தனும், பதத்தை ஸ்ரோதஸ்வினி ராகத்தில் ரூபக தாளத்தில் ஸ்ரீ சுரேஷ் பாபுவும் சிறப்பாக இசையமைத்துள்ளார்கள்.

நிருத்தசொரூபி தர்மகுலேந்திரனின் நட்டுவாங்கம், அகிலன் சிவானந்தனின் குரலிசை, யோகராஜா கந்தசாமியின் மிருதங்கம், சுரேஷ் தியாகராஜனின் புல்லாங்குழல், முரளி குமாரின் வயலின், மற்றும் செந்தூரன் யோகரட்ணத்தின் தபேலா என்பவற்றோடு அரங்கேற்றம் சிறப்புற அமைந்தது. நிருத்தசொரூபி தர்மகுலேந்திரனின் புதல்வியும் சிஷ்யையுமான செல்வி இளமதி தர்மகுலேந்திரன் அழகான முறையில் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்.

செல்வி சுவேதா ரஞ்சித் மற்றும் அவரது குடும்பத்தினர் சுவேதாவின் குருவையும் ஏனைய கலைஞர்களையும் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

ஸ்ரீமதி நிருத்தசொரூபி தர்மகுலேந்திரன் ஒரு பரதநாட்டிய ஆசிரியராக மாத்திரம் தன்னை வரையறுத்துக் கொள்ளாது மெல்போர்னில் 'ராவணேஸ்வரன் இயல் இசை நாடக மன்றம்' எனும் பெயரில் ஒரு கலை மன்றத்தை நிறுவியுள்ளார்.

# இலங்கையின் சிரேஷ்ட பிரஜைகளுக்கு நிவாரண வெகுமதி; ஓய்வூதியத் திணைக்களத்துடன் தனியார் நிறுவனம் ஒப்பந்தம்

எமது தேசம் பொருளாதார ரீதியில் சவாலான காலகட்டத்தில் இருக்கின்ற போது தேசத்தின் ஓய்வூதிய சமூகத்தின் பொருளாதாரம் மற்றும் சேமநலன் தொடர்பில் கவனம் செலுத்திய ஓய்வூதியத் திணைக்களம், தேசத்தின் முன்னணி பல்பொருள் அங்காடிகள் நிறுவனமொன்றுடன் ஒன்றிணைந்து தேசத்தின் சிரேஷ்ட பிரஜைகளான ஓய்வூதிய சமூகத்துக்கு ஏதேனும் நிவாரணங்களை பெற்றுக் கொடுப்பதற்கான 'ஓய்வுகால வெகுமதி' (Pensioner's Reward) வேலைத் திட்டத்தை முன்னெடுத்துள்ளமை பாராட்டத்தக்கதாகும் என அரச சேவைகள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

தேசத்தின் ஓய்வூதிய சமூகத்துக்கு நெருக்கடியான காலகட்டத்தில் நிவாரணம் பெற்றுக் கொடுப்பதற்காக முன்னணி பல்பொருள் அங்காடிகள் நிறுவனமான காகில்ஸ் குழுமத்துடன் ஓய்வூதியத் திணைக்களம் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கை கைமாறிக் கொள்ளும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

இந்த வேலைத் திட்டத்தின் கீழ் ஓய்வூதிய சமூகத்தினால் காகில்ஸ் சுபர் மார்க்கட் மற்றும் அதன்படி மருந்தகங்களில் (Pharmacy) விஷேட விலைக்கழிவுடன் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ள முடிகின்றது. இதன் பிரகாரம் ஓய்வூதிய சமூகத்தினர் இவர்களுடன் மேற்கொள்ளும் 1500 ரூபாவுக்கு மேற்பட்ட கொடுக்கல் வாங்களுக்கு ஐந்து வீத விலைக் கழிவு வழங்கப்படவுள்ளது. ஒரு மாதத்துக்கான ஆகக் கூடிய கொடுக்கல் வாங்கல் 15000 ரூபாவாக வரையறுக்கப்பட்டுள்ளது. மேலும், எல்லா மாதங்களிலும் மற்றும் ஓய்வூதிய வாரத்திலும் தெரிவு செய்யப்பட்ட பொருட்களுக்கு விசேட கழிவு வழங்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

அதிக அளவில் விற்பனையாகும் தயாரிப்புகள் உட்பட ஓய்வூதிய சமூகத்துக்கு அத்தியாவசியமான சுகாதார மற்றும் போசாக்குசார் பொருட்களுக்கும் இந்த விலைக்கழிவு உள்ளடங்கும்.காகில்ஸ் குழுமத்தின் கே.எப்.ஸீ மற்றும் திரையரங்குகளிலும் விலைக்கழிவுகள் வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்த வேலைத் திட்டத்துக்கு காகில்ஸ் வங்கியும் எதிர்காலத்தில் பங்களிப்பு நல்கவுள்ளது.





அரச சேவைகள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர்,ஜே.ஜே.ரத்னசிறி, சிரேஷ்ட ஆலோசகர் மஹிந்த மடிஹேவா உள்ளிட்ட அமைச்சு அதிகாரிகள், காகில்ஸ் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் அசோக பீரிஸ்,பிரதம நிறைவேற்று அதிகாரி சஞ்சீவ பெர்ணான்டோ உள்ளிட்ட நிறுவன அதிகாரிகள், ஓய்வூதிய திணைக்கள பணிப்பாளர் நாயகம் ஜகத் டீ டயஸ், மேலதிக பணிப்பாளர் நாயகம் டீ.எம். பி.ஜயவர்தன, ஓய்வூதிய பணிப்பாளர் புத்திக ஜயதிஸ்ஸ உள்ளிட்ட திணைக்கள அதிகாரிகளும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

எம்.எஸ்.எம்.முன்தஸிர்...
(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

## ஜெனீவாவில் தொடரும்... (03 ஆம் பக்கத் தொடர்)

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் 49வது அமர்வில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தலைமையில், நீதி அமைச்சர் அலி சப்ரி, உற்பத்தி வழங்கல் மற்றும் மருந்துகள் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண, வெளியுறவுச் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே, மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரின் புள்ளே ஆகியோரை உள்ளடக்கிய தூதுக்குழுவொன்று கலந்து கொண்டது.

மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது கூட்டத் தொடரானது, கடந்த ஆண்டு மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட 46/6 தீர்மானத்தின்படி, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் இலங்கை தொடர்பான எழுத்துமூலமான புதிய தகவல்களை சபையில் சமர்ப்பிக்கும் முகமாக நடைபெற்றது.

குறித்த தீர்மானம், சம்மந்தப்பட்ட நாடான இலங்கையின் அனுமதியின்றி, 47 பேரவை உறுப்பினர்களில் 22 பேர் மட்டுமே ஆதரவாக வாக்களித்தமைக்கு அமைய நிறைவேற்றப்பட்டிருந்தது.

எதிர்காலத்தில், வழக்குத் தொடரும் நோக்கத்துடன் குற்றச் சான்றுகளைச் சேகரிக்கும் பாத்திரத்தை உயர்ஸ்தானிகர் அலுவலகம் ஏற்க வேண்டும் என்பதற்கான மிகவும் ஆபத்தான முன்னுதாரணமாக இந்தத் தீர்மானத்தின் செயற்பாட்டுப் பந்தி 06 அமைந்திருந்தது.

46/6 தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்த நாடுகள் கூட, இதன் அடிப்படைக் குறைபாடகைள் காரணமாக, பொதுச் சபை தீர்மானம் 48/141 இன் ஸ்தாபக ஆவணத்துடன் ஒத்துப்போகாத ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள இந்தப் புதிய பணி குறித்து தமது 'வாக்கு விளக்கத்தில்' ஆட்சேபனைகளை முன்வைத்துள்ளன.

தீர்மானம் 46/6 இல் உள்ள ஓ.பி.6 ஆனது, 'ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் பணியாக சான்றை சேகரிக்க, ஒருங்கிணைக்க, பகுப்பாய்வு மற்றும் பாதுகாக்கும் திறனை வலுப்படுத்த மட்டுமே முயன்றுள்ளது. இருந்தபோதிலும், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகம் இப்போது 46/6 தீர்மானத்தை மேற்கோள் காட்டி 'இலங்கையின் பொறுப்புக்கூறல் திட்டத்தை' நிறுவியுள்ளது.

இவ்வாறு, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்குள் உள்ளகத் திறன் விருத்திப் பயிற்சியாக மட்டுமே இருக்க வேண்டிய செயலானது, தன்னிச்சையாக ஒரு திட்டத்தின் நிலைக்கு உயர்த்தப்பட்டு, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் ஏனைய வெளிப்புற வழிமுறைகளுடன் பட்டியலிடப்பட்டுள்ளது.

மேலும், எமது மக்கள் அனைவருக்கும் நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகளை முன்னெடுப்பதை இலக்காகக் கொண்டு, தொடர்ச்சியான தேசிய செயற்பாடுகளை ஆரம்பித்து நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இந்நிலையில், இந்த அனைத்து விரோதமான நடவடிக்கைகளும் ஜெனிவாவில் இடம்பெற்று வருகின்றன. எனவே, எமது நிலைப்பாடு மற்றும் கொவிட்19 தொடர்பான சவால்களுக்கு மத்தியிலும் இலங்கை இந்த விடயத்தில் அடைந்து கொண்டுள்ள குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஆகியன குறித்து இந்த சபை, ஐ.நா. உறுப்பு நாடுகள் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட செயற்பாட்டாளர்கள் உட்பட ஜெனீவாவில் உள்ள பங்குதாரர்களுக்கு இலங்கை விளக்கமளிப்பது முக்கியமானதாகும்.

## இந்தியா எப்போதும்...

மற்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர்.

நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஸவின் இந்திய விஜயத்தின் போது, அந்நாட்டு வெளிநாட்டலுவல்கள் அமைச்சர், கலாநிதி எஸ். ஜெய்சங்கர் மற்றும் உதவி தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஸ்ரீ விக்ரம் மிஸ்ரி உள்ளிட்ட உயர்மட்ட பிரதிநிதிகளையும் அவர் சந்தித்து கலந்துரையாடினார். இந்தியாவிடமிருந்து பெறப்படவுள்ள ஒரு மில்லியன் டொலர் ஒப்பந்தம் தொடர்பிலான அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து இதன் போது முன்னெடுக்கப்பட்டதாக நிதி அமைச்சு தெரிவித்தது.

## மனித உரிமைகள் பேரவையில்...

எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு ஊடாடும் உரையாடலின் போது 31 நாடுகள் இலங்கை தொடர்பான கருத்துக்களை வெளிப்படுத்திய அதேவேளை, உள்நாட்டு விவகாரங்களில் தலையிடக் கூடாது என்பதே தமது பிரதான வாதமாக இருந்தது என பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே கூறினார்.

இதன் பின்னர் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தலைவருடன் இலங்கைப் பிரதிநிதிகள் நீண்ட நேரம் கலந்துரையாடியதாகவும், அதற்கு சாதகமான பதில் கிடைத்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள 50 ஆவது அமர்வு இலங்கை எதிர்கொள்ள வேண்டிய அடுத்த சவாலாக இருக்கும் என்றும், அதனை சிவில் சமூகக் குழுக்கள் மற்றும் நிபுணர்கள் உட்பட அனைத்துப் பிரிவினரின் ஆதரவுடன் எதிர்கொள்வோம் என்றும் அவர் கூறினார்

சுவிட்சலாந்தின் ஜெனிவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது கூட்டத்தொடருக்கு இலங்கை வெற்றிகரமாக முகங்கொடுத்ததாகவும், குற்றச்சாட்டுக்களுக்கு தர்க்க ரீதியாக விடயங்களை முன்வைத்து, அவற்றை தெளிவுபடுத்திக் கொள்ளமுடிந்ததாகவும்வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்தார்.

வெளிநாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளுடன் ஜெனீவாவில் பல கலந்துரையாடல்கள் இடம்பெற்றதாகவும், அவை மிகவும் பயனுள்ளதாக அமைந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள 50ஆவது அமர்வு இலங்கை எதிர்கொள்ளும் அடுத்த சவாலாகும் என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்தார். இதற்கு முறையான கால அட்டவணையுடன் கூடிய உரிய திட்டமிடல்கள் வகுக்கப்பட வேண்டும் எனவும், அதற்காக சிவில் சமூகம், புத்திஜீவிகள் உட்பட அனைவரினதும் ஒத்துழைப்பு தேவை எனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு எதிராக வெளிநாடுகளில் போராட்டங்கள் நடத்துவது LTTE கருத்துடையோர் மற்றும் அதற்கு துணை போவோர் அடங்கிய மிகச் சிறிய குழுவினாலேயே முன்னெடுக்கப்படுகிறது. அவற்றினால் இலங்கைக்கு பெரிய தாக்கம் ஏற்படப் போவதில்லை. எவ்வாறாயினும் அவர்களையும் நாட்டின் அபிவிருத்தியில் ஒன்றிணைத்துக்கொள்ள வேண்டும். கலந்துரையாடல்கள் மூலம் முன்னேற்றத்தை அடைந்துகொள்ள எதிர்பார்ப்பதாகவும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

## அமைச்சரவை தீர்மானத்தை...

நிராகரித்துள்ளன. 2016ஆம் ஆண்டு 17ஆம் இலக்க காணாமலாக்கப்பட்ட ஆட்கள் பற்றிய அலுவலக சட்டத்தின் மூலம், காணாமலாக்கப்பட்ட நபர்கள் தொடர்பாக உரிய விசாரணைகள் நடத்தப்பட்டு இறப்புச் சான்றிதழ் அல்லது காணக் கிடைக்கவில்லை என்ற சான்றிதழை வழங்குவதற்காக பதிவாளர் நாயகத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, காணாமலாக்கப்பட்ட ஆட்கள் பற்றிய அலுவலகத்தால் கண்டறிப்பட்ட விடயங்களின் அடிப்படையில், பதிவாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட சான்றிதழைப் பெற்றுள்ள காணாமலாக்கப்பட்டோரின், குடும்பத்தினருக்கு ஒரு இலட்சம் ரூபா நிதியை ஒருமுறை மாத்திரம் வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

## ரஷ்யாவிடமிருந்து இலங்கைக்கு...

வழங்குவதற்கு ரஷ்யா இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. ரஷ்யாவிடமிருந்து மசகு எண்ணெய்யை பெற்றுக்கொ ள்வதற்கு மேற்கத்தைய நாடுகள் விதித்துள்ள தடைகள் இலங்கையை பாதிக்காது என்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பில் இடம்பெறாததால் ரஷ்யாவிடமிருந்து மசகு எண்ணெயைப் பெறுவதில் இலங்கைக்கு எந்தவித தடைகளும் இருக்காது என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. அதேவேளை, இந்திய அரசாங்கமும் ரஷ்யாவிடமிருந்து மசகு எண்ணெய்யை கொள்வனவு செய்வதற்கு தீர்மானித்துள்ள நிலையில், ரஷ்யாவின் நட்பு நாடுகளான இந்தியாவுக்கும் இலங்கைக்கும் உலக சந்தையில் விற்பனை செய்யப்படும் விலையை விட குறைந்த விலையில் மசகு எண்ணெயை வழங்குவதற்கு ரஷ்யா இணக்கம் தெரிவித்துள்ளது.

பல ஆண்டுகளுக்குப் பின்னர் ஷெல் நிறுவனம் இலங்கையிலிருந்து விலகிக்கொண்டதன் பின்னர், ரஷ்யாவே இலங்கைக்கு எரிபொருள் வழங்கியுள்ளது. அந்த வகையில் ரஷ்யாவிடமிருந்து குறைந்த விலையில் எரிபொருளைப் பெற்றுக் கொள்ளப்பட்டால் குறைந்த விலையில் எரிபொருளை மக்களுக்கு விநியோகி'க முடியும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## மீனவர்களை விடுவிக்க...

மீனவர்கள் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றனர். இந்த ஆர்ப்பாட்டத்தின்போது, அவர்கள் பல்வேறு கோரிக்கைகளையும் முன்வைத்துள்ளதாக இந்திய ஊடகமொன்று தெரிவித்துள்ளது. இலங்கை கடல் பகுதியில், தமிழக நாட்டுப்படகு மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை பாதுகாக்க வேண்டும் என்றும், இலங்கையில் சிறை வைக்கப்பட்டுள்ள நாட்டுப்படகு மீனவர்கள் 6 பேரையும், 20 நாட்டுப்படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

பாக்கு நீரிணை கடல் பகுதியில், மீன்பிடித் தொழில் ஒழுங்குமுறைகளை மீறி, இரட்டை மடி முறையில் மீன்பிடித்து வரும் நாகபட்டினம் மற்றும் காரைக்கால் மாவட்ட விசைப்படகுகளை பறிமுதல் செய்ய வேண்டும் என்றும் நாட்டுப்படகு மீனவர்கள் வலியுறுத்தியுள்ளனர். அரசின் விதிமுறைகளை மீறி கரையோர மீன் பிடியிலும், இரட்டைமடி மீன்பிடியிலும் ஈடுபடும் விசைப்படகுகளின் உரிமத்தை இரத்து செய்ய வேண்டும் என வலியுறுத்தி அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## இலங்கை தமிழ்ப் பெண் மீது...

தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் காங்கிரஸ் உறுப்பினரான டானி டேவிஸால் ஒழுங்குபடுத்தபட்ட நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொள்ள சென்றிருந்த ராஜி, அங்கு வழங்கப்பட விருது ஒன்றிற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தார். நிகழ்வுக்கு குடும்ப சகிதம் சிகாகோவின் நெடுஞ்சாலை வழியே மகிழூந்தில் சென்று கொண்டிருந்த வேளை, பக்கவாட்டாக வந்த இனந்தெரியாத துப்பாக்கிதாரிகள் வாகன கண்ணாடி வழியே சுட்டுவிட்டு வேகமாக தப்பிச்சென்றுள்ளனர். வழமைக்கு மாறாக பக்கவாட்டில் திரும்பி இருந்ததால் ராஜி மயிரிழையில் உயிர்தப்பி உள்ளார். இச்சம்பவம் தொடர்பாக உடனடியாக பொலிஸாருக்கு அறிவிக்கப்படத்தை அடுத்து, அவர்கள் விரைந்து வந்து ராஜியை மீட்டு அவசர சிகிச்சைக்காக வாகனம் மூலம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்ததாக தெரியவருகிறது. சிக்காக்கோ பொலிஸார் இது தொடர்பாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அவர், தான் எழுதிய நூலின் பிரதிகளை அந்நிகழ்வில் கலந்து கொள்ள இருந்த முக்கிய காங்கிரஸ் பிரமுகர்களுக்கு வழங்குவதற்காக எடுத்துச் சென்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## வெளிநாடு செல்ல சம்பிக்கவுக்கு...

சுமத்தப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவுக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டு பயணத்தடையை தற்காலிகமாக தளர்த்துமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு நேற்று (16) உயர்நீதிமன்ற நீதிபதி தமித் தொட்டாவத்த முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

குற்றம் சாட்டப்பட்ட சம்பிக்க ரணவக்க சார்பில் ஆஜரான சட்டத்தரணி சரத் ஜயமான்ன, அவுஸ்திரேலியாவில் உள்ள இலங்கையர்கள் பாட்டாலி சம்பிக்க ரணவக்கவை அவுஸ்திரேலியாவிற்கு வருகை தருமாறு அழைப்பு விடுத்துள்ளதால், அங்கு பயணிப்பதற்காக தற்போது நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டுள்ள பயணத் தடையை ஏப்ரல் 08 ஆம் திகதி முதல் ஏப்ரல் 27 ஆம் திகதி வரை தளர்த்துமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதன்படி, பிரதிவாதி கோரிய காலப்பகுதிக்குள் வெளிநாடு செல்வதற்கு அனுமதிக்குமாறு குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு நீதிபதி உத்தரவிட்டார். மேலும், அவருடைய கடவுச்சீட்டை ஏப்ரல் 27 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டார்.

## நிதி அமைச்சரை சிலர்...

அந்தத் தடைகளை கடந்து படகு முன்னோக்கிச் செல்வதை யாராலும் தடுக்க முடியாது எனவும் குறிப்பிட்டார்.

அமைச்சுப் பதவிகளில் இருந்து நீக்கப்பட்ட இருவரைத் தவிர ஏனைய அரசின் பங்காளிக் கட்சிகளின் உறுப்பினர்கள் பொதுஜன பெரமுனவுக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பக்கூடிய ஒரே நபர் பெசில் ராஜபக்ச என்பதை அறிந்த காரணத்தினாலேயே, அவரை பலர் விமர்சிப்பதாகவும் பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் குறிப்பிட்டார்.

## கட்டண அதிகரிப்பு போதாது:... (03 ஆம் பக்கத் தொடர்)

அறிவிப்போம் என அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்களின் சங்கத்தின் செயலாளர் அன்ஜன பிரயன்ஜித் தெரிவித்தார்.

தற்போது அதிகரிக்கப்பட்டிருக்கும் பஸ் கட்டணம் தொடர்பாக தனது சங்கத்தின் நிலைப்பாட்டை தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டதை அடிப்படையாக்கொண்டு பஸ் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது . தற்போது அதிகரிக்கப்பட்டிருக்கும் கட்டணம் மூலம் நாங்கள் நாளாந்தம் எரிபொருளுக்காக செலவிடும் தொகையை கூட பெற்றுக் கொள்ள முடியாது. இவ்வாறு பயணிகள் போக்குவரத்து சேவையை தொடர முடியாது. இதனால் பஸ் சேவையை மேற்கொள்ளும் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவதை நிறுத்த முடியாது. பஸ் உரிமையாளர்களுக்கு கீழ் பணிபுரியும் ஊழியர்கள் இருவருக்கும் சம்பளம் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது.

அத்துடன் பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபடுவதற்கு தேவையான எரிபொருள் சிபெற்கோ எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இல்லை. அதனால் அதிகமான பஸ்கள் வீதி ஓரங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.. அதேபோன்று பஸ் கட்டண அதிகரிப்பு வழங்கப்பட்டிருப்பது லங்கா ஐ.ஓ,சி, நிறுவனத்தின் எரிபொருள் விலைக்கு அல்ல. மாறாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் விலை உயர்வுக்கு அமைவாகும் என்பதை அமைச்சருக்கு தெரிவிக்கிறோம்.

## தாய்நாட்டைக் ... (03 ஆம் பக்கத் தொடர்)

அதனால் இத்தகைய செயற்பாடுகள் விலக்கிக் கொள்ளப்பட வேண்டியவை. சில நாடுகளுக்கு கொரோனா வைரஸ் தடுப்பூசி கூட பெற்றுக் கொடுக்கப்படாத நிலையில், எமது நாட்டின் உள்நாட்டு விடயங்களை பெருமளவு நிதி செலவிட்டு ஆராய்வது பெரும் அநீதியாகும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

நீதியமைச்சர் அலி சப்ரியும் நேற்றைய இந்த விஷேட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஸ)

## மறைத்து வைக்கப்பட்ட... (03 ஆம் பக்கத் தொடர்)

கூறி, ஒரு சில தரப்புகளுக்கு மாத்திரம் இரகசியமான முறையில் எரிபொருள் விற்பனை செய்யப்படுகின்றமை தொடர்பான தகவல்கள் கிடைத்துள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர். இது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

## மாத்தறை பிரதேச சபை... (03 ஆம் பக்கத் தொடர்)

நபர்களுடன் இணைந்து கடந்த (14) இரவு கேகனதுர பகுதியில் அமைந்துள்ள குறித்த வீட்டின் மீது தீ வைத்ததாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

## பௌசர் உரிமையாளர்... (03 ஆம் பக்கத் தொடர்)

தமக்கான போக்குவரத்து கொடுப்பனவு அதிகரிக்கப்படாமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே,

இலங்கை பெட்ரோலிய தனியார் பௌசர் உரிமையாளர்கள் சங்கம் (SLPPTOA) நேற்று காலை முதல் போராட்டத்தை முன்னெடுத்தது.

வேலைநிறுத்தம் காரணமாக நேற்றைய தினத்தில்(16) சுமார் 800 பௌசர்கள் போக்குவரத்தில் ஈடுபடாது என சங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர், சட்டத்தரணி சுமித் விஜேசிங்ஹவிடம் வினவிய போது, எரிபொருள் பௌசர் போகுவரத்துக்கான கொடுப்பனவை 17 வீதத்தால் அதிகரிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

## நாட்டில் எவ்வித மருந்துக்கும்... (03 ஆம் பக்கத் தொடர்)

இரத்மலானை பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டின் மருந்து தேவையை கவனத்திற் கொள்ளும் போது கையிருப்பில் உள்ள மருந்துகள் மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட மருந்துகள் போதியளவு உள்ளன. இந்நிலையில் எவ்வாறும் மருந்து தட்டுப்பாடு ஏற்பட முடியாது. எனினும் மருந்தை வைத்துக்கொண்டு சில தரப்பினர் அரசியல் செய்ய முனைகின்றனர்.

ஊடகங்களில் முகங்களை காட்டுவதற்காகவும் தமது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளவும் சிலர் மருந்து தட்டுப்பாடு நிலவுவதாக ஊடகங்களில் பொய் பிரசாரங்களை மேற்கொள்கின்றனர்.

சிலர் 30 வீதமான மருந்துகளுக்கு தட்டுப்பாடு என்றும் சிலர் 50 வீதமான மருந்துகளுக்கு தட்டுப்பாடு என்றும் பொய்களை கூறி மக்களை திசை திருப்ப முயற்சிக்கின்றனர்.

## 9 வருடங்களுக்குப் பின் ... (03 ஆம் பக்கத் தொடர்)

தெரிவித்துள்ளார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

எம்பிலிப்பிட்டிய கடதாசித் தொழிற்சாலை 3.5 பில்லியன் முதலீட்டுடன் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் முலம் 2000 தொழிற் வாய்ப்புகளை பெற்றுக்கொள்ள முடியும். முதற்கட்டமாக உள்ளூர் முதலீட்டாளர்களுக்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. நாட்டின் கடதாசி தேவையில் பெருமளவு தொகையை இதன்மூலம் பெற்றுக்கொள்ள முடியும். முதற்கட்டமாக வருடாந்தம் 75 ஆயிரம் மெட்ரிக் தொன் கடதாசியை உற்பத்தி செய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஒரேயொரு கொரோனா மரணம் பதிவு...

நாயகத்தினால் நேற்று இந்த மரணம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, கொவிட் தொற்றாளர் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 16,416 ஆக அதிகரித்துள்ளது.

## மின் உபகரண பாவனையை...

புத்தாக்க மின் உற்பத்தி அதிகார சபை நாட்டு மக்களைக் கேட்டுள்ளது.

மின் உபகரணங்களை உபயோகிப்பவர்கள் அதுதொடர்பில் அதிக கவனம் செலுத்தவேண்டியது அவசியமென, மேற்படி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் சுலக்ஷன ஜயவர்தன தெரிவித்துள்ளார். அதேவேளை, மின்சாரம் அதிகளவு உபயோகப்படுத்தப்படும் மாலை 6.30 மணி முதல் இரவு 9.30 மணி வரையிலான காலத்தில் மின் உபகரணங்களை உபயோகிப்பதை தவிர்த்துக்கொள்ளுமாறும் அவர் மக்களைக் கேட்டு ள்ளார். இக்காலத்தில் மின் உபகரணங்களை கொள்வனவு செய்வோர் அதுதொடர்பில் முக்கிய கவனம் செலுத்த வேண்டுமென்றும் கேட்கப்பட்டுள்ளது.

அதேவேளை, தொடர்ந்தும் நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் மின் துண்டிப்பு நடைமுறைப்படுத்தப்படுமென பொது பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அதற்கிணங்க "ஏ" முதல் "எல்" வரையிலான வலயங்களில் காலை 8.00 மணி முதல் பிற்பகல் 6.00 மணி வரையிலான காலப்பகுதியில் இரண்டரை மணித்தியாலங்கள் மின் துண்டிப்பு இடம்பெறவுள்ளது. அந்த வலயத்தில் மாலை 6.00 மணி முதல் இரவு 11.00 மணி வரையிலான காலப் பகுதியில் இரண்டு மணித்தியால மின் துண்டிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது. அதேவேளை, பி முதல் டபிள்யு வரையிலான வலயங்களில் முற்பகல் 8.30 மணிமுதல் பிற்பகல் 5.30 மணி வரை மூன்று மணித்தியால மின் வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் அந்த வலயங்களில் மாலை 5.30 மணி முதல் இரவு 11.00 மணி முதல் இரண்டரை மணித்தியால மின்வெட்டு இடம்பெறுமென்றும் அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஸ)

## லிட்ரோ, லாப்ஸ் எரிவாயு...

நிறுவனத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வந்துள்ள கப்பலிலிருந்து சமையல் எரிவாயுவை விடுவிப்பதற்கு, கடந்த இரண்டு வாரங்களுக்கு மேல் நேற்றுவரை முடியாமல் போயுள்ளது. இதையடுத்து, சமையல் எரிவாயு விநியோக நடவடிக்கைகளை இடைநிறுத்த நேரிட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இவற்றை விடுவிப்பதற்கான டொலரைப் பெற்றுக்கொள்ள கடந்த இரு வார காலமாக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகின்றபோதும், இதுவரை அதற்கான டொலர் கிடைக்கவில்லை. இதனால், சமையல் எரிவாயு கையிருப்பு தீர்ந்துள்ளது.இதையடுத்தே, விநியோக நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ள கப்பலிலிருந்து சமையல் எரிவாயுவை இரண்டு தினங்களுக்குள் விடுவிக்க முடியாமல் போனால், நாட்டில் மீண்டும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு ஏற்படலாம் என கடந்த ஞாயிற்றுக்கிழமை லிற்றோ கேஸ் நிறுவனம் தெரிவித்தது.

அன்றைய தினத்தில், நாட்டின் தேவையில் இரண்டு நாட்களுக்கான சமையல் எரிவாயுவே கைவசம் உள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்திருந்தது.

எவ்வாறாயினும் நாட்டின் அன்றாட சமையல் எரிவாயுவின் தேவை 1100 மெட்ரிக் தொன்னாக உள்ளது.

12.5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டர் 80.000, மற்றும் ஐந்து கிலோ கிராம் எடையுடைய சமையல் எரிவாயு சிலிண்டர் 15,000,இன்னும் 2.3 கிலோ கிராம் ரக சமையல் எரிவாயு சிலிண்டர்கள் 16,000 தேவைப்படுவதாகவும் லிற்றோ கேஸ் நிறுவனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஸ)

## ஜனாதிபதியுடனான சந்திப்பிற்கு...

மற்றும் அரசியல் தீர்வு உள்ளிட்ட முக்கிய விடயங்களை மையப்படுத்திய சந்திப்பு (15) இடம்பெறவிருந்தது. எனினும் இச்சந்தப்பு எதிர்வரும் (25) திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. இலங்கை பிரஜைகள் என்ற அடிப்படையிலும், அரசியல் கட்சி என்ற ரீதியிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்திப்பதில் எவ்வித சிக்கலும் இல்லை என அமைச்சர் கூறினார். கடந்த பெப்ரவி (25) காணி அபகரிப்பு நடவடிகைக்கு எதிர்ப்பு தெரிவித்து வடக்கு, கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளால் ஜனாதிபதி செயலக வளாகத்தில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தோர் ஜனாதிபதியை சந்திப்பதற்கு அனுமதி கோரியிருந்த போதிலும், அதற்கான அனுமதி மறுக்கப்பட்டிருந்தது, அத்தோடு கடந்த ஆண்டு ஜூன் மாதம் ஏற்பாடு செய்யப்பட்ட சந்திப்பும் இரத்து செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மருந்துப் பொருட்களின் விலைகளில்...

சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், 2019 ஆம் ஆண்டு 60 வகையான மருந்துகள் தொடர்பில் விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டு விலைகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபை சட்டத்தின் 142 ஆம் பிரிவின் கீழ் சுகாதார அமைச்சரினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் 19 ஆம் திகதி மருந்துகளின் விலைகள் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு தற்போது புதிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய 500 மில்லி கிராம் பெரசிட்டமோல் வில்லையொன்றின் அதிகபட்ச சில்லறை விலை 2 ரூபா 30 சதமாக அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் புதிய விலை திருத்தத்துக்கமைய இதன் விலை 2 ரூபாய் 97 சதமாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

குறித்த விலைத்திருத்தத்திற்கு அமைய பரசிட்டமோல் (Paracetamol) 500 மில்லி கிராமின் புதிய விலை 2 ரூபா 97 சதமாகும்.

## பொதுமக்கள் அனுபவிக்கும்... (தொடர்)

பொருளாதார சபையையும், அதற்கு ஒத்துழைப்பு வழங்க ஒரு ஆலோசனைக் குழுவையும் நியமித்தேன். இதன் மூலம், நான் எடுக்கும் முடிவுகள் செயற்படுத்தப்படுகிறதா என்பதை தொடர்ந்து கண்காணிக்கவும் நடவடிக்கை எடுப்பேன். எனவே, மக்களுக்காக நான் மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் நம்பிக்கை வைக்குமாறு நான் உங்களை முதலில் கேட்டுக்கொள்கிறேன்.

நான் மக்களின் சிரமங்களை நன்கு அறிந்த ஒருவர். நாங்கள் எதிர்கொண்ட கொடூரமான பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தில் முன்னணியில் இருந்த படைவீரர் மற்றும் யுத்தத்தில் சிக்கிய அப்பாவி பொதுமக்கள் எதிர்கொண்ட அனைத்து சிரமங்களையும் நன்கு புரிந்து கொண்டு அவற்றை முறையாக நிர்வகிக்க என்னால் முடிந்தது.

இன்றைய இக்கட்டான நிலைமை, நம் நாடு மட்டும் முகங்கொடுக்கும் ஒரு விடயமல்ல. முழு உலகமும் ஏதோ ஒரு வகையில் ஒரு சிக்கலான சூழ்நிலையின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளன. கொவிட் நோய்த் தொற்றினால் அதிகரித்த கப்பல் கட்டணங்கள், பொருட்களின் விலை அதிகரித்தல் மற்றும் சில பொருட்களின் தட்டுப்பாடு ஆகிய அனைத்தும் நம் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டவை. ஆனாலும் நாம் மக்களின் பக்கம் நின்று நிவாரண நடைமுறைகளைப் பின்பற்றுகிறோம்.

இந்த நெருக்கடி ஒரு போதும் என்னால் உருவாக்கப்பட்டதொன்று அல்ல. அன்று இந்த நெருக்கடியை உருவாக்குவதற்கு காரணமானவர்கள் இன்று மக்கள் முன்னிலையில் அரசாங்கத்தை விமர்சித்து வரும் நிலையில், இந்த நெருக்கடியை விரைவில் தீர்த்து மக்களுக்கு நிவாரணம் வழங்கவே நான் முயற்சிக்கிறேன்.

இத்தகைய நெருக்கடியான சூழ்நிலையில், ஒரு நாட்டின் அரசியல்வாதிகளினதும் புத்திஜீவிகளினதும் பொறுப்பு ஒன்றிணைந்து பிரச்சினைகளுக்கு கூட்டாக தீர்வு காண்பதேயாகும்.

இன்றைய பிரச்சினைகளுக்கு மூலகாரணம் நமது அந்நிய செலாவணி நெருக்கடி ஆகும்.

ரூபாய் நெகிழ்வுடன் இயங்குவதற்கு இடமளிக்கப்பட முன்னர் இருந்த நிலைமையின் பிரகாரம், இந்த ஆண்டு எதிர்பார்க்கப்படும் ஏற்றுமதி வருமானம் 12 பில்லியன் டொலர்கள் ஆகும். கடந்த இரண்டு மாத கால தரவுகளின்படி, இந்த ஆண்டு 22 பில்லியன் டொலர்கள் இறக்குமதி செலவை நாம் ஏற்க வேண்டியுள்ளது. அதன்படி, 10 பில்லியன் அமெரிக்க டொலர் வர்த்தகப் பற்றாக்குறை உருவாகும்.

அண்மைக்கால தரவுகளின்படி, இந்த ஆண்டு சுற்றுலாத்துறையிலிருந்தும் அதேபோன்று தகவல் தொழிநுட்பம் போன்ற சேவை ஏற்றுமதியில் இருந்தும் சுமார் 03 பில்லியன் டொலர்கள் கிடைக்கக்கூடியதோடு, வெளிநாட்டு தொழிலாளர்களின் பரிமாற்றம் மூலம் 02 பில்லியன் டொலர்கள் கிடைக்கும். அதன்படி, வர்த்தகப் பற்றாக்குறை 05 பில்லியன் டொலர்களாக இருக்கும்.

இதற்கிடையில், இந்த ஆண்டு 6.9 பில்லியன் டொலர் கடன் தவணைகள் மற்றும் இறையாண்மை பத்திரங்களுக்கு செலுத்தப்பட வேண்டும். அப்போது 11.9 பில்லியன் டொலர் பற்றாக்குறை ஏற்படும்.

ஏனைய கடன் உதவிகள் மற்றும் முதலீடுகளாக 2.5 பில்லியன் டொலர்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த வகையில் அந்நியச் செலாவணியில் மொத்தம் 9.4 பில்லியன் டொலர் பற்றாக்குறை காணப்படுகின்றது.

ஆனால் ரூபாய் நெகிழ்வின் பின்னர் ஏற்றுமதி வருமானம் 13 பில்லியன் டொலர்கள் வரை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் இறக்குமதி செலவை 22 பில்லியன் டொலரில் இருந்து 20 பில்லியன் டொலர்கள் வரை குறைத்துக் கொள்ளவும் முடியும். அப்படியானால், வர்த்தக பற்றாக்குறையை 07 பில்லியன் டொலர்கள் வரை குறைக்க முடியும். அதைத்தான் நாம் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்.

அதேபோன்று, சேவை ஏற்றுமதியின் மூலம் 04 பில்லியன் டொலர்கள் மற்றும் வெளிநாட்டு தொழிலாளர்களின் பரிமாற்றம் மூலம் 05 பில்லியன் டொலர்களையும் எதிர்பார்க்கலாம். அதன்படி, நமது வர்த்தக பற்றாக்குறை 2.4 பில்லியன் டொலர்கள் ஆகும்.

இந்தப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யவும், நமது அந்நியச் செலாவணி கையிருப்பை அதிகரிக்கவும் நாம் செயற்பட வேண்டும்.

இதற்காக, சர்வதேச நிதி நிறுவனங்கள் மற்றும் நட்பு நாடுகளுடன் எங்களது கடன் தவணையை திருப்பிச் செலுத்துவது குறித்து நாம் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளோம். இதனை எமது நாட்டுக்கு நன்மை பயக்கும் வகையில் புதிய பொறிமுறையின் மூலம் செயற்படுத்துவதற்கு அரசாங்கம் பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடி வருகின்றது. சர்வதேச நாணய நிதியத்துடனான நேற்றைய கலந்துரையாடலும் இந்த நோக்கத்துடனேயே இடம்பெற்றது.

அந்த கலந்துரையாடல் மூலம் நாம் எதிர்பார்ப்பது, ஒரு வருடத்துக்கு நாங்கள் செலுத்த வேண்டிய கடன் தவணைகள், இறையாண்மை பத்திரங்கள் ஆகியவற்றைச் செலுத்துவதற்கான பொறிமுறையொன்றை உருவாக்குவதாகும். சர்வதேச நாணய நிதியத்துடனான எனது கலந்துரையாடலுக்குப் பிறகு, அனுகூலங்கள், பிரதிகூலங்களை ஆய்வுசெய்து அவர்களுடன் இணைந்து செயற்படுவதற்கு நான் முடிவு செய்தேன்.

கடந்த காலத்தில் நான் எடுத்த சில முடிவுகளால் இறக்குமதிச் செலவை பெருமளவு கட்டுப்படுத்த முடிந்தது. இந்த பிரச்சினையை முன்கூட்டியே கண்டுகொண்டதால் இரண்டு ஆண்டுகளுக்கு முன், வாகனங்களை இறக்குமதி செய்வதை நிறுத்திவிட்டோம். மேலும், உள்நாட்டில் நமது தேவைகளை பூர்த்தி செய்யும் கைத்தொழில்களை ஊக்குவித்தோம். அதேபோன்று, பல அத்தியாவசியமற்ற உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதை நிறுத்திவிட்டு, அந்த பயிர்களை நம் நாட்டில் பயிரிடுவதற்கு நாம் நடவடிக்கை எடுத்தோம். அவற்றின் வெற்றிகரமான முடிவுகளை இப்போது காண்கிறோம்.

இறக்குமதிச் செலவைக் கட்டுப்படுத்துவதில் நாம் எதிர்கொள்ளும் மிகக் கடுமையான பிரச்சினை, உலகச் சந்தையில் எண்ணெய் விலைகள் வேகமாக அதிகரிப்பதாகும். சராசரியாக, நமது இறக்குமதிச் செலவில் 20 சதவீதத்திற்கும் அதிகமாக எரிபொருள் இறக்குமதிக்காக செலவிடப்படுகிறது. கடந்த சில மாதங்களில் மட்டும் உலக சந்தையில் எரிபொருளின் விலை இருமடங்காக அதிகரித்துள்ளது. இதனால்தான் நம் நாட்டிலும் எரிபொருளின் விலை அதிகரிக்கப்படுவது தவிர்க்க முடியாததாக இருக்கின்றது. நம் நாட்டில் வாகனங்களுக்கு மட்டுமின்றி மின்சார உற்பத்திக்கும் எரிபொருள் அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது.

அதனால்தான், முடிந்தவரை புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலங்களைப் பயன்படுத்த நான் தொடர்ந்தும் கலந்துரையாடி குறித்த நிறுவனங்களை ஊக்கப்படுத்தினேன்.

எனவே எரிபொருள் மற்றும் மின்சாரப் பாவனையை இயன்றவரை கட்டுப்படுத்துவதன் மூலம் மக்களும் இந்த நேரத்தில் நாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்க முடியும். இந்தக் கடினமான நேரத்தில் அந்தப் பொறுப்பை நீங்கள் புரிந்துகொண்டு செயற்படுத்துவீர்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

கொவிட் தொற்றுநோய் காரணமாக வீழ்ச்சியடைந்த சுற்றுலா கைத்தொழில் மீண்டும் எழுச்சிபெற்று வருகின்றது. கடந்த இரண்டு மாதங்களில் இலங்கைக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை வெகுவாக அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிகிறது.

அதேபோன்று, தகவல் தொழிநுட்பம் மற்றும் தொலைத்தொடர்பு துறைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை அரசாங்கம் துரிதப்படுத்துவதால், இத்துறைகள் மூலம் நாட்டுக்கு வரும் வருமானம் அதிகரித்து வருகிறது.

நாம் வரலாற்றில் பலமுறை வீழ்ந்து, எழுந்த தேசம் ஆகும். அந்நிய படையெடுப்பு, பெரும் பஞ்சம், இயற்கை அனர்த்தங்கள், பயங்கரவாத அச்சுறுத்தல்கள் போன்றவற்றை நாம் எதிர்கொண்டு அதிலிருந்து மீண்டுள்ளோம். கடந்த கொரோனா நோய்த் தொற்றை நாம் எதிர்கொண்ட விதம் சர்வதேச அமைப்புகளால் கூட பாராட்டப்பட்டது.

தீர்வுகளை நடைமுறைப்படுத்தும்போது சில காலம் சிரமங்களைச் சந்திக்க நேரிடும் என்பதை நாம் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். எனவே, நீங்கள் அனைவரும் தைரியத்தை இழக்காமல் இந்த நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு ஒரு தேசமாக ஒன்றிணையுமாறு உங்கள் அனைவரிடமும் கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் என்னிடம் பாதுகாப்பு, ஒழுக்கம், நவீனமயமான அபிவிருத்தி அடைந்த நாடு, குழந்தைகளுக்கு சிறந்த கல்வி ஆகியவற்றையே கேட்டீர்கள். எனது பதவிக்காலத்தில் ஏறக்குறைய இரண்டரை வருடங்கள் உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் தொற்று நோயிலிருந்து பாதுகாப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்டது. ஆரோக்கியமான தாய் நாட்டில் எனது எதிர்கால பதவிக்காலத்தை அந்த அடிப்படை இலக்குகளுக்காக அர்ப்பணிப்பேன்.

அமைச்சரவை, பாராளுமன்றம் மற்றும் அரச ஊழியர்களிடமும் நான் கேட்டுக்கொள்வது, எமது பிள்ளைகளுக்கு சிறந்த நாட்டை வழங்குவதற்காக, எம்மிடம் எதிர்பார்த்த இலக்குகளை அடைந்துகொள்ள நாம் ஒரு குழுவாக இலட்சியத்துடனும் தியாகத்துடனும் செயற்படுவதையே ஆகும்.

உங்கள் அழைப்பின் பேரிலேயே நான் அரசியலுக்கு வந்தேன். நீங்கள் என் மீது மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளீர்கள். அந்த நம்பிக்கையை பாதிக்கும் வகையில் செயற்படாது, அர்ப்பணிப்புடன் பாதுகாப்பேன்.



கொழும்பு 13, புதுச்செட்டித் தெருவில் அமைந்துள்ள சீரடி சாயி மந்திர் இராஜ கோபுர மஹா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளதையிட்டு நேற்று (16) புதன்கிழமை தலைவர் எஸ்.என். உதயநாயகம் தலைமையில் சிவஸ்ரீ லக்ஷ்மிகாந்த ஜெகதீசன் குருக்களின் கணபதி ஹோமம் பூஜையுடன் கலசம் இராஜகோபுரத்தில் அமைக்கப்பட்டது. முதலில் பிரசாந்திக்கொடி ஏற்றப்பட்டதும் கலசம் சாய் அன்பர் சர்வகுணதேவி சண்முகநாதன் அம்மா தலைமையில் கலசம் ஊர்வலமாக சீரடி ஆலயத்தை வந்தடைந்தது. பின்னர், ஆலாத்திஎடுத்து, பஞ்சதீபம் காண்பிக்கப்பட்டு தலைவரிடம் கலசம் ஒப்படைக்கப்பட்டது. (படம் வத்தளை விஷேட நிருபர்)

## புத்தளம் நகர சபை பிரிவில் சிறுவர் பூங்கா திறப்பு



**புத்தளம் தினகரன் நிருபர்**

புத்தளம் நகரபிதா எம்.எஸ்.எம்.ரபீக் நகர சபையின் மணல்குன்று கழிவு நீர் முகாமைத்துவ நிலைய வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய சிறுவர் பூங்காவை நகரசபை உறுப்பினர் ரனீஸ் பதூர்தீன் (15) சகிதம் திறந்து வைத்தார். ரம்மியமான சூழலில் அமைக்கப்பட்ட இப்பூங்கா கழிவுப்பொருட்களைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் இதற்காக குறித்த நிலைய உத்தியோகத்தர் எம். பாயிஸும் பங்களிப்பு நல்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து வளாகத்தில் மர நடுகை நிகழ்வும் இடம்பெற்றது. இந்நிகழ்வுகளில் நகரசபை செயலாளர் பிரீத்திகா, நகர சபை நிர்வாக அதிகாரி எம்.நௌஸாத், சமூக அபிவிருத்திப் பிரிவு உத்தியோகத்தர் ஜலீல் ஜஸ்லீன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## திறப்பனை பிரதேச வீதிகளுக்கு காபட்

**திறப்பனை தினகரன் நிருபர்**

திறப்பனை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட அளுத்புஞ்சி குளம் தோடாமடுவ வீதி காப்பட் வீதியாக அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வீதி அபிவிருத்தி அதிகார சபை இதன் அபிவிருத்தி வேலைகளை பொறுப்பேற்றுள்ளது. இதற்கு தேவையான நிதி நெடுஞ்சாலைகள் அமைச்சின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 60 மில்லியன் ரூபா பணம் இதற்காக செலவிடப்படவுள்ளன. இதன் நிர்மாணப் பணிகள் ராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தலைமையில் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

# 2021 ஆம் ஆண்டின் சிறந்த விமானப்படை வீரர், வீராங்கனைகளுக்கான விருதுகள்

இலங்கை விமானப்படை நலனுக்காக தங்கள் தொழில்துறையை தாண்டி புதுமையான தயாரிப்புகளைக் கண்டறிதல் போன்ற காரணங்களை கொண்டு சிறந்த விமானப்படை வீரவீராங்கனைகளை தெரிவு செய்யும் விழா, கடந்த (14 ) விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரனவின் பங்கேற்பில் கட்டுநாயக்க ஈகிள்ஸ் லகுன் வீவ் மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வுகள் பாரம்பரிய முறையில் தீபம் ஏற்றப்பட்டு 2 நிமிட மௌன அஞ்சலியுடன் ஆரம்பிக்கப்பட்டன. மேலும் விமானப் படையின் நடன குழுவினரின் கலாசார நடனமும் இடம்பெற்றது. இந்த நிகழ்வின் ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் எயார் கொமடோர் லசித சுமணவீர அவர்களினால் விமானப்படைத் தளபதி உட்பட அனைத்து விருந்தினர்களும் வரவேற்கப்பட்டனர்.



கடந்த 2021 ஆம் ஆண்டில் தமது தொழில் பிரிவில் சிறந்த சேவையாளர்களை அந்தப் பிரிவின் பணிப்பகம் மூலம் தெரிவு செய்து, கடந்த வருடம் தங்கள் தொழிலைத் தாண்டி புதுமையான தயாரிப்புகளைக் கண்டறிதல் போன்ற விடயங்களில் ஈடுபட்ட சிறந்த படைவீர வீராங்கனைகளை கௌரவிக்கும் வகையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது .

இந்த ஆண்டு சிறந்த விமானப் படை வீரராக கட்டுநாயக்க விமானப்படைத் தளத்தில் அமைந்துள்ள விமான பழுதுபார்க்கும் படைப்பிரிவைச் சேர்ந்த மாஸ்டர் வாரண்ட் அதிகாரி ஈ.எம்.ஜீ.ஐ. தயாபெமாவுக்கும், சிறந்த விமானப்படை வீராங்கனையான வவுனியா விமானப்படை தளத்தில் 23 ஆம் ரெஜிமென்ட் படைப்பிரிவில் பணிபுரியும் கோப்ரல் விக்கிரமசிங்கவுக்கும் வெற்றிக்கோப்பை வழங்கப்பட்டது. இவர்களுக்கான வெற்றிக் கோப்பையை விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்ஸன பத்திரன வழங்கி வைத்தார். இந்த நிகழ்வில் விமானப்படை பணிப்பாளர்கள் மற்றும் அதிகாரிகள், படைவீரர்கள் மற்றும் குடும்ப அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வுகள் அனைத்தும் நடைமுறையில் உள்ள சுகாதார விதிமுறைப்படி இடம்பெற்றன.

# சீரடி சாயிபாபா ஆலய இராஜகோபுர கும்பாபிஷேகம்

கொழும்பு புதுச்செட்டித் தெருவிலுள்ள சீரடிசாயி பாபாவின் ஆலயத்தின் இராஜகோபுர கும்பாபிஷேகம் மார்ச்(18) வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் இடம்பெறவுள்ளது.

ஸ்ரீலங்கா சீரடி சாயி மத்திய நிலையத்தின் தலைவர் திரு.எஸ். என். உதயநாயகத்தின் அழைப்பையேற்று வருகை தந்துள்ள சென்னை மைலாபூர் சீரடி சாயி பாபா ஆலய அகில இந்திய சாய் சமாஜத்தின் தலைவர் திரு.கே. தங்கராஜ் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறும்.

சமாஜத்தின் செயலாளர் திரு.ஏ. செல்வராஜ் மற்றும் அதன் உறுப்பினர்கள் முன்னிலையில் பிரதம குரு ப்ரம்மஸ்ரீ இலஷ்மீகாந்த ஜெகதீசக் குருக்களின் வழிநடத்தலில், கஜமுக பூஜையுடன் கோவில் யானை கோபுர வாசல் கதவை திறந்துவைக்கவுள்ளது.இதில், கோமாதா பூஜையுடன் கோவில் பசுமாடு, கன்றுடன் அழைத்து வரப்பட்டு, சீரடிசாயி நாதருக்கு அபிஷேக பூஜையுடன் சீரடி சாயி இராஜ கோபுர கலச அபிஷேகமும் நடைபெறும். அன்று மாலை சிறப்பு நிகழ்வாக சீரடி சாயி பஜன் மற்றும் பல்லக்கு பவனி இடம்பெறும். இன்று (17) வியாழன் பௌர்ணமி தினத்தன்று மாலை 6 மணிக்கு விஷேட சீரடி சாயி தீப பூஜையும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**பெயர் மாற்றம்**

உலுவிடிகே, கிதுலம்பிட்டிய, பூதலேவத்த, இல. 81/C, ஐச் சேர்ந்த சமந்த ஆகிய நான் புனித இஸ்லாம் மதத்தைத் தழுவி எனது பெயரை அப்துர் ரஹ்மான் றிஸ்வான் என மாற்றிக் கொண்டுள்ளேன் எனவும். இனிமேல் சகல ஆவணங்களிலும் புதிய பெயரையே பாவிப்பேன் எனவும். இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கும் மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

**அப்துர் ரஹ்மான் றிஸ்வான்**

**பெயர் மாற்றம்**

புத்தளம் மாவட்டம், புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவு, 618/A, தில்லையடி கிராம சேவையாளர் பிரிவு, 161/142, வெளிச்சுற்று வீதி, புத்தளம் எனும் முகவரியை சேர்ந்த நான் எனது 4732 இலக்கமுடைய பிறப்பு சான்றிதழில் காணப்படும் பேரின்பநாதன் சுதாசினி என்ற பெயரை பேரின்பநாதன் சுபாசினி என மாற்றிக் கொண்டுள்ளேன் என இத்தால் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகிறேன்.

**பேரின்பநாதன் சுபாசினி**

**செவ்வாய்க்கிழமை** www.nlb.lk
திகதி 15.03.2022
உத்தியோகபூர்வ முடிவுகள்

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4707
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 14,386,030.00
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள் 9 6 8 2 6 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 10,200,105.00

Mega POWER மெகா பவர் கோடி 23+
சீட்டிழுப்பு இலக்கம் 1055
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 5,893,740.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு
ரூ. 241,814,218.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து T
சுப்பர் இலக்கம் 04
வெற்றி இலக்கங்கள் 28 35 42 50

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 737
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,627,700.00
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கங்கள் 15 21 71 81
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 102,693,990.40

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

## பெறுகை அறிவித்தல்

### மாவட்ட செயலகம் - பதுளை

### 2022.03.09 பத்திரிகை அறிவித்தல் திருத்தம் செய்தல்

01. பதுளை மாவட்ட செயலகத்தினால் 2022.03.09 பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை அறிவித்தல் கீழ்க்காணுமாறு திருத்தப்படுவதுடன், ஏனைய பிரிவுகள் அவ்வாறே காணப்படும்.

| தொடர் இலக்கம் | கைத்தொழிலின் பெயர் | திருத்தப்படும் பிரிவு: மீளளிக்கப்படும் வைப்புத் தொகை (கேள்விப் பிணை) காசாக/ இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கி பிணை முறியின் மூலம் | |
|---|---|---|---|
| | | காசாக | வங்கிப் பிணை முறி |
| 01. | மஞ்சல் விதை கொள்வனவு செய்தல் | சமர்ப்பிக்கப்படும் கிலோ அளவு x ரூ. 1.50 | சமர்ப்பிக்கப்படும் கிலோ அளவு x ரூ. 3.00 |

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாவட்ட செயலகம்,**
**பதுளை.**
2022.03.15

**கல்வி அமைச்சு - ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி**

## 2022/2023 ஆம் ஆண்டிற்கான சிற்றுண்டிச்சாலை நடாத்துவதற்கான கேள்விப்பத்திரம் கோரல்

ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியில் 2022/2023 ஆம் ஆண்டிற்கான சிற்றுண்டிச்சாலை நடாத்துவதற்காக முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் தகைமையுடைய நிறுவனத்திடமிருந்து கேள்விச் சபையின் தலைவரினால் **2022-03-31 திகதி மு.ப 10.00 மணிவரை கோரப்படுகிறது. அன்றையதினம் மு.ப10.30மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்.**

சிற்றுண்டிச்சாலை நடாத்துவதற்கான கட்டிட வசதி, மேசை, கதிரை, மற்றும் தண்ணீர் வசதி இக்கல்லூரியினால் வழங்கப்படும். கல்லூரியின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஆசிரியபயிலுநர்களுக்குத் தேவையான உணவு வகைகள், காகிதாகிகள் மற்றும் தேவையான பொருட்களை விற்பனை செய்ய முடியும் என்பதுடன், அப்பொருட்கள் விசேட சலுகை விலைகளுக்கே விற்பனை செய்யப்பட வேண்டும்.

கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வதும், நிராகரிப்பதற்குமான அதிகாரம் ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியின் கேள்விமனு குழுவிற்கே உரித்தாகும்.

இக்கேள்விப்பத்திரத்திற்கான விண்ணப்பப்படிவத்தை மீளளிக்கப்படாத கட்டணமான ரூபா1000/- ஐ (ஆயிரம் ரூபாய்) செலுத்திய பின்னர் ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி பதிவாளரிடம் **2022-03-30 திகதி பி.ப. 2.00 மணிவரை** பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பதிவுத்தபாலின் மூலம் பீடாதிபதி, ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரி, பத்தனை என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"2022/2023 ஆம் ஆண்டிற்கான சிற்றுண்டிச்சாலை நடாத்துதல்"** எனகுறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

**பீடாதிபதி**
**ஸ்ரீபாத தேசியகல்வியியற் கல்லூரி,**
**பத்தனை.**

# பேசாலை காற்றாலை மின் ஆலைகள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் ஆராய்வு

மன்னார், பேசாலை பிரதேசத்தில் மீள்புதுப்பிக்கத்தக்க வகையில் காற்றாலை மின் ஆலைகளை உருவாக்குவதற்கான சாதகங்கள் தொடர்பாக ஆராய்வதற்கான கள விஜயத்தினை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டார்.

காற்றாடி மின் ஆலைகளை பொருத்தப்பட்டிருப்பதால் மீன் இனப்பெருக்கம் பாதிக்கப்படுவதாக சிலர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர். அதுதொடர்பான



விஞ்ஞா ன ரீதியான ஆய்வுகளை மே ற்கொள்ளுமாறும் துறைசார்ந்தவர்களுக்கு கடற்றொழில் அமைச்சர் ஆலோசனைகளை வழங்கினார்.

இதனி டையே பேசாலை பிரதேசத்தில் கரை வலைத்தொழிலில் ஈடுபடுகின்ற கடற்றொழிலாளர்களை நே ர டியாகச் சந்தித்த கடற்றொழில் அ மைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அவ ர்கள் எதிர்கொள்ளும் தொழில் ரீதியான சவால்கள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் தொடர்பாக கேட்டறிந்தார்.

## கிளிநொச்சி மாவட்டம்: எரிபொருள் வள பங்கீடு தொடர்பில் கலந்துரையாடல்

**கிளிநொச்சி குறூப் நிருபர்**



கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் எரிபொருள் வள பங்கீடு தொடர்பில் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பிரதிநிதியுடன் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் (15) இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் எரிபொருள் விநியோகம் தொடர்பில் ஆராயப்பட்ட விடயங்களில் வீட்டுப் பாவனைக்கான மண்ணெண்ணெய் விநியோகத்தினை வாராந்தம் 5 லீற்றர் வீதம் குடும்ப அட்டை ஊடாக பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்களில் பொதுமக்கள் பெற்றுக் கொள்ளும் வகையில் ஏற்பாடுகளை முன்னெடுக்க இதன்போது கலந்துரையாடப்பட்டது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் குறிப்பாக விவசாயம், மீன்பிடித்துறைகளுக்கான விநியோகத்தினை சம்மந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளின் உறுதிப்படுத்தலுடன் கூடிய கடிதத்தினை எரிபொருள் நிரப்பு நிலையங்களில் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளும் வகையில் ஏற்பாடுகளை முன்னெடுக்க இக்கலந்துரையாடலில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

## ஹெரோயின் போதைப் பொருளுடன் இருவர் கைது

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பனிப்புலம் கலட்டி பகுதியில் ஹெரோயின் போதைப் பொருளுடன் பெண் ஒருவர் உட்பட இருவர் நேற்று செவ்வாய்க்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பனிப்புலம் கலட்டி பகுதியிலுள்ள வீடொன்றினை பொலிஸார் முற்றுகையிட்டிருந்தனர்.

இதன்போது வீட்டில் 1கிராம் 70 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டது. ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் 36 வயதான பெண் ஒருவரை கைது செய்தனர்.

இதனைத் தொடர்ந்து நடத்தப்பட்ட மேலதிக விசாரணை மற்றும் சோதனை நடவடிக்கையின்போது சங்கானையை சேர்ந்த 27 வயது இளைஞனும், கொலன்னாவ வெல்லம்பிட்டிய பகுதியை சேர்ந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## தொப்புள்கொடி உறவு என்பது ஒரு மேடை பேச்சாக இருக்கக் கூடாது

### யாழ். இந்திய துணைத்தூதுவர்

**கிளிநொச்சி குறூப் நிருபர்**

தொப்புள்கொடி உறவு என்பது ஒரு மேடை பேச்சாக இருக்கக் கூடாது என யாழ் இந்திய துணைத் தூதுவர் ஸ்ரீ ராகேஷ் நடராஜ் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஜெயபுரம் கடற்தொழில் சம்மேளனம், பூநகரி நக்ரா நிறுவனம் என்பன இணைந்து யாழ் இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் கௌதாரி முனை பொதுநோக்கு மண்டபத்தில் உலர் உணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்திய அரசாங்கத்திடமிருந்து மனிதாபிமான உதவிகள் என்ற வகையில் தலா 6000 ரூபா பெறுமதியான 200 உலருணவுப் பொதிகள் வழங்கிவைக்கப்பட்டன.

இதன்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். மேலும் அவர் தெரிவிக்கையில்



இந்திய அரசு தொடர்ந்தும் வடக்கு மாகாணத்தில் குறிப்பாக மீனவ சமூகத்தில் கொண்டுள்ள அக்கறை காரணமாக இவ்வுதவிகளை வழங்கி வைத்துள்ளது. எங்களது எண்ணங்கள், சிந்தனைகள் எப்பொழுதும் உங்களுடன் இருக்கும். இந்திய அரசு வடக்கில் குறிப்பாக மீனவச் சமூகம் பயன்படுகின்ற வகையில் முதலீடுகளை மேற்கொள்ளும் என அவர் தெரிவித்தார்.





## தனியார் பஸ்ஸின் சாரதியை தாக்கியவரின் விளக்கமறியல் நீடிப்பு

**கரவெட்டி தினகரன் நிருபர்**

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸின் சாரதியை தாக்கியவரை எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதவான் உத்தரவிட்டுள்ளார். பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸின் சாரதி கடந்த வாரமளவில் கோப்பாய் பகுதியில் வைத்து தாக்கப்பட்டிருந்தார். இதுதொடர்பில் கோப்பாய் புலனாய்வு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

சந்தேகநபர், சங்கானை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார். மேலும் நால்வரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். வெளிநாட்டில் இருக்கும் ஒருவர் பணம் கொடுத்து கைக்கூலிகளை ஏவி, வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

## கேரளா கஞ்சாவுடன் பெண் உட்பட மூவர் கைது

**வவுனியா விசேட நிருபர்**



ஓமந்தை இராணுவ சாவடியில் வாகனத்தில் கேரளா கஞ்சாவினை கடத்திச்சென்ற குற்றச்சாட்டில் பெண் ஒருவர் உட்பட மூவர் நேற்று (16.03) காலை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 8 கிலோ 75 கிராம் கேரளா கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

ஓமந்தை இராணுவ சாவடியில் சந்தேகத்திற்கிடமான முறையில் பயணித்த கார் ஒன்றினை மறித்து சோதனைக்குட்படுத்திய போது வாகனத்தின் பிற்பகுதியில் இருந்த கேரளா கஞ்சாவினை பொலிஸார் கைப்பற்றினர். அதன்பின்னர் தொடர்ச்சியாக இடம்பெற்ற சோதனையின் போது வாகனத்தின் ஆசனங்களின் கீழ்பகுதி போன்றவற்றிலிருந்து நான்கு கேரளா கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டன.

இதனையடுத்து வாகனத்தில் பயணித்த மாகாநுவர, மேல்சிறிபுர, கசலக பகுதிகளைச் சேர்ந்த பெண் உட்பட மூவரை இராணுவத்தினர் கைது செய்ததுடன் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட கார், கேரளா கஞ்சா என்பவற்றையும் மீட்டுள்ளனர். சந்தேகநபர்களை ஓமந்தை பொலிஸாரிடம் இராணுவத்தினர் ஒப்படைத்தனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடம் முன்னெடுக்கப்பட்ட ஆரம்ப கட்ட விசாரணைகளில் யாழ்ப்பாணத்திலிருந்து குருநாகல் நோக்கி கேரளா கஞ்சாவினை கடத்திச்சென்றுள்ளமை தெரியவந்துள்ளதுடன், மேலதிக விசாரணைகளின் பின்னர் சான்றுபொருட்கள் மற்றும் சந்தேகநபர்களை வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை ஓமந்தை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## தேசிய சேமிப்பு வங்கியின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழா



**ஓமந்தை விஷேட நிருபர்**

இலங்கையின் முன்னணி வங்கிகளில் ஒன்றான தேசிய சேமிப்பு வங்கியின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று (16) சிறப்பாக கொண்டாடப்பட்டது. வவுனியாவில் அமைந்துள்ள தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் க. தேவகுமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மத தலைவர்களின் ஆசியுரைகளுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகியிருந்ததுடன் 50 ஆண்டு நிறைவை அனுஷ்டித்து பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தது.

## ஆசிரிய கலாசாலையில் சமய தீட்சை

கோப்பாய் ஆசிரிய கலாசாலையிலுள்ள யோகலிங்கேஸ்வரப் பெருமான் ஆலயத்தில் சமய தீட்சை வழங்கும் நிகழ்வு இன்று (17.03.2022) காலை 7 மணிக்கும் 9 மணிக்கும் இடையில் இடம்பெறவுள்ளது. ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ வி. செல்வசேனக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கலாசாலையின் ஆசிரிய மாணவர்கள் சமய தீட்சை பெறவுள்ளனர். இந்நிகழ்வில் ஆசிரிய மாணவர்களை தவிர ஆர்வமுள்ள எவரும் கலந்து சமய தீட்சை பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலோலி அருள்மிகு பத்திரகாளி சமேத வீரபத்திரர் திருக்கோவில் கும்பாபிஷேகம்

**கரவெட்டி தினகரன் நிருபர்**

புலோலி தெற்கு வடுவாவத்தை அருள்மிகு பத்திரகாளி சமேத வீரபத்திரர் திருக்கோவில் புனராவர்த்தன அஷ்டபந்தன ஏககுண்டபக்ஷ மகா கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி விழா எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6.22 மணி முதல் 7 மணி வரையான சுப வேளையில் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்துக்கான கிரியைகள் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.25 மணிமுதல் ஆரம்பமாகி தொடர்ந்து இடம்பெறும். அடியார்கள் பாதுகாப்புச் சாத்துதல் 19 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.00 முதல் மறுநாள் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 00 மணி வரை இடம்பெறும். சிவஸ்ரீ சு வித்தியாபரக்குருக்கள் பிரதம குருக்களாக இருந்து கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார். தொடர்ந்து 21 தினங்கள் மண்டலாபஷேகம் நடைபெறும்.

## பறங்கியாற்றில் சட்டவிரோத மணல் அகழ்வு: இருவர் கைது



முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேசத்துக்குட்பட்ட பறங்கியாற்று பகுதியில் அனுமதிப்பத்திர விதிமுறைகளை மீறி மணல் அகழ்வில் ஈடுபட்ட இரு உழவுயந்திரங்கள் மற்றும் அதன் சாரதிகள் இருவரும் பொலிஸாரால் நேற்று மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

நட்டாங்கண்டல் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் இச்சுற்றிவளைப்பில் ஈடுபட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட உழவு இயந்திரங்கள் இரண்டும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், அதன் சாரதிகள் இருவரையும் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதித்துள்ளனர்.

## மனைவியை விறகுக்கட்டையால் தாக்கிய கணவன்

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியாவில் குடும்ப வன்முறையினால் கணவன் மனைவிக்கிடையே சண்டை ஏற்பட்டுள்ளது. ஆத்திரமடைந்த கணவன் தனது கையிலிருந்த தலைக்கவசம் மற்றும் விறகுக்கட்டையால் மனைவியை தாக்கியதில் அவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து மேலும் தெரியவருகையில் ,

வவுனியா ஏ 9 வீதியில் தேனீர் கடை நடாத்தி வரும் கணவன் வேறு ஒரு பெண்ணுடன் நெருங்கிப்பழகி வருவதாக மனைவிக்கு கிடைத்த தகவலால் கடந்த இரண்டு வருடங்களாக குடும்பத்துக்குள் முரண்பாடுகள் நிலவிவருகின்றது. இந்நிலையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக ஆத்திரமடைந்த கணவன் கையில் வைத்திருந்த தலைக்கவசம் விறகுக் கட்டையால் மனைவியை தாக்கி காயப்படுத்தியுள்ளார். தலையில் பலத்த காயமடைந்த மனைவி அயலவர்களினால் காப்பாற்றப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### முல்லைத்தீவு மாவட்டம்

## சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவும்

### மாவட்ட சிவில் பாதுகாப்பு குழுக்கூட்டத்தில் வலியுறுத்தல்

**பரந்தன் குறூப் நிருபர்**

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெறுகின்ற போதைப்பொருள் பாவனை மற்றும் சட்டவிரோத மணல் அகழ்வுகள் தொடர்பில் பொலிஸார் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாவட்ட சிவில் பாதுகாப்பு குழுக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட சிவில் பாதுகாப்பு குழுக் கூட்டமானது மேலதிக அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரனின் தலைமையில் மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன் (15.03.2022) நடைபெற்றது.

இதன்போது கடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் முன்னேற்றம் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது. மாவட்டத்தில் இடம்பெறுகின்ற போதைவஸ்து பாவனை மற்றும் விநியோகம், சட்டவிரோத மணல் அகழ்வு, சமூக விரோத செயற்பாடுகள், வீதிகளில் நெல் உலரவிடுவதால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள், கட்டாக்காலி மாடுகளின் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. இவை தொடர்பில் பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளன.

மேலும் மாவட்டத்தின் போக்குவரத்து சேவைகளின் தற்போதைய நிலைப்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது. இதன்போது முல்லைத்தீவு மாவட்டத்தின் இலங்கை போக்குவரத்து சபையின் பிரதான தரிப்பிடத்திற்கு எரிபொருள் களஞ்சிய சாலைக்குரிய பொருட்கள் கிடைக்கப்பெற்றும் வேலைத்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கான அனுமதி கிடைக்கப்பெறாமையால் எரிபொருளை பெறுவதில் சிரமங்களை எதிர்கொள்வதாக சுட்டிக்காட்டியிருந்தனர்.




# 33 ஆவது வருட நிறைவை கொண்டாடும் அக்குறணை (STUDY CENTRE) பாலர் பாடசாலை

1989ம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி STUDY CENTRE (ஸ்டடி சென்ரர்) பாலர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு இவ்வருடம் அக்குறணையில் 33 வது வருட சேவை நிறைவைக் கொண்டாடுகிறது.

அன்றைய காலகட்டத்தில் பாலர் பாடசாலை கல்வி முறையும் அதன் தேவையும் வெகுவாக உணரப்படாதிருந்த போதிலும் ஸ்டடி சென்றரின் பாலர் பாடசாலை அதன் சிறந்த நெறி முறையினால் எமது மக்கள் மத்தியில் வரவேற்பினையும், நன்மதிப்பையும் பெற்றது. பொது மக்களின் வரவேற்பினாலும் அவ்வப் பகுதி பிரதேச பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க அக்குறணையைச் சூழ உள்ள இருபது கிராமங்களை உள்ளடக்கியதாக அக்குறணைதுனுவில வீதி, புளுகொஹதென்னசாஹிரா பஸார், பானகமுவ, கசாவத்தை, பள்ளியகொட்டுவ, நீரெல்ல, மல்வானஹின்ன, அக்குறணை ஏழாம் கட்டை, உக்கலை, தெலும்புகஹவத்தை, குருகொடை ஆகிய பிரதேசங்களில் பாலர் பாடசாலைகள் அமைக்கப்பட்டுள்ளதுடன்,



அக்குறணை துனுவில பாலர் பாடசாலை மாணவர்கள் 01

சம காலத்தில் நாநூறுக்கும் (400) மேற்பட்ட பாலகர்கள் கல்வியை மேற்கொண்டு வருகின்றனர். இது காலவரை சுமார் 11,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் எமது ஸ்டடி சென்றர் பாலர் பாடசாலைகளில் கல்வியை வெற்றிகரமாக பயின்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் இன்று அக்குறணையில் ஒவ்வொரு வருடமும் முதலாம் தரத்திற்குப் பாடசாலைகளில் அனுமதி பெறும் மாணவர்களில் கூடுதலான மாணவர்கள் எமது ஸ்டடி சென்றர் பாலர் பாடசாலைகளில் கல்வி கற்றவர்களாகவே இருக்கின்றார்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இப்பாலர் பாடசாலைகள் STUDY CENTRE (ஸ்டடி சென்றர்) என்ற ஒரே பெயரின் கீழ் இயங்குவதனால் அவ்வப்பகுதி பாலர் பாடசாலைகள் அப்பிரதேசத்தின் பெயரைக் கொண்டே அழைக்கும் முறை இயல்பாகவே உருவானது.

ஒரு மனிதனுக்கு கல்வியுடன் ஒழுக்கம் மிக முக்கியமானதாகும். ஒழுக்கம் எனும் போது சமயம், கலாசாரம், பண்பாடு இவற்றுடன் இணைந்ததாகும். அதனை சிறு வயதில் கொடுப்பது மிக முக்கியமானதாகும்.

எனவே அந்த அடிப்படையில் சிறுவயது முதலே சமயத்துடன் பின்னிப்பிணைந்த கலாசார விழுமியங்களையும் எமது பாலர் பாடசாலைகள் வழங்கி வருகின்றன. இப்பாலர் பாடசாலைகள் அடிக்கடி எமது பணிப்பாளர் சபையின் மேற்பார்வைக்கு ஆளாகுவதனால் எமது கல்வித்திட்டம் குறையின்றி மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்ய முடிகிறது.

# நுவரெலியா மாவட்டத்தில் முதலிடம் பெற்று சாதனை

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**



கடந்த ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் மஸ்கெலியா சென்ஜோசப் ஆரம்ப தமிழ் வித்தியாலய மாணவி சிவமூர்த்தி நேகா 188 புள்ளிகளைப் பெற்று நுவரெலியா மாவட்டத்தில் முதலாவது இடத்தை பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

# மாத்தளை பிரதேசத்தில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு

**உக்குவளை விசேட நிருபர்**

மாத்தளை நகரிலும் நகரை சூழவுள்ள சில உபநகரங்களில் அமைந்துள்ள மருந்தகங்களில் அனேகமான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் இதனால் நோயாளிகள் பல அசௌகரியங்களுக்கு முகங் கொடுப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

மாத்தளை நகரிலும் நகரை சூழவுள்ள உபநகரங்களில் மருந்தகங்களில் பெனடோல், பெனடோல் சிரப், பிரின்டன் சிரப், பெனடின், பெரசிடமோல் உட்பட அனேகமான மருந்துவகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை குழந்தைகளுக்கான பால்மாவிற்கும் பெரும் தட்டுப்பாடான நிலையில் தாய்மார்கள் உட்பட கர்பிணி தாய்மார் பல்வேறு சவால்களுக்கு முகங் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

# கலன்களில் எரிபொருள் ஏற்றிச்சென்ற லொறி பள்ளத்தில் பாய்ந்து விபத்து

## மூவர் வைத்தியசாலையில் அனுமதி

**ஹற்றன் விசேட நிருபர்**



எரிபொருள் ஏற்றிச் சென்ற லொறி ஒன்று 70 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் அதிலிருந்த மூன்று பேர் பலத்த காயமடைந்ததால் டயகம பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவம் டயகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்கரபத்தனை டயகம பிரதான வீதியில் ஆக்ரோவா பகுதியில் நேற்று (16) அதிகாலை வேளை இடம்பெற்றுள்ளது.

அக்கரப்பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டயகம வெஸ்ட் தோட்டத்திற்கு சொந்தமான லொறி 15 ம் திகதி இரவு கொட்டகலை எரிபொருள் நிலையத்திற்கு சென்று டீசல் ஏற்றிக்கொண்டு 16 ம் திகதியன்று அதிகாலை ஒரு மணிக்கு குறித்த தோட்டத்திற்கு சென்றபோது அக்கரப்பத்தனை டயகம பிரதான வீதியில் ஆகுரோவா பிரதேசத்தில் வீதியை விட்டு விலகி 70 அடி பள்ளத்தில் விபத்துக்குள்ளாகியது. இதன் போது லொறியில் சென்ற சாரதி உட்பட மூவர் பலத்த காயங்களுக்குள்ளாகிய நிலையில் டயகம பிரதேச வைத்தியசாலையசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

சாரதிக்கு ஏற்பட்ட நித்திரை காரணமாக இந்த விபத்து ஏற்பட்டிருக்கூடுமென ஆரம்பகட்ட விசாரணையின் மூலம் தெரிய வந்துள்ளது. விபத்து தொடர்பான விசாரணைகளை டயகம அக்கரப்பத்தனை பொலிஸார் முன்னெடுக்கின்றனர்.

# எதிர்க்கட்சிகளின் போராட்டங்களால் அரசுக்கு பாதிப்பு எதுவுமில்லை

## எதிரணி தலைவர்களின் இருப்பை உறுதிப்படுத்தவே ஆர்ப்பாட்டங்கள் – ஜகத் குமார எம்பி தெரிவிப்பு

**(எம்.ஏ. அமீனுல்லா)**

கொழும்பில் எதிர்க்கட்சிகள் நடத்தும் போராட்டங்களால் அரசாங்கத்திற்கு எந்த பாதிப்பும் ஏற்படாது எனவும் இது எதிர்தரப்பு தலைவர்களின் இருப்பை மட்டுமே அவர்கள் உறுதிப்படுத்துவார்கள் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்துள்ளார்.

கொவிட் நெருக்கடியுடன் தொடர்புடைய பல காரணிகளால் அந்நியச் செலாவணி கையிருப்பு வீழ்ச்சியடைந்தது எனவும் இதன் காரணமாக ஏற்பட்டுள்ள பொருட்களின் விலையேற்றத்தினால் மக்கள் துயரமடைந்துள்ள போதிலும், நல்லாட்சி அரசாங்கத்திற்கு மீண்டும் அதிகாரத்தை வழங்க மக்கள் தயாராக இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



மல்வத்தை மற்றும் அஸ்கிரிய மகாநாயக்க தேரர்கள் இருவரிடமும் ஆசி பெற்றதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் நேற்று முன்தினம் (15) இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்துரையாற்றிய, ஜகத் குமார எம்பி,

எதிர்க்கட்சியில் இருந்தபோது தானும் தனது குழுவினரும் இது போன்ற இலட்சக்கணக்கான போராட்டங்களை நடத்தியதாகவும், இதனால் எதிர்க்கட்சிகள் பிழைப்பதே தவிர மக்களுக்கு எந்த பயனும் இல்லை என்றும் எதிர்கட்சிகளின் போராட்டம் ஒன்றல்ல ஆயிரமாக இருந்தாலும் அரசு முன்னேறி வருகிறது என்பதை எதிர்க்கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். தற்போதைய நெருக்கடியிலிருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்கு ஜனாதிபதியும் நிதியமைச்சரும் பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். தற்போது சர்வதேச நாணய நிதியம் கலந்துரையாடி வருக்கின்றது என்றார்.

இன்று அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்தும் சஜித், ரணில் உள்ளிட்டோர் ஆட்சியில் இருந்த காலத்தை மக்கள் நன்கு புரிந்து கொண்டுள்ளதாகவும், நல்லாட்சியை கண்டு மலிந்து போனதால்தான் தற்போதைய அரசாங்கத்திற்கு மக்கள் மூன்றில் இரண்டு பங்கு அதிகாரத்தை வழங்கியதாகவும் அவர் கூறினார்.

நாட்டில் பிணங்களை வைத்து பிழைப்பு நடத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்கள் பலர் இருப்பதாகவும், அரசாங்கம் வழங்கும் வரிச்சலுகையைப் பயன்படுத்தி அவர்கள் வருமானம் ஈட்டுவருக்கின்றனர் அரசிடம் இருந்து வரிச்சலுகை பெற்று, அதன் பலனை மக்களுக்கு வழங்காத இந்த தொழிலதிபர்கள், மக்களுக்கு பூச்சாண்டி காட்ட முயல்கின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# அகில இலங்கை அஹதிய்யா அமைப்பின் இருநாள் வதிவிட செயலமர்வு





**பேருவளை விசேட நிருபர்**


அகில இலங்கை அஹதிய்யா அமைப்பின் மாவட்ட தலைவர்கள், செயலாளர்கள் மற்றும் பொருளாளர்களுக்கான இரு நாள் தலைமைத்துவப் பயிற்சியும் செயலமர்வும் பேருவளை ஜாமிய்யா நளீமிய்யா கலாபீட அபிவிருத்திக்கும் ஆராச்சிக்குமான நிலையத்தில் (12) நடைபெற்றது.

அகில இலங்கை அஹதிய்யா சம்மேளனத் தலைவர் ஏ.ஆர்.எம் ஸரூக் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவலக திணைக்கள பணிப்பாளர் இப்றாஹீம் அன்ஸார் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

தேசிய பாதுகாப்பு நிலையத்தின் புலனாய்வு விஞ்ஞானி ரஸீன் பாபு, ஜாமிய்யா நளீமிய்யா கலாபீட சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் எஸ்.எச்.எம் பளீல் (நளீமி) மற்றும் இஸ்மாயீல் அஸீஸ் உட்பட பலரும் ஆரம்ப தின நிகழ்வில் உரையாற்றினர்.

களுத்துறை மாவட்ட அஹதிய்யா சம்மேளன தலைவர் எம்.எச்.எம் உவைம் இச்செயலமர்வை நெறிப்படுத்த களுத்துறை நகர சபை உறுப்பினரும் மாவட்ட அஹதிய்யா சம்மேளன முக்கியஸ்தருமான முஹம்மத் ஹிஷாம் நிகழ்ச்சியை தொகுத்தளித்தார். நாட்டின் 24 மாவட்டங்களைச் சேர்ந்த அஹதிய்யா முக்கியஸ்தர்கள் இச் செயலமர்வில் பங்குபற்றினர்.

## நகர்வலம்



# எரிபொருள் விலையேற்றத்துக்கு மாற்றுத்தீர்வு எதுவும் கிடையாது

## வருமானம் குறைந்த நாடுகளில் கூட பெரிய சிக்கல்

**(வெலிகம தினகரன் நிருபர்)**

இலங்கையை விட வருமானம் குறைந்த நாடுகள் கூட பொருளாதார சுமையை தாங்கிக்கொள்ள முடியாத நிலையில் எரிபொருள் விலையேற்றத்துக்கு மாற்றுத்தீர்வு ஒன்றும் கிடையாது. மிகவும் கஷ்டமான ஒரு முடிவாக இருந்தாலும் அரசாங்கம் இதற்கு தீர்வு காண வேண்டிய நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளதாக மீன்பிடி இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கையில்,



கடந்த சில நாட்களுக்கு முன் இலங்கை கனிய வள கூட்டுத்தாபன கட்டுப்பாட்டில் இயங்கிவரும் 'ஸீபெட்கோ' நிறுவனம் எரிபொருளின் விலையில் மாற்றத்தை ஏற்படுத்தியது. இது வரலாற்றிலே மிக கூடிய விலை மாற்றமாகும். கடந்த காலம் முழுவதும் எரிபொருள் விற்பனை மூலம் ஏற்பட்ட இழப்பை இந்நிறுவனம் தாங்கியிருந்தது.

இதுவிடயமாக அரசாங்கத்திற்கு பலமுறை பல சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டியிருந்தது. 15 வருடங்களின் பின்னர் ஒரு பெரல் எண்ணெய் விலை அதிகளவு கூடியது இதுவே முதற் தடவையாகும்.

7 வருடங்களின் பின்னர் டொலர் விலையில் பாரிய மாற்றம் ஏற்பட்டதும் கடந்த வாரமாகும். என்றாலும் சகல தரப்பினருக்கும் விலை மாற்றத்துக்குரிய காரணங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தென் மாகாண மாணவர்களுக்கு 'சிசுசெரிய' பஸ் சேவை

**(மாத்தறை தினகரன் நிருபர்)**

தென் மாகாண பாடசாலை மாணவர்களின் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் படி 'சிசுசெரிய' பஸ் சேவையை போக்குவரத்துச் சேவையில் அதிகமாக இணைத்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தென் மாகாணத்தில் 'சிசுசெரிய' பஸ் சேவையில் 82 பஸ் வண்டிகளை சேவையில் ஈடுபடுத்தியுள்ளதாக றுஹுனு பிரதேச முகாமையாளர் தெரிவித்தார்.

தென் மாகாணத்திலுள்ள இலங்கை போக்குவரத்துச் சபையின் 11 டிப்போக்களின் மூலம் இச்சேவை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இச் சேவைக்கு மேலதிகமாக இலங்கை போக்குவரத்துச் சபை மேலும் 500 பஸ் வண்டிகளையும் சேவையில் இணைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நெல்லியகம மு. வித். 03 மாணவர்கள் சித்தி

**(கல்நேவ தினகரன் விசேட நிருபர்)**

வெளியான ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் படி கெகிராவ கல்வி வலய பலாகல கல்விக் கோட்டத்திலுள்ள நெல்லியகம முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் மூன்று மாணவர்கள் சித்தியடைந்துள்ளதாக அதிபர் எம். ரசீத் தெரிவித்தார். இதன்படி நெல்லியகம முஸ்லிம் மகா வித்தியாலயத்திலிருந்து எம்.இஸட்.எம். அம்மார் (172), ஏ.சீ.எப்.அஹ்லா (158), எம்.எம்.எப். ரஹ்மா (152) புள்ளிகளைப் பெற்று மூன்று மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர்.

# செல்வி ஹிக்மா சப்ரி 153 புள்ளிகள்

**(வெலிகம தினகரன் நிருபர்)**



மாத்தறை மாவட்டத்தில் அமைந்துள்ள மாறை/கிரிந்தை முஸ்லிம் கனிஷ்ட வித்தியாலயத்திலிருந்து 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் செல்வி எம்.எஸ். ஹிக்மா சப்ரி (153 புள்ளிகள்) பெற்று சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

# திருமலையில் பௌர்ணமி நிகழ்வு – 02

திருகோணமலை 'எண்ணம் போல் வாழ்க்கை' கலை இலக்கிய மன்றத்தினர் நடாத்தும் 'பௌர்ணமி நிகழ்வு 02' இன்று (17) மாலை 4.00 மணிக்கு உவர்மலை கேணிப்பித்தனின் ஆனந்த இல்லத்தில் நடைபெறுகிறது.

கனக தீபகாந்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் எழுத்தாளர் தட்சாயணியின் 'பிரதிகளின் செல்நகர்வு', கவிஞர் மாயனின் 'யாருக்கோ பெய்யும் மழை' கவிதைத் தொகுப்பு கவிஞர் பவித்திரனின் 'வெண் சுவர்' (சிறுகதைத் தொகுப்பு) கவிஞர் தி. லலிதகோபன் 'கிழக்கிலிருந்து முகிழ்ந்த இரு பிரதிகள்' ஆகியோரின் உரைகளுடன் இடம்பெறவுள்ளதோடு நன்றியுரையை அன்பின் பாதை றொசில்டா வழங்கவுள்ளார்.

# கிழக்கின் குரல்



அரசாங்க அதிபர் கருணாகரன் தலைமையில்

## மட்டு. மாவட்டத்தில் சேதன பசளை தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு





மட்டக்களப்பு குறூப், மட்டக்களப்பு விசேட நிருபர்கள்

நஞ்சற்ற நாடு எனும் தொனிப் பொருளிற்கு அமைவாக மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளுக்கு இயற்கை உரப்பாவனை தொடர்பாக விழிப்புணர்வூட்டும் செயலமர்வு, செவ்வாய்க்கிழமை (15) மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில், மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.சுதர்சனி ஸ்ரீகாந்த், பசுமை உற்பத்தி செயலணியின் மாவட்ட இணைப்பாளரும் 231 வது படைப்பிரிவின் பிறிகேட் கொமாண்டர் திலீப பண்டார, தேசிய உரச் செயலகத்தின் மாவட்ட பிரதிப் பணிப்பாளர் கே.எல்.எம்.சிராஜுன், மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.ஜெகன்நாத், விவசாய விரிவாக்கல் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் வீ.பேரின்பராசா, இரண்டு உரக் கம்பனிகளின் உயரதிகாரிகள், விவசாய போதனாசிரியர்கள், பெரும்பாக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உர விநியோக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் மேலும் பல துறைசார் திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன் போது நோயற்ற ஒரு சமூகத்தின் நஞ்சற்ற உணவை நோக்கிய பயணத்தில் கால போக நெற்செய்கையாளர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படவுள்ள இலவச இயற்கை உர வகைகளின் பாவனை மற்றும் பயன்கள் தொடர்பாக இதன்போது வருகை தந்திருந்த இரண்டு உர கம்பனிகளின் அதிகாரிகளினால் விளக்கமளிக்கப்பட்டது.

அத்தோடு இவ்விரு நிறுவனத்தினாலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள திரவ உரம் மற்றும் சேதன உரங்களை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது தொடர்பாக விழிப்புணர்வு வழங்கப்பட்டதுடன், இதன் மூலம் சிறந்த பயனை அடைய முடியும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டதுடன், அரச அங்கிகாரத்துடன் ரஜரட்டை பல்கலைக்கழகத்தினால் சிபார்சு செய்யப்பட்ட உர வகையென இதன்போது விளக்கமளிக்கப்பட்டது.

## மூதூர் டயமன் பாடசாலையின் ஆறாவது ஆண்டு பூர்த்தி விழா



மூதூர் தினகரன் நிருபர்

மூதூர் டயமன் விசேட பாடசாலையின் ஆறாவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு, இம் மாணவர்களுக்காக நடாத்தப்பட்ட போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றியீட்டியவர்களின் கௌரவிப்பு மற்றும் கௌரவச் சின்னம் என்பன வழங்கும் நிகழ்வு, மூதூர் சஹ்ரா மண்டபத்தில் திங்கள் கிழமை (14) மூதூர் பிரதேச சபை உறுப்பினரும், டயமன் விசேட பாடசாலை அதிபருமான என்.எப்.பாத்திமா அகீதா தலைமையில் இடம்பெற்றது.

மூதூர் டயமன் விசேட பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு ஆறாண்டுகள் பூர்த்தியாகி உள்ளன.

இந்நிலையில் மூதூர் பிரதேசத்தில் மூவினத்தையும் சேர்ந்த மாணவர்கள் கல்வி பயின்று வருவதுடன், இம்மாணவர்களுக்காக கற்றல், இணைப்பாடவிதான செயற்பாடு, விளையாட்டு, களப்பயணம் மற்றும் போட்டி நிகழ்ச்சிகளையும் வருடா வருடம் நடாத்தி மாணவர் நலனுக்காக பெரும் பங்காற்றி வருகின்றன.

மூதூர் டயமன் விசேட பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், நிருவாக சபை உறுப்பினர்களின் பூரண பங்கேற்புடன் நடாத்தப்பட்ட இந்நிகழ்வில், மாணவர்களுக்கு பரிசில்களும், வெற்றிக் கிண்ணங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சொறிக்கல்முனை ஹோலிக்குறோஸ் வித்தியாலயத்தில் 07 மாணவர்கள் சித்தி



சவளக்கடை குறூப் நிருபர்

சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலகத்திற்குட்பட்ட நாவிதன்வெளி கோட்டத்தின் அதிகஸ்டப் பாடசாலையான சொறிக்கல்முனை ஹோலிக்குறோஸ் மகா வித்தியாலயத்தில், புலமைப்பரிசில் பரீட்சையில் ஏழு மாணவர்கள் சித்தி அடைந்துள்ளதாக, பாடசாலை அதிபர் அருட்சகோதரி எம்.சிறியபுஸ்பம் தெரிவித்தார்.

குகதீஸ் பிரித்திக்கா 168, அந்தோனி றெகான் 163, சகாயம் சந்துஸ் 162, அருளம்பலம் டினோசன் 153, ரஞ்சித் சஞ்சை 152, எல்மோ தியாகராஜா ஜெயறியான்சன் 147, நிக்சன் காசினி 147 ஆகிய ஏழு மாணவர்களும் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

இம்முறை பாடசாலையில் 32 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றி பாடசாலை வரலாற்றில் முதன்முறையாக 07 மாணவர்கள் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் சித்தி பெற்றதுடன், கடந்த வருடங்களில் புலமைப்பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் சித்திபெற்று மூன்றாவது தடவையாகவும் சித்தியடைந்தோர் எண்ணிக்கை 100வீதமாக பாடசாலை தக்க வைத்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

பாடசாலைக்கும், சமூகத்திற்கும் நற்பெயரை ஈட்டிய மாணவர்களுக்கு பாராட்டுகளை தெரிவித்ததுடன், இம்மாணவர்கள் சிறந்த பெறுபேற்றை பெற அயராது பாடுபட்ட ஆசிரியர்கள், பெற்றோர், கல்விசாரா ஊழியர்களும் பாடசாலை அதிபர் நன்றிகளை தெரிவித்துள்ளார்.

## தாதியர்களுக்கு உணவு தொடர்பான விழிப்பூட்டல்

மட்டக்களப்பு குறூப் நிருபர்

சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் கிழக்கு பல்கலை கழக மருத்துவபீட தாதிய மாணவர்களுக்கு மட்டக்களப்பில் உணவு சுகாதாரம் தொடர்பான விழிப்பூட்டல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு சுகாதார வைத்தியதிகாரி டாக்டர் இ.உதயகுமாரின் வழிகாட்டலில் கோட்டைமுனை பொது சுகாதார பரிசோதகர் ரி.மிதுன்ராஜ் தலைமையில் மட்டக்களப்பு பொதுச் சந்தையில் குறித்த விழிப்பூட்டல் செயற்பாடு செவ்வாய்க்கிழமை (15) இடம்பெற்றது.

தரமான உணவுப் பொருட்களை விற்பனை நிலையங்களில் கண்டறிதல், மனித பாவனைக்குதவாத பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தக்கர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுத்தல் உட்பட பல்வேறு உணவுப் பாதுகாப்பு தொடர்பாக விளக்கமூட்டப்பட்டன.

## ஓய்வு பெற்ற அதிபருக்கு சேவை நலன் பாராட்டு விழா



ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்

அக்கரைப்பற்று சேர் றாசீக் பரீட் வித்தியாலயத்தில் நீண்ட காலம் அதிபராக கடமையாற்றி வியாழக்கிழமை (10) ஓய்வு பெற்ற எஸ்.எல்.றஹீமின் 34 வருடகால கல்விப் பணிக்கான, சேவை நலன் பாராட்டு விழா பாடசாலையில் நடைபெற்றது.

அக்கரைப்பற்று சேர் றாசீக் பரீட் வித்தியாலய ஆசிரியர் எம்.ஐ.எம். முதுநபீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அக்கரைப்பற்று வலயக்கல்வி பணிப்பாளர் அஷ்சேய்க் ஏ.எம்.றஹ்மத்துல்லா, அக்கரைப்பற்று வலயக்கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான ஏ.ஜீ.பஸ்மில், ஏ.எம்.ஹசீம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

1988ஆம் ஆண்டு அட்டாளைச்சேனை தைக்கா நகர் ஜீ.எம்.எம்.வித்தியாலயத்தில் ஆசிரியராக நியமனம் பெற்ற எஸ்.எல்.றஹீமின், 34 வருட கால கல்விப் பணியில் 25 வருடகாலம் ஆசிரியராகவும் 9 வருடகாலம் பதில் அதிபராகவும் சேவையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

இவரின் கல்விப் பணியைப் பாராட்டி பாடசாலை நிருவாகம், சமூகத்தவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில், கல்வி அதிகாரிகள் மற்றும் ஆசிரியர்கள் குழாத்தால் பொன்னாடைகள் போர்த்தியும் நினைவுச் சின்னங்கள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டார்.

## முதன் முறையாக இரு மாணவர்கள் சித்தி



நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்

வெளியிடப்பட்ட தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் கல்முனை வலயத்தில் அமைந்துள்ள இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்தியாலயத்தின் வரலாற்றில், முதல் தடவையாக இரண்டு மாணவர்கள் சித்தியடைந்து சாதனை படைத்துள்ளனர்.

அதில் எம்.எச்.எம். சாஹில் என்ற மாணவன் 175 புள்ளிகளைப் பெற்று கல்முனை கல்விக் கோட்டத்தில் இரண்டாவது இடத்தை பெற்றதுடன், என்.எம். நப்லி என்ற மாணவன் 150 புள்ளிகளை பெற்று சித்தியடைந்துள்ளனர்.

## பொலிவேரியன் கிராமத்தில் அகற்றப்படாத கழிவுகள்

மாளிகைக்காடு குறூப் நிருபர்

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட சாய்ந்தமருது குடியேற்ற கிராமமான பொலிவேரியன் பிரதேசத்தின் மேற்புறமாகவுள்ள பிரதேசத்திலும் , பாலத்திற்கு அருகாமையிலும் குப்பைகள் பல மாதங்களாக அகற்றப்படாமல் குவிந்து காணப்படுகின்றது.

மக்கள் நடமாட்டமுள்ள இப்பிரதேசத்தில் பொது மைதானம், விவசாய விரிவாக்கல் அலுவலகம் , சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் , கேட்முதலியார் எம்.எஸ்.காரியப்பர் வித்தியாலயம், கால்நடை வைத்திய அதிகாரி காரியாலயம், ஹிஜ்ரா பள்ளிவாசல் போன்ற பல முக்கிய காரியாலயங்களும், அரச நிறுவனங்களும் அமையப் பெற்றுள்ளன.

மக்களால் கொட்டப்படும் குப்பைகள் கல்முனை மாநகர சபையினால் அகற்றப்படாமையினாலேயே மாதக்கணக்கில் இக்குப்பைகள் குவிந்து கிடப்பதற்கு காரணமாகும்.

இந்த பகுதியில் வீட்டு கழிவுகள் பல இடங்களுக்கும் பரப்பப்பட்டுள்ளதால் துர்நாற்றம் வீசுகின்றது. இதனால் இப்பிரதேச மக்கள் சுகாதார சீர்கேடுகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் செலுத்தத் தவறினால், சாய்ந்தமருது பொலிவேரியன் கிராமத்தில் பிரமாண்டமான குப்பை மேடு உருவாவதனை எவராலும் தடுக்க முடியாது.

## மீனவர்களுக்கு மானிய அடிப்படையில் எரிபொருள்

ஒலுவில் விசேட நிருபர்

எரிபொருள் விலையேற்றத்தை அடுத்து மீனவர்களுக்கு மானிய அடிப்படையில் எரிபொருள் வழங்குவதற்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளதாக, மட்டுப்படுத்தப்பட்ட கல்முனை கரையோர மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் எம். ஜீ.எம். பகுர்தீன் தெரிவித்தார்.

எரிபொருளுக்கு விலை அதிகரிக்கப்பட்டுள்ளதையடுத்து, அரசாங்கத்தினால் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தினூடாக மண்ணெண்ணெய் மற்றும் டீசல் என்பவற்றை கடற்றொழிலில் ஈடுபடுவோருக்கு மானிய அடிப்படையில் வழங்குவதற்கு அமைச்சரவை பத்திரம் தாக்கல் செய்யவுள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளதாக தெரிவித்தார்.

எரிபொருள் விலையேற்றத்தை அடுத்து ஆழ்கடல் மீன்பிடித் தொழில் பாதிப்படைந்துள்ளதாகவும், மீனவர்களுக்கு மானிய அடிப்படையில் எரிபொருள் வழங்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டதாகவும் தெரிவித்தார். கடந்த சில மாதங்களாக கிழக்கு பிராந்திய கடற்பரப்பில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை மற்றும் கடற்கொந்தளிப்புகாரணமாகதற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த ஆழ் கடல் மீன்பிடித் தொழில் தற்போது மீள ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் திடீரென அதிகரித்த எரிபொருள் விலையேற்றத்தின் காரணமாக பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

கரையிலிருந்து அதிக தூரம் ஆழ்கடலுக்குச் சென்றும் போதிய மீன்பிடி இல்லாத நிலையில் படகுகளின் எரிபொருள் பாவனைக்காக மட்டுமே அதிக பணம் செலவாகுவதாக மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

## மருதமுனை அல் மனார் மாணவர்கள் கௌரவிப்பு



பெரியநீலாவணை தினகரன் நிருபர்

வெளியாகியுள்ள தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் மருதமுனை அல்மனார் தேசிய பாடசாலை சாதனை படைத்துள்ளது. கல்முனை கல்விக் கோட்டத்தில் புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் தரப்படுத்தலில், அதிகூடிய மாணவர்கள் சித்தி எண்ணிக்கையில் மருதமுனை அல்மனார் தேசிய பாடசாலை முதலிடத்தைப் பிடித்துள்ளது.

நூற்றாண்டு கடந்த அல்மனார் மத்திய கல்லூரியில் முதன்முறையாக 35 மாணவர்கள் சித்தி அடைந்ததன் மூலமே இவ் வரலாற்றுச் சாதனை ஈட்டப்பட்டுள்ளது.

சாதனை மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரியின் சித்திக் நதீர் திறந்த வெளியரங்கில் அதிபர் எம்.ஜே.அப்துல் ஹஸீப் தலைமையில் செவ்வாய்க் கிழமை (16) இடம்பெற்றது.

உதவி அதிபர்கள், கற்பித்த ஆசிரியர்கள் ஏனைய ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் முன்னிலையில் நடைபெற்ற நிகழ்வில் மாணவர்கள் மலர் மாலை அணிவித்து பரிசில்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## அக்கரைப்பற்று வலயத்தில் அந்–நூர் வித்தியாலய மாணவி முதலிடம்

பாலமுனை விசேட நிருபர்



தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில், அக்கரைப்பற்று கல்வி வலயத்திற்குட்பட்ட அட்டாளைச்சேனை அந்நூர் மகா வித்தியாலயத்தில் இம்முறை 8 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

இதில் ஜவாஹிர் இஸ்ஸத் பானு எனும் மாணவி 185 புள்ளிகளைப் பெற்று அக்கரைப்பற்று வலயத்தில் முதலாமிடத்தினையும், மாவட்டத்தில் மூன்றாமிடத்தினையும் பெற்று வலயத்திற்கும், பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

இதனையொட்டி, அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷேஹ் ஏ.எம்.றஹ்மத்துல்லா உள்ளிட்ட குழுவினர் திங்கட்கிழமை (14) அந்நூர் மகா வித்தியாலயத்திற்கு விஜயம் மேற்கொண்டு சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டியதுடன், விசேடமாக அதிகூடிய புள்ளிகளைப் பெற்று வலயத்திற்கு பெருமை சேர்த்த மாணவியினையும் பாராட்டி, பரிசுப்பொருட்களையும் வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஏ.ஜி.பஸ்மில், உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.அம்ஜத்கான், அந்நூர் மகா வித்தியாலய அதிபர் ஏ.எம்.அஸ்மி, பிரதி அதிபர் எம்.எச்.எம்.றமீஸ், மாணவர்களை நெறிப்படுத்திய ஆசிரியர் ஆர். ஹாறூன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். சித்தியடைந்தோர் விபரம், ஜவாஹிர் இஸ்ஸத் பானு 185, முஹம்மட் முஸம்மில் அஹமட் 171, லாபிர் அஸ்கர் 170, ஜெஸீம் அய்தா மெஹ்ரிஸ்169, முஜிப் பாதிமா நஜீபா 155, ஆசிக் ஆதிப் அஹமட் 152, முஹம்மட் நைறூஸ் பாதிமா பர்ஹத் ஜூஸ்லா 149, நஜிமுடீன் பாதிமா தீனா 148 உள்ளிட்டோர் சித்தியடைந்துள்ளனர்.

## சர்வதேச செய்திகள்

# பைடனுக்கு ரஷ்யா தடை



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் மேலும் 12 அதிகாரிகள் மீது ரஷ்யா தடை விதித்துள்ளது.

இந்தப் பட்டியலில் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டொனி பிளிங்கன், பாதுகாப்பு செயலாளர் லியோட் ஒஸ்டிக், ஊடகச் செயலாளர் ஜேன் சக்கி மற்றும் நிர்வாகத்தின் ஏனைய உறுப்பினர்கள் உள்ளனர்.

இதில் எதிர்பாராததாக முன்னாள் இராஜாங்கச் செயலாளர் ஹிலரி கிளின்டன் மற்றும் பைடனின் மகன் ஹன்டரின் பெயரும் உள்ளடக்கப் பட்டுள்ளது.

# பாக். ஸ்திரத்தன்மை: சீனா வலியுறுத்தல்



தற்போதைய அரசியல் பிரச்சினைகளுக்கு மத்தியில் சீன தூதரகத்தின் துணைத் தலைவர் பாங் சுன்சு பாகிஸ்தான் முஸ்லிம் லீக் குவைத் கட்சித் தலைவர்களை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

பாகிஸ்தானின் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையை சீனா விரும்புகிறது என்ற செய்தியை அவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் முக்கிய நட்பு நாடாக உள்ள சீனா, பாகிஸ்தானில் பல பில்லியன் டொலர்களை முதலீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரஷ்யாவுடனான அமைதிப் பேச்சு: உக்ரைன் ஜனாதிபதி நம்பிக்கை

ரஷ்யா மற்றும் உக்ரைன் இரு நாடுகளுக்கிடையே கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைதிப் பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக, உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி மறைமுகமாக தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய் இரவு அவர் வெளியிட்ட வீடியோ பதிவில், "பேச்சுவார்த்தை நடைமுறைக்கு ஏற்றதாக இருந்தது" என தன் கருத்தை வெளிப்படுத்தினார். ஆனால், "உக்ரைன் நலனுக்கான முடிவுகளை எடுக்க இன்னும் காலம் தேவை" எனவும் அவர் தெரிவித்தார்.

ரஷ்யா மற்றும் உக்ரைனுக்கு இடையிலான பேச்சுவார்த்தை மேலும் தொடரவுள்ளது.

ரஷ்ய துருப்புகளின் எண்ணிக்கை குறைந்து வரும் நிலையில் அந்த நாடு உக்ரைனில் புதிய அரசு ஒன்றை நிறுவுவது தோல்வி அடையும் பட்சத்தில் நிபந்தனைகளுக்கு வரும் என்றும் உக்ரைன் போர் திட்டமிட்டதை விடவும் முன்கூட்டியே முடிவுக்கு வரும் என்றும் உக்ரைன் அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

எனினும் பேச்சுவார்த்தையின் முன்னேற்றம் பற்றி இப்போதே கூற முடியாது என்று ரஷ்ய அரச பேச்சாளர் ட்மிட்ரி பெஸ்கொவ் தெரிவித்துள்ளார். "இந்தப் பணி சிக்கலானது. தற்போதைய நிலையில் (பேச்சுவார்த்தை) தொடரும் என்பது சாதகமான ஒன்றாக உள்ளது" என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை முற்றுகையில் இருக்கும் துறைமுக நகரான மரியுபோலில் இருந்து தனிப்பட்ட வாகனங்களில் சுமார் 20,000 பேர் தப்பிச் சென்றிருப்பதாக உக்ரைன் உள்துறை அமைச்சு நேற்று தெரிவித்தது. எனினும் மின்சாரம் இன்றி நீர் தீர்ந்திருக்கும் நிலையில் ரஷ்ய ஷெல் தாக்குதலுக்கு மத்தியில் அந்த நகரில் ஆயிரக்கணக்கானவர்கள் தொடர்ந்தும் சிக்கியுள்ளனர்.



அசோவ் கடற்கரையின் முக்கிய நகராக இருக்கும் மரியுபோலை கைப்பற்றுவதில் ரஷ்ய படை தீவிர அவதானம் காட்டி வருகிறது. மேலும் மேற்கை நோக்கி முன்னேற இந்த நகர் முக்கியமாக உள்ளது.

நகரில் மோதல்களில் 2,500க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டிருப்பதாகவும் குறைந்தது 200,000 பேர் அவசரமாக வெளியேற்றப்பட வேண்டி இருப்பதாகவும் உக்ரைன் அதிகாரிகள் கணித்துள்ளனர்.

கடந்த பெப்ரவரி 24 ஆம் திகதி படையெடுத்தது தொடக்கம் ரஷ்யா இதுவரை உக்ரைனின் 10 மிகப்பெரிய நகரங்களில் எதனையும் கைப்பற்றியதில்லை. எனினும் இது 1945 தொடக்கம் ஐரோப்பாவில் இடம்பெற்ற மிகப்பெரிய தாக்குதலாக உள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பு குறித்து பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சகம் நேற்று ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்ட பதிவில், உக்ரைனில் முன்னேறிச் செல்வதில் ரஷ்யப் படைகள் போராடி வருவதாக தெரிவித்துள்ளது.

உக்ரைனால் ஏற்படும் சவால்களை சமாளிக்க ரஷ்ய படைகள் போராடி வருவதாக, அப்பதிவில் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். உக்ரைனிய படைகள் பாலங்களை சேதப்படுத்தியிருப்பது, "ரஷ்யா முன்னேறிச் செல்வதை தடுப்பதில் முக்கிய பங்கு வகித்ததாக" அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். "உக்ரைனிய ஆயுதப் படைகளின் தந்திரங்கள், ரஷ்யாவின் சூழ்ச்சியின் பற்றாக்குறையை திறமையாகப் பயன்படுத்திக் கொண்டன, ரஷ்ய முன்னேற்றத்தை விரக்தியடையச் செய்தன மற்றும் ரஷ்யப் படைகளுக்கு பெரும் இழப்பை ஏற்படுத்துகின்றன" என அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

உக்ரைனில் இருந்து வெளியேறியோர் எண்ணிக்கை தற்போது 3 மில்லியனைத் தாண்டி இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. அண்டை நாடான போலந்தில் மாத்திரம் 1.8 மில்லியன் பேர் அடைக்கலம் பெற்றுள்ளனர்.

ரஷ்ய படைக்கு எதிராக உக்ரைன் இராணுவ வீரர்களும் கடுமையாக போரிட்டு வருகின்றனர். இதனால் ரஷ்ய படை தலைநகர் கியேவுக்குள் முழு பலத்துடன் செல்ல முடியாமல் திணறி வருகிறது. இதனால் சில நாட்களாகவே கியேவ் நகரில் தாக்குதல் கடுமையாக்கப்பட்டு இருக்கின்றன. அங்கு சரமாரியாக ஏவுகணை, வான்தாக்குதல்கள் நடத்தப்பட்டது.

கீயேவ் நகரை 3 பகுதிகளில் இருந்தும் சுற்றிவளைத்துள்ள ரஷிய படை, பெரும் தாக்குதலை நடத்தலாம் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டதால் அங்கு நேற்று 35 மணி நேர ஊரடங்கு உத்தரவு போடப்பட்டது. இதற்கிடையே கீயேவ் நகரில் நள்ளிரவில் ரஷ்ய படையின் தாக்குதல் தொடர்ந்து நீடித்தது. ஏவுகணை வீச்சு, வான் வழி தாக்குதல் நீடிந்தபடியே இருந்தது. இதனால் அங்கு சிக்கியுள்ள மக்கள், பதுங்கு குழிகள், கட்டிடங்களின் அடித்தளங்களில் பதுங்கி இருந்தனர்.

# ஐரோப்பிய தலைவர்கள் உக்ரைனுக்குப் பயணம்



ரஷ்யாவின் தாக்குதலுக்கு இலக்காகி இருக்கும் உக்ரைன் தலைநகர் கியேவுக்கு போலந்தில் இருந்து ரயில் மூலம் ஆபத்தான பயணத்தை மேற்கொண்ட மூன்று ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களது தைரியத்தை உக்ரைன் பாராட்டியுள்ளது. போலந்து, ஸ்லோவேனியா மற்றும் செக் குடியரசின் பிரதமர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை கியேவ் நகரில் உக்ரைன் ஜனாதிபதி வொலொடிமிர் செலன்ஸ்கியை சந்தித்தனர். இதன்போது உக்ரைனியர்கள் தனியாக இல்லை என்று செக் தலைவர் வலியுறுத்தியுள்ளார். ரஷ்ய படையெடுப்புக்குப் பின்னர் மேற்கத்திய தலைவர்கள் உக்ரைனுக்கு பயணித்திருப்பது இது முதல் முறையாகும்.

# ஐரோப்பிய ஒன்றியத்தால் ரஷ்யாவுக்கு புதிய தடை



ஐரோப்பிய ஒன்றியம் ரஷ்ய அரசாங்கத்துக்கு எதிராக 4ஆம் கட்டத் தடைகளை அறிவித்துள்ளது.

ரஷ்யாவின் எரிசக்தித் துறையில் முதலீடு செய்வது தடை செய்யப்படும். அத்துடன் ரஷ்யாவிலிருந்து உருக்கு பொருட்களை இறக்குமதி செய்வதும், ரஷ்யாவுக்கு சொகுசுப் பொருட்களை ஏற்றுமதி செய்வதும் தடைசெய்யப்படும்.

அதிக செல்வாக்குக் கொண்ட மேலும் கூடுதலான ரஷ்யத் தொழிலதிபர்களின் சொத்துகளும் முடக்கப்படவுள்ளன.

பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவுகள் தங்கள் சொந்தப் பொருளாதாரத்தின் மீது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை மதிப்பிட ஐரோப்பிய ஒன்றிய நிதியமைச்சர்கள் பிரசல்ஸில் கூடியுள்ளனர்.

# வடக்கு கிழக்கு பகுதிகளில் பண்டிகைக்கால பொருள் கொள்வனவை ஊக்குவித்துள்ள கொமர்ஷல் வங்கி



பண்டிகைக் காலத்தை முன்னிட்டு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கிரடிட் மற்றும் டெபிட் கார்ட் பாவனையாளர்களுக்கு 30 வீதம் விஷேட கழிவை அறிமுகம் செய்துள்ளதாக கொமர்ஷல் வங்கி அறிவித்துள்ளது.

இதற்கென இந்தப் பிரதேசங்களில் உள்ள 25 வர்த்தக நிறுவனங்களுடன் வங்கி இணைந்துள்ளது. துணி வகைகள், காலணிகள், பேக்குகள் வீட்டுப் பாவனைப் பொருள்கள், அன்றாட நாகரிகப் பொருள்கள் மற்றும் உணவகங்களில் இந்தக் கழிவுகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். கிரடிட் மற்றும் டெபிட் கார்ட்கள் மீதான இந்தக் கழிவுகள் மார்ச் மாதம் 20ம் திகதி முதல் ஆரம்பமாகும். கொமர்ஷல் வங்கி இணைந்துள்ள ஒவ்வொரு வர்த்தக நிலையங்களிலும் குறிப்பிட்ட தினங்களில் அல்லது குறிப்பிட்ட காலப் பகுதியில் கார்ட் பாவனையாளர்கள் இந்தக் கழிவுகளைப் பெற முடியும். 2022 ஏப்ரல் 25 வரை இந்தக் கழிவுகள் செல்லுபடியாகும் என வங்கி மேலும் அறிவித்துள்ளது.

கொமர்ஷல் வங்கி கார்ட் பாவனையாளர்களுக்கு கழிவுகளை வழங்க இணங்கியுள்ள குறிப்பிட்ட வர்த்தக நிறுவனங்களில் துணி வகைகள், நவநாகரிகப் பொருள்கள் மற்றும் உதிரிப் பொருள்கள் சில்லறை விற்பனையின் போது கிரடிட் கார்ட்டுகளுக்கு கழிவு வழங்கப்படும்.

அப்துல்லா மென்ஸ் வெயார் (கல்முனை) அருண் டெக்ஸ் டைல்ஸ் அன்ட் பென்ஸி பெலஸ், பரகத் டெக்ஸ், பிலால் எம்போரியம், பிலால் கிட்ஸ், புளுலெகூன், ஈஸ்ட் ஸ்டார் ஹெண்லூம்ஸ், ஈவாஷா கிட்ஸ் வேர்ள்ட், பெஷன் போய்ஸ், இண்டியன் கோர்னர் (காத்தான் குடி), கஜனி ஷூபெலஸ், கட்டியானி டெக்ஸ்டைல்ஸ், குமரன் டெக்ஸ்டைல்ஸ், மெக் புட், மலர் டிரேடர்ஸ், மீமாஸ் (மட்டக்களப்பு திருகோணமலை மற்றும் வவுனியா) நிலாம், றஹ்மத், சூசிற்றி, ஸ்டார் பெஷன், சமர் குளவ்ட்ஸ், அன்லிமிட் மற்றும் வைட் ஸ்டோன் ஆகிய நிறுவனங்களிலேயே இந்தக் கழிவுச் சலுகைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

## தினகரன் வர்த்தக உலா



சுயதொழில் முயற்சி மற்றும் சிறுகைத்தொழில் மகளிர் அமைப்பு 5வது முறையாகவும் தமது உற்பத்திப் பொருட்கள் கொண்டதொரு கண்காட்சியினையும் விற்பனையும் அண்மையில் கிருலப்பனையில் உள்ள கிரீன் காடனில் நடத்தியது. இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக 2220ஆம் ஆண்டின் இலங்கையின் திருமதி உலக அழகு ராணி கரிலோயின் ஜூரியும் கௌரவ அதிதியாக மரியம் ஹாசிம் உமரும் கலந்து கொண்டு இக் கண்காட்சியைத் திறந்து வைத்தார்கள். கொழும்பு மகளிர் சிறுகைத்தொழில் உற்பத்தியாளர் அமைப்பின் பிரதம நிறைவேற்று அதிகாரி திருமதி நாசியா யாக்ஹூப் இவ் ஏற்பாட்டினை ஏற்பாடு செய்திருந்தார். (அஷ்ரப் ஏ சமத்)

# SLT-MOBITEL இனால் மெருகேற்றப்பட்ட Kimaki Adventure Game அறிமுகம்



*SLTMOBITEL*, அண்மையில் மொபைல் அடிப்படையிலான *adventure game* ஆன *Kimaki* ஐ அறிமுகம் செய்திருந்தது.

புதிய உள்ளம்சங்களைக் கொண்டமைந்த இந்த *game* இனூடாக விளையாடுவோருக்கு அதிகளவு விறுவிறுப்பும், இலவச டேட்டா மற்றும் இதர வியத்தகு பரிசுகளையும் வெற்றியீட்டுவதற்கான வாய்ப்புகளும் வழங்கப்படுகின்றது. இந்த *game* அறிமுக நிகழ்வு ஸ்ரீ லங்கா ரெலிகொம் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜனக அபேசிங்க, இலங்கையின் முன்னணி டிஜிட்டல் முகவர் நிறுவனமான *Arimac Lanka (Pvt) Ltd.* இன் நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் *SLTMOBITEL* இன் சிரேஷ்ட முகாமைத்துவ அங்கத்தவர்களின் பங்கேற்புடன் இடம்பெற்றது.

2020 ஆம் ஆண்டில் *Adventures of Kimaki* முதன் முதலில் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. தனது குடும்பத்தாரையும் நண்பர்களையும் தேடியறியும் முயற்சியில் அபார சக்தி நிறைந்த கோலின் உதவியுடன் இந்த *game* வடிவமைக்கப்பட்டிருந்தது.

சகல விளையாட்டாளர்களுக்கும் விளையாடக்கூடிய வகையில் *https://slt.lk/esports/kimaki*என்பதில் பதிவேற்றப்பட்டுள்ளது.

# HNB Finance டிப்ளோமா பெற்ற முகாமையாளர்களுக்கு அங்கீகாரம்



HNB FINANCE PLC, வணிக ஆலோசனைக்கான முகாமைத்துவ மேம்பாட்டு டிப்ளோமாவை வெற்றிகரமாக முடித்த அதன் முகாமையாளர்களுக்கு அண்மையில் சான்றிதழ்களை வழங்கியது. இந்த நிகழ்வில் பிரதமஅதிதியாக முகாமைத்துவப் பணிப்பாளரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சமிந்த பிரபாத் மற்றும் HNBFinance இன் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# பொலிரோ சிட்டி பிக்-அப்பை அறிமுகப்படுத்தியுள்ள மஹிந்திரா

மஹிந்திரா அனைத்து புதிய பொலிரோ சிட்டி பிக்அப் மூலம் உள்நாட்டில் கூடிய வாகன வரம்பை விரிவுபடுத்தி இலங்கையில் வாகன உற்பத்தியில் தனது நிலைப்பாட்டை உறுதிப்படுத்தியுள்ளது.

மஹிந்திரா & மஹிந்திரா லிமிடெட் (எம்&எம் லிமிடெட்) மற்றும் ஐடியல் குழுமத்தின் முழுமையான துணை நிறுவனமான ஐடியல் மோட்டார்ஸ், இலங்கையில் புதிய பொலிரோ சிட்டி பிக்அப் விநியோகத்தை ஆரம்பித்துள்ளது.

மஹிந்திராவின் முதல் சிங்கிள் கேப் பிக்அப் ஆனது வெலிபென்னவில் உள்ள மஹிந்திரா ஐடியல் லங்காஸ் ஆட்டோமோட்டிவ் அசெம்பிளி ஆலையில் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. பொலேரோ சிட்டி பிக்அப்பை பத்தரமுல்லை வோட்டர்ஸ் எட்ஜில் நடைபெற்ற நிகழ்வின்போது முதல் தொகுதி வாகனங்கள் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டன.

பொலிரோ சிட்டி பிக்அப் உற்பத்தியை மேலும் வலுப்படுத்தி வருகிறது. தொற்றுநோய்க்கு மத்தியில் படிப்படியாக சந்தை திறக்கப்படுவதால், வணிக வாகன வகைகளின் தேவை அதிகரித்து வருகிறது. மஹிந்திரா, சிங்கிள் கேப் பிக்கப்களுக்கான சந்தைத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக இலங்கை ஆலையில் அதன் உற்பத்தித் திறனை அதிகரித்து வருவதாக வாகனப்பிரிவின் பிரதம நிறைவேற்று அதிகாரியான *Veejay Nakra* தெரிவித்தார்.



தினகரன் THINAKARAN

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

## SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA (SEUSL)

### INVITATION FOR BIDS (IFB)

***SUPPLY, INSTALLATION, COMMISSIONING AND MAINTENANCE OF DESKTOP COMPUTERS***

**(SEU/SS//NCB/2022/01)**

1. The **Chairman, Department Procurement Committee (Major)** of South Eastern University of Sri Lanka invites sealed bids from eligible and qualified bidders for Supply, Installation, Commissioning and Maintenance of Desktop Computers for the use of South Eastern University of Sri Lanka.

| Items No. | Category | Qty | Bid Bond (Rs.) |
|---|---|---|---|
| 01 | Desktop Computer i7 (Type I ) | 70 Nos. | 500,000.00 |
| 02 | Desktop Computer i5 (Type II ) | 194 Nos. | |

2. Bidding will be conducted through **National Competitive Bidding.**
3. Interested eligible bidders may obtain further information from the Assistant Bursar (Telephone Nos: 067-2255178 / 067-2255001), South Eastern University of Sri Lanka, University Park, Oluvil # 32360 from 9.00 a.m. to 2.00 pm up to **30.03.2022** (Weekdays only).
4. A complete set of bidding documents in English Language may be purchased by interested bidders on submission of a written application by bidder himself or by bidders' representatives to the address above and upon payment of a non-refundable fee of LKR 5,000/= per procurement document, from 9.00 am to 3.00 pm up to **29.03.2022**. The mode of payment shall be either in cash or bank draft in favor of "Bursar, South Eastern University of Sri Lanka". Bidders can also download the Bidding documents from the University Website i.e. **www.seu.ac.lk**. Those who are obtaining bidding documents from the University Website should submit the completed documents along with a Bank Draft drawn in favor of the "Bursar, South Eastern University of Sri Lanka" for Rs. 5000/- as non-refundable fee or by paying cash at **the Shroff Counter** of SEUSL. The documents may be purchased up to **29.03.2022.**
5. Sealed Bids should be marked **"Tender for Supply, Installation, Commissioning and Maintenance of Desktop Computers for South Eastern University of Sri Lanka"** on the left-hand corner of the envelope and delivered to the **Chairman, Department Procurement Committee (Major), South Eastern University of Sri Lanka, University Park, Oluvil # 32360** or place in the tender box kept at the office of the Vice Chancellor, South Eastern University of Sri Lanka, at or before **2.00 p.m, 30.03.2022.** All bids must be accompanied by **bid security as stated in paragraph 01 above.** Bids will be opened in the presence of the bidders' representatives who choose to attend in person **at 2.30 p.m. on 30.03.2022** at the Boardroom, 1st Floor, Administrative Building, South Eastern University of Sri Lanka, University Park, Oluvil # 32360. Late bids will be rejected.

**Chairman,**
**Department Procurement Committee (Major),**
**South Eastern University of Sri Lanka,**
**University Park, Oluvil #32360.** **17.03.2022**

## மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம் (PGIM)

## கொழும்பு பல்கலைக்கழகம்

### பெறுகை அறிவித்தல்

### சுத்திகரிப்பு மற்றும் தூய்மையாக்கல் சேவைகளை வழங்கல்

**விலைமனு இல. 01. PGIM பிரதான இடப்பரப்பிற்கான சுத்திகரிப்பு மற்றும் தூய்மையாக்கல் (PGIM/GA/CS/2022/01)**

**விலைமனு இல. 02. PGIM கல்விசார் நிலையத்திற்கான சுத்திகரிப்பு மற்றும் தூய்மையாக்கல் (PGIM/GA/CS/2022/02)**

**2022.03.31** ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணி வரையும் சுத்திகரிப்பு மற்றும் தூய்மையாக்கல் சேவைகளை வழங்குவதற்காக கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை 2022.03.18 ஆம் திகதியிலிருந்து 2022.03.30 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் 011-2688650 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக, **saradmin@pgim.cmb.ac.lk** என்ற மின்னஞ்சலூடாகவும் PGIM இன் பொது நிருவாகத்திற்கான சிரேஷ்ட உதவி பதிவாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

2022.03.18 ஆம் திகதியிலிருந்து 2022.03.30 ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.30 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் ஒரு தொகுதி ஆவணத்திற்கு மீளளிக்கப்படாத கட்டணமாக 2,500 ரூபாவைச் செலுத்திய பின்னர், பணக்கொடுப்பனவு பற்றுச்சீட்டுடன் பொது நிருவாகத்திற்கான சிரேஷ்ட பதிவாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவானது ரொக்கப் பணத்தில் கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவன சிறாப்பரிடம் செலுத்தப்படல் வேண்டும்.

அனைத்து விலைமனுக்களும் 60,000 ரூபா பெறுமதியுள்ள விலைமனு இல. 01 இற்கான விலைமனுப்பிணையாகவும் 90,000 ரூபா பெறுமதியான விலைமனுப்பிணை இல. 02 இற்கான விலைமனுப்பிணையாகவும் இணைக்கப்படல் வேண்டும். விலைமனுப்பிணையானது இலங்கை வங்கி பொரளை மேல் தரக் கிளை 193413 என்ற PGIM இன் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கப்பட்டு விலைமனுக்கோரல் ஆவணத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் இரு தபாலுறைகளின் இடது பக்க மேல் மூலையில் **'Provision of Cleaning & Janitorial Services for PGIM Main Premises – Bid No. 01(PGIM/GA/CS/2022/01)" or "Cleaning & Janitorial Services for PGIM Academic Center – Bid No. 02(PGIM/GA/CS/2022/02"** என குறிக்கப்பட்டு 2022.03.31 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கொழும்பு-07, பேராசிரியர் நந்ததாச கோதாகொட மாவத்தை, 160 ஆம் இலக்கத்திலுள்ள மருத்துவ பட்டப்படிப்பு நிறுவனம் பொது நிருவாக கிளையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கள் 2022.03.31 ஆம் திகதியன்று பி.ப.2.30 மணிக்கு விலைமனுவை திறக்கும் நிகழ்வில் சமுகமளிக்க விரும்பும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவன பொது நிருவாக கிளையில் திறக்கப்படும். தாமதமானதும் பூர்த்தி செய்யப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மருத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம்,**
**கொழும்பு பல்கலைக்கழகம்,**
**இல. 160, பேராசிரியர் நந்ததாச கோதாகொட மாவத்தை,**
**கொழும்பு-07.**
**17.03.2022.**

## விலைமனு அழைத்தல்

### விவசாயத் திணைக்களம்

விவசாயத் திணைக்களத்தின் விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்தின் பிராந்திய அலகுகளிற்குப் பின்வரும் வழங்கல்களிற்காகத் தேசிய விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிட்ட விலைமனுக் கோரப்படுகின்றது.

| A | B | C | D | | | E |
|---|---|---|---|---|---|---|
| தொடர் இலக்கம் | கரும விபரம் | ஒப்பந்த இலக்கம் | வைப்புச் செய்யப்பட வேண்டிய பிணையம் மற்றும் செல்லுபடிக்காலம் | | | விலைமனுப் படிவக் கட்டணம் ரூபா |
| | | | காசாகச் செலுத்துவதாயின் | வங்கி வரைவு ஒன்றெனின் | பிணையம் செல்லுபடிக் காலம் | |
| 01 | Four Wheel Tractor Trailer 09 கொள்வனவு | SPD/2/5/4/08(2022) | 63,000.00 | 126,000.00 | 2022.07.24 | 2500.00 |
| 02 | Inter-Cultivator 22 கொள்வனவு | SPD/2/5/4/19(2022) | 60,500.00 | 121,000.00 | 2022.07.24 | 2500.00 |
| 03 | Tool Trolley 05 கொள்வனவு | SPD/2/5/4/25(2022) | 22,500.00 | 45,000.00 | 2022.07.10 | 1500.00 |

இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள், ஒவ்வொரு உருப்படிக்குமாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட விலைமனுப்படிவங்களைப் பயன்படுத்தி, விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன், விவசாயத் திணைக்களத்தின் சிறாப்பருக்கு மீளளிக்கப்படாத மேற்படி 'E' நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச் சீட்டை விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்தின் நிருவாக அலுவலருக்குச் சமர்ப்பித்து, 2022.03.18 முதல் 2022.04.07 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை விலைமனுப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர் இலக்கம் 01 மற்றும் 02 இற்கான விலைமனுதாரர்கள். 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ், பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்யப்பெற்றிருத்தல் வேண்டுமென்பதுடன், அதன் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று விலைமனுக்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனு அறிவுறுத்தல்களிற்கமைவாகத் தயாரிக்கப்பட்டு முத்திரையிடப்பட்ட அனைத்து விலைமனுக்களும், 'தலைவர், பிராந்தியப் பெறுகைக் குழு, விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையம், விவசாயத் திணைக்களம், பேராதெனிய, என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.

அல்லது மேற்படி முகவரியிலுள்ள, பெறுகைப் பெட்டியிற் சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

அனைத்து விலைமனுதாரர்களும் D நிரலின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, பிணைத் தொகையை வைப்புச் செய்தல் வேண்டுமென்பதுடன், வங்கி வரைவு ஒன்றாக பிணைத் தொகை வைப்புச் செய்யப்படுவதாயின் அது, இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகாரம் பெற்ற வணிக வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

2022.04.08 அன்று முற்பகல் 10.30 இற்கு விலைமனுக்கள் மூடப்பட்டு உடனடியாகவே அவை திறக்கப்படும் அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் எழுத்துருவ அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

**தலைவர், பிராந்தியப் பெறுகைக் குழு,**
**விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையம்,**
**விவசாயத் திணைக்களம்.**
**பேராதெனிய.**
**2022.03.17**
**081-2388122**

## விலைமனு அழைத்தல்

### விவசாயத் திணைக்களம்

விவசாயத் திணைக்களத்தின், விதை மற்றும் நடுகை பொருட்கள் அபிவிருத்தி நிலையத்திற்கு கீழக்காணப்படும் வழங்கல்களிற்காக தேசிய விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| A | B | C | D | | | E |
|---|---|---|---|---|---|---|
| | | | வைப்புச் செய்யப்பட வேண்டிய விலைமனுப் பிணையம் மற்றும் விலைமனுச் செல்லுபடிக் காலம் | | | விலைமனுப் படிவக் கட்டணம் ரூபா |
| | | | காசாக எனின் | வங்கி வரைவு ஒன்றெனில் | பிணையம் செல்லுபடிக் காலம் | |
| 01 | விசிரும் நீர்ப் பாசணத் தொகுதியொன்றை நிறுவுதல் அரச விதை உற்பத்தி பண்ணை பொலன்னறுவை | கு/தெ.ப/2/3/2/2022 (04) | 146,200/- | 292,400/- | 2022.08.07 | 8,000.00 |
| 02 | விசிரும் நீர்ப் பாசணத் தொகுதியொன்றை நிறுவுதல் அரச விதை உற்பத்தி பண்ணை மஹஇலுப்பள்ளம | கு/தெ.ப/2/3/2/2022 (03) | 191,000/- | 382,000/- | 2022.08.07 | 10,000.00 |
| 03 | விசிரும் நீர்ப் பாசணத் தொகுதியொன்றை நிறுவுதல் அரச விதை உற்பத்தி பண்ணை அளுத்கம | கு/தெ.ப/2/3/2/2022 (02) | 421,200/- | 842,400/- | 2022.08.07 | 15,000.00 |

இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள், மேற்படி ஒவ்வொரு உருப்படிக்குமான பெற்றுக்கொள்ளப்பட்ட படிவங்களைப் பயன்படுத்தி தனித்தனியாக விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் விவசாயத்திணைக்களத்தின் சிறாப்பருக்கு மீளளிக்கப்படாத மேற்படி E நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தை செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை, விதைகள் மற்றும் நடகைப் பொருட்கள் அபிவிருத்தி மத்திய நிலையத்தின் நிருவாக அலுவலருக்குச் சமர்ப்பித்து, 2022.03.18 முதல் 2022.04.07 வரை வார வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரை விலைமனுப்படிவத் தொகுதியொன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்தில் குறித்த விலைமனுதாரர்கள் பதிவுகளை மேற்கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் அப்பதிவின் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழொன்று விலைமனுக்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனு அறிவுறுத்தல்களிற்கமைவாக தயாரிக்கப்பட்டு முத்திரையிடப்பட்ட அனைத்து விலைமனுக்களும், "தலைவர், திணைக்கள பெறுகைக்குழு, தாபனக்கிளை 02, விவசாயத்திணைக்களம், பேராதெனிய" என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லது மேற்படி முகவரியில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

அனைத்து விலைமனுதாரர்களும், மேற்படி "D" நிரலின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிணைத்தொகையை வைப்புச் செய்தல் வேண்டும்மென்பதுடன், வங்கி வரைவு ஒன்றின் மூலம் பிணை வைப்பு செய்வதாயின், அது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

2022.04.08 அன்று மு.ப.10.30 இற்கு விலைமனுக்கள் மூடப்பட்டு உடனடியாகவே அவை திறக்கப்படும். அவ்வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் எழுத்துருவ அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**விவசாயத் திணைக்களம்,**
**பேராதெனிய.**
**2022.03.17**
**081-2388331**

Best way to fulfil your Future Dreams
E-mail your advertisements to, classified@lakehouse.lk
SUNDAY OBSERVER Marriage Proposals
Decades of Trusted Service
Piyumi- 0112 429 383 Ramani - 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

மின் பாவனையாளர்களுக்கு சிறந்த விநியோகம் மற்றும் சேவையினை பெற்றுக்கொடுக்கும் நோக்குடன், இலங்கை மின்சார சபை கீழ் காட்டப்பட்டுள்ள பிரதேசங்களில் மின்சார தொகுதி பராமரிப்பு, புனரமைப்பு அல்லது கட்டுமானங்களை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது. இதற்காக அப்பிரதேசங்களில் தற்காலிக மின்வெட்டு கீழ் காட்டப்பட்டுள்ள நாட்களில் / நேரங்களில் இடம்பெறும். இதற்காக வாடிக்கையாளருக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்காக எமது வருத்தத்தினை தெரிவித்துக்கொள்வதோடு திட்டமிட்ட திருத்தங்கள் நிறைவு பெற்றவுடன் மீண்டும் விநியோகத்தினை வழமைபோல் மேற்கொள்ள இலங்கை மின்சார சபை நடவடிக்கை மேற்கொள்ளும்.

# மத்திய மாகாணம் 1 – மார்ச் 2022

## மின் பொறியியலாளர் பிரதேசம் : தம்புள்ளை

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : தம்புள்ளை

2022-03-19 09:00-17:00
**மொத்த :** தம்புலுஓயா அரிசி ஆலை, கே.டி.சீ அரிசி தயாரிப்பாளர்கள், நிஷ்ம் (ஜயவர்தன) அரிசி ஆலை, தில்ருக்ஷி பண்ணை
**விநியோகம் :** பிந்தாபர திட்டம் - தம்புள்ள, புவக் அத்தவாலா - III, புவகத்தவல -1, கிரிகொல்ல வேஹென்பிடிய, மடமுல்ல திட்டம், கிராலகொல்ல எலங்கொடை வீதி, புவகத்தவல - 2

2022-03-30 09:00-17:00
**மொத்த :** கே.டி.சீ அரிசி தயாரிப்பாளர்கள், தம்புலுஓயா அரிசி ஆலை, தில்ருக்ஷி பண்ணை, நிஷ்ம் (ஜயவர்தன) அரிசி ஆலை
**விநியோகம் :** மடமுல்ல திட்டம், புவக் அத்தவாலா - III, பிந்தாபர திட்டம் - தம்புள்ள, புவகத்தவல - 2, கிரிகொல்ல வேஹென்பிடிய, கிராலகொல்ல எலங்கொடை வீதி, புவகத்தவல -1

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : கலேவெல

2022-03-22 09:00-17:00
**விநியோகம் :** பிபி-குறுக்கீடு

2022-03-25 09:00-17:00
**மொத்த :** எம்.எஸ்.சிகன்
**விநியோகம் :** வாககோட்டே ஆர்.இ., டயலொக் டவர் லெனாவாலா, மேடபெட்டா, வாககோட்டே - படலாயாய, புஞ்சி ரம்போடகல்லா, வாககோட்டே சர்ச் (கல்லறைக்கு அருகில்), சியம்பலககவேலா ஆர்.இ.

2022-03-31 09:00-17:00
**விநியோகம் :** மடிபோலா ஆர்.இ.

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : நாவுலை

2022-03-16 09:00-12:00
**விநியோகம் :** பிபி-குறுக்கீடு

## மின் பொறியியலாளர் பிரதேசம் : கலகெதர

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : கத்தராலியட்டை

2022-03-23 09:00-17:00
**மொத்த :** ரசிகா பிஸ்கட், கடுரட றப்பர் தொழிற்சாலை - கலகெதர
**விநியோகம் :** ஆல்டீனியா ஜே.சி., எலொடுவ, பொல்வட்டெ மகா மாவதகம

2022-03-31 09:00-17:00
**மொத்த :** கடுரட றப்பர் தொழிற்சாலை - கலகெதர, ரசிகா பிஸ்கட்
**விநியோகம் :** ஆல்டீனியா ஜே.சி., பொல்வட்டெ மகா மாவதகம , எலொடுவ

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : நுகவெலை

2022-03-18 09:00-17:00
**மொத்த :** சீ.டீ.பீ நுகவெல
**விநியோகம் :** எடருதென்ன - 2, படம்பே

2022-03-21 08:30-17:00
**விநியோகம் :** கோரகதெனிய

2022-03-22 09:00-17:00
**விநியோகம் :** குலுகம்மன

2022-03-28 09:00-17:00
**விநியோகம் :** சிங்கஹென

2022-03-30 09:00-17:00
**மொத்த :** சீ.டீ.பீ நுகவெல
**விநியோகம் :** எடருதென்ன - 2, படம்பே

2022-03-31 08:30-17:00
**விநியோகம் :** கோரகதெனிய

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : பூஜாப்பிட்டிய

2022-03-18 09:00-17:00
**விநியோகம் :** அன்கும்புர ii (எஹலமுல்ல), அன்கும்புர iii (எகோதமுல்ல), மிரிஸ்ஸல அம்பமேதென்ன, மிரிஸ்ஸல (தேன்ன கம்மத்த), மிரிஸ்ஸல செள ஆலை

2022-03-19 09:00-17:00
**விநியோகம் :** ஒவிஸ்ஸ I, ஒவிஸ்ஸ ii (பூஸ்ட் டப்லியூவ் / பீ அருகில்)

## மின் பொறியியலாளர் பிரதேசம் : கட்டுகஸ்தோட்டை

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : அக்குரணை

2022-03-22 09:00-17:00
**விநியோகம் :** 8 வது மைல் இடுகை (மொராட்டு), அஸ்வேதுமா

2022-03-23 08:30-17:00
**விநியோகம் :** undefined, undefined, undefined, undefined, துனுவிலா வடக்கு பெஹொண்டண்ட் வாட்டா, undefined, குருந்தேனியா, undefined, துனுவிலா - i

2022-03-29 09:00-17:00
**மொத்த மற்றும் விநியோகம் :**
**விநியோகம் :** அலவதகுட ii (தபால் நிலையம் அருகில்), அகுரான பிரதேசியாசபா, அலவதுகொட - நான் (எம்.பி.சி.எஸ்), அலவதகுட (பாலகடுவா),

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : மடொல்கலை

2022-03-16 08:30-17:00
**மொத்த :** பெடெகம தேயிலை தொழிற்சாலை, ரக்சாவா தேயிலை தொழிற்சாலை, உனானகலா தேயிலை தொழிற்சாலை, ஹடலே தேயிலை தொழிற்சாலை, பெங்குயின் (குண்டன்மால்ஸ்) ஆடை
**விநியோகம் :** மதுல்கேலே பஜார், மேரிலாந்து காலனி, அப்பல்லபெட்டா, ஹடேல் அப்பர் டிவிசன் (காலனி), பன்வில அங்கம்மண்ணா கல்பிஹில்லா வட்டா, மொராஹெலா, undefined, undefined, அரட்டனா ஆர் / இ, அரட்டனா நீர் பம்ப், ஹுன்னஸ்கிரியா கவதன்னா மலை, பன்வில, ஹடேல் மேல் பிரிவு, உனானகலா (மடுல்கேலே)

2022-03-18 08:00-17:00
**விநியோகம் :** துனிஸ்கலா ஆர் / இ

2022-03-22 08:30-17:00
**மொத்த :** அலகோல் தேயிலை தொழிற்சாலை, , எடிசலாட் டவர் மேரிலாந்து, கோமரே தேயிலை தொழிற்சாலை, ஹகலா தேயிலை தொழிற்சாலை, லெபனான் தேயிலை தொழிற்சாலை
**விநியோகம் :** கட்டுல் ஓயா வட்டா, ரத்னதேனா, தவலந்தென்னா, கலாபோடா, கோமரே லோயர் காலனி, தவலந்தென்னா ரத்னகிரிவத்த, கூமராய ஆர் / இ--, ஹுலுங்கா பஜார், ஹகலா எஸ்டேட்

2022-03-26 09:00-16:00
**மொத்த :** பெடெகம தேயிலை தொழிற்சாலை

2022-03-30 08:30-17:00
**மொத்த :** ரக்சாவா தேயிலை தொழிற்சாலை, பெங்குயின் (குண்டன்மால்ஸ்) ஆடை, ஹடலே தேயிலை தொழிற்சாலை, உனானகலா தேயிலை தொழிற்சாலை, பெடெகம தேயிலை தொழிற்சாலை
**விநியோகம் :** ஹடேல் அப்பர் டிவிசன் (காலனி), பன்வில அங்கம்மண்ணா கல்பிஹில்லா வட்டா, ஹடேல் மேல் பிரிவு, மேரிலாந்து காலனி, undefined, அரட்டனா நீர் பம்ப், ஹுன்னஸ்கிரியா கவதன்னா மலை, மொராஹெலா, அரட்டனா ஆர் / இ, undefined, பன்வில, உனானகலா (மடுல்கேலே), அப்பல்லபெட்டா, மதுல்கேலே பஜார்,

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : வத்தேகமை

2022-03-25 09:00-17:00
**மொத்த :** கண்டி கடல் உணவு
**விநியோகம் :** நபனா கல்லறை, நபனா ஆர்.இ (பட்டியாதென்னா ஜே.சி)

## மின் பொறியியலாளர் பிரதேசம் : குண்டசாலை

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : தும்பறை

2022-03-19 09:00-17:00
**மொத்த :** நித்துலேமடா, நித்துலேமடா பார்கெட்டா வெல்லா, சேனாரத்வேலா
**மொத்த மற்றும் விநியோகம் :** மாபெரியடென்னா அலுவலகம்
**விநியோகம் :** குழிப்பந்தாட்ட சங்கம், ராஜாவெல்லா ஹோல்டிங்ஸ், இராணுவ முகாம் மாபெரியாடென்னா, மாபெரியாடென்னா - ii, ராஜவெல்லா கோல்ஃப்

2022-03-20 08:00-17:00
**மொத்த :** சி.என் - போடி, கிரீடம் உலோக தொழில்கள், செயின்ட் அந்தெனீஸ் (பிரைவேட்) லிமிடெட்., உச்சிஹாச்சி, BOI - i (மேக் ஆட்டோவின் முன், திரு. நந்தசேன, ராயல் பேக் தொழில்துறை பெஸ்டேட், நீர் பம்ப் (குளிர்). I.D.B., உலகளாவிய நுழைவு. (பிரைவேட்.), BOI - ii, எல்ஸ்டெல், ஜே சீ உணவு பதப்படுத்துதல் (பிவிடி) லிமிடெட், லிஸ்லி கட்டிடம், Supreme SAT, forEver (பிரைவேட்) லிமிடெட்., கண்டியன் மேட்ச் கோ. (பிரைவேட்) லிமிடெட்., கேசஹரா மெட்டல், பாலி பிலிம்ஸ் ஐடிபி - ii, ரிச்சர்ட் பீரிஸ், AARA இண்டஸ்ட்ரீஸ் (பிரைவேட்) லிமிடெட்., செலிலோஜன் லங்கா, கெலுன் வாழ்க்கை அறிவியல், நீர் சுத்திகரிப்பு பாலகொல்லா, மத்திய ஃப்ளெக்ஸி பேக், புதிய ஜீவா இண்டட்ரீஸ், நோபல் தயாரிப்பு, சுவரேஜ் (BOI 3) நுழைவாயிலுக்கு அருகில், மாறும், INDO SAIM Industriyas Pvt.Ltd, கண்டி பிளாஸ்டிக், பிளாஸ்டி ஷெல், நிழல் கோடு, தாரா பேக் SC தொழில்நுட்ப மேம்பாடு, கிலோவ் பேக் என்டர்ப்ரிஸ்ஸ், லங்கா உணவு பொதி, ருஹுனு
**விநியோகம் :** இசபெலா, NWB & DB பம்ப் ஹவுஸ், டிரினிட்டி பண்ணை, லீனியா ஆடை, அம்வ் தொழிற்சாலை, கிரிக்கெட் ஸ்டேடியம் மைதானம், கிரிக்கெட் ஸ்டேடியம் பிரஸ் பாக்ஸ், எஸ்கிமோ, பிரபுக்கள் அணிய (இனிமேக்), கண்டி ஜவுளி, ஆட்டோ சேவை குண்டசலே, மேக் ஆட்டோ, டாண்டன் - i, ஐடிபி - iii, தொழில்துறை மேம்பாட்டு வாரியம், பாலிசாக்

2022-03-21 08:30-17:00
**மொத்த :** கும்புகண்டுரா சர்ச் ஆர்.டி.

2022-03-26 08:00-17:00
**மொத்த :** மெனிகின்னா ஹோஸ்பியல், எஸ்.பி.எம்.என்.சூரியபண்டார, பால்கேன் 3 கே ஹோல்டிங் - திகனா, டி.என்.எஸ். வையவாசயன்கள், கெங்கல் டவுன், கேஷரா மினரல்ஸ் & கெமிக்கல்ஸ், குண்டசலே பிரதேச சபாவா, மல்லிகா டிரேடிங், விளையாட்டு வளாகம், மூழ்கிய கட்டுமானம், துல்வலவத்தா யுடி டவுன் கிராமம், தேகனா ஓல்ட் டவுன், மல்பனா - ii (10 வது மைல் போஸ்ட்)
**விநியோகம் :** நிககேட்டிய நிலை, ஏசிஎம் டோலமைட், சம்பத் வங்கி -, டி 5 சிறு ஊழியர்கள் ஆர்.டி., டம்மிகா மெட்டல் க்ரஷர், கோமகொட எலமல்போதா, ஜெதவனராம கோயில் (CEB குவாட்டர்களுக்கு அருகில்), பால் வாரியம் (மில்கோ ராஜாவெல்லா), புதிய டவுன் ராஜவெல்லா, ஒருடோட்டா, கண்ணன் & கோ., நிட்டோ டிசைனர், சன் மேட்ச் ராஜவெல்லா (அலுத்வட்டா), அஹஸ்போகுனா - i, அஹஸ்போகுனா - ii, அமிலா நிறுவனங்கள், கெங்கல்லே கொங்கஹவட்டா நிலம், மல்பனா - i, டி 1 (மருத்துவமனை), ஆரலியா எண்டர்பிரைசஸ், டி 2 மகாவேலி அலுவலகம், T6 C.E.B சாமாரி, கண்டி உரங்கள், மெனிகின்னா டவுன், தும்பர வெளியீசிஎஸ்ஸீயத்திற்கு அருகில், தொலைத் தொடர்பு ராஜாவெல்லா, விக்டோரியா ரேஞ்ச் ஆசிய நிதி, பாலகொல்லா கெங்கல்லே ரெயின்போ பூங்கா, கார்கில்ஸ் உணவு நகரம் டெகனா, நுவரா காட், ரத்நாயக்க ரைஸ் மில், சும்மேற் பிஎல்து - 11, டி 3 ஈகோல் தேகனகம - iii

2022-03-28 08:30-17:00
**மொத்த :** நாரன்பனாவா, புலுவேமுடுனா நீர் பம்ப்
**விநியோகம் :** நரம்பன்வா மருத்துவமனை சந்திப்பு, டயலாக் டவர் - நரன்பனாவா

2022-03-28 09:00-17:00
**மொத்த :** தேள்கஸ்லந்த

### வாடிக்கையாளர் சேவை நிலையம் : ஹசலக்க

2022-03-16 08:00-17:00
**மொத்த :** ஜுவலெக்ஸ் அக்ரி (பிரைவேட்) லிமிடெட்., ஸ்ரீமா செங்கற்கள்
